24 மணி நேரமும் உடனுக்குடன்
செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30ரூபா

சுபர் 34 கதிர் 257 ஆடி 28 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 13 ஓகஸ்ட் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

தமிழ் மக்களின் ஆதரவின்றி கோத்தபாய வெல்லமுடியாது

அடித்துக் கூறுகிறார் சுமந்திரன் எம்.பி.

மட்டக்களப்பு, ஓகஸ்ட் 13

தமிழ் மக்களின் ஆதரவு இன்றி கோத்தபாய ராஜபக்ச வெற்றிபெற முடியாது. இதனால்தான், அவர் தனது முன்னைய நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டுள்ளார். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

21

உண்மையான பௌத்த – சிங்கள தலைவர் சஜித் பிரேமதாசவே

உயிரைப் பணயம் வைத்தேனும் வெல்ல வைப்போம் என்கிறார் ஹரீன்

கொழும்பு, ஓக. 13

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரான அமைச்சர் சஜித் பிரேமதாசவை அரச தலைவராக்குவதே எமது பிரதான நோக்கமாகக் காணப்படுகின்றது. இதற்காக உயிரைக் கொடுத்தேனும் முழு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். இவ்வாறு அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு தெரிவித்து பதுளையில் நேற்று மாலை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு

21

தேர்தலின் பின்னர் கூட்டு அரசு ஐ.தே.கவுடன் கோத்தா 'டீல்'

கொழும்பு ரெலிகிராப் தகவல்

கொழும்பு, ஓக. 13

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கூட்டு அரசு அமைப்பது குறித்த பேச்சுக்களை முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்சவும் அவருக்கு நெருக்கமானவர்களும் ஆரம்பித்துள்ளனர் என்று கொழும்பு ரெலிகிராவ் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாய அறிவிக்கப்பட்டு சில மணி நேரங்களில் இந்த முயற்சி ஆரம்பமாகிவிட்டதாக கொழும்பு ரெலிகி

21

அரச தலைவர் தேர்தலுக்கு முன்னர் மாகாணசபைத் தேர்தலை நடத்தலாமா?

கருத்துக்கேள் பத்திரம் இன்று தாக்கல்: மைத்திரிபால சிறிசேன துரித நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 13

அரச தலைவர் தேர்தலுக்கான பரபரப்புக்கள் தீவிரமாகியுள்ள நிலையில், அந்தத் தேர்தலுக்கு முன்னர் மாகாணசபைத் தேர்தலை நடத்த முடியுமா? என்று உயர் நீதிமன்றத்தின் கருத்தை அறிவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்துள்ளார். சட்டமா

04

மருத்துவ நடவடிக்கைக்காக டில்லிக்குப் பறந்தார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஓக. 13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்தியத் தலைநகர் டில்லிக்கு ஒரு வாரப் பயணமாக நேற்று மாலை புறப்பட்டுச் சென்றார். அவர் தனது மருத்துவத் தேவைக்காகவே இந்தியாவுக்குச் சென்றுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

21

கோத்தாவுக்காக கொளுத்தப்பட்ட வெடிகளால் தாவடியில் குழப்பம்

யாழ்ப்பாணம், ஓக. 13

அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ச அறிவிக்கப்பட்டதையடுத்து, தாவடிச் சந்திப் பகுதியில் வெடி கொளுத்தப்பட்டது. போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கின்றது என்று தெரிவித்து வெடி கொளுத்திய வர்களுடன் பொதுமக்கள் முரண்பட்டுள்ளனர். இதனால் அந்தப் பகுதியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

21

முதுகெலும்புள்ளவரை வேட்பாளராக பிரேரியுங்கள்

சஜித் முன்பாக ரணில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 13

முதுகெலும்புள்ள வேட்பாளர் ஒருவரைப் பிரேரிக்குமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அனைவருக்கும் நிழல் திட்டத்தின் கீழ் ரணால

21

இப்போது அரச தலைவர் தேர்தல் அல்ல புதிய அரசமைப்பே நாட்டுக்குத் தேவை

கூறுகிறார் சம்பந்தன்

கொழும்பு, ஓக. 13

நாட்டுக்குத் தற்போது அவசரமாகத் தேவைப்படுவது புதிய அரசமைப்பே தவிர, அரச தலைவர் தேர்தல் அல்ல. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜனநாயகம் மற்றும்

21

காங்கேசன்துறை தேர்தல் தொகுதி வாக்காளர் மீளாய்வில் மாற்றமில்லை

தேர்தல்கள் ஆணைக்குழு விடாப்பிடி: 30 ஆயிரம் வாக்காளர்கள் நீக்கப்படும் அபாயம்!

யாழ்ப்பாணம், ஓக. 13

மக்கள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்ப

டாத வலி.வடக்கின் 21 கிராம அலுவலர்பிரிவுகளையும் மீளாய்வுக்கு

21

கைகளில் குருதிக்கறை படிந்தவர் நாட்டின் தலைவராக முடியாது

மங்கள காட்டம்

கொழும்பு, ஓக. 13

ஊடகவியலாளர்களினதும், மேலும் பல அப்பாவிகளினதும் குருதியை தமது கைகளில் ஏந்திக் கொண்டிருக்கும் குற்றவாளி நாட்டின் அடுத்த அரச தலைவராக முடியாது என்று நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ச அறிவிக்கப்பட்டமை தொடர்பில், மங்கள சமரவீர வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப் பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டதாவது:

மகிந்த ராஜபக்ச

21

எவருக்கும் அஞ்சவேமாட்டேன்! நவம்பரில் நிச்சயம் வருவேன்!!

நாட்டுக்காக நடுவீதியில் தந்தையைப் போன்று உயிரைத் தியாகம் செய்யவும் தயார் என்று சஜித் சூளுரை

21

"நம்ம வீட்டுப் பிள்ளை'யாக சிவகார்த்திகேயன்

பாண்டிராஜ் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்து வரும் படத்துக்கு 'நம்ம வீட்டுப் பிள்ளை' எனப் பெயரிட்டுள்ளது படக்குழு.

'mr.லோக்கல்' படத்துக்குப் பிறகு மித்ரன் இயக்கத்தில் உருவாகும் 'ஹீரோ' மற்றும் பாண்டிராஜ் இயக்கத்தில் உருவாகும் படம் என இரண்டிலும் கவனம் செலுத்தி வருகிறார் சிவகார்த்திகேயன். இதில் 'ஹீரோ' படத்தின் சில காட்சிகளை முடித்துவிட்டார்.

எப்போதுமே பாண்டிராஜ் படங்கள் என்றாலே, திட்டமிட்டு சரியாக முடிக்கக் கூடியவர். அதன்படியே, ஒரே கட்டமாக ஒட்டுமொத்தப் படப்பிடிப்பையும் முடித்துவிட்டார்.

தற்போது இந்தப் படத்தின் முதல் சுவரொட்டியை படக்குழு வெளியிட்டுள்ளது. 'நம்ம வீட்டுப் பிள்ளை' என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் படம் செப்ரெம்பரில் வெளியாகும் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

twitter

உள்ளூராட்டக்காரன்@shivaa

யானைக்கும் தேவை 'மத'ச்சார்பின்மை

கோழியின் கிறுக்கல்!!@Kozhiyaar

சம்பாதிப்பதற்கு ஆயிரம் பேர் ஆயிரம் அறிவுரை தருவார்கள்!
ஆனால் சிக்கனமாகச் செலவு செய்வதை மட்டும் நீங்களாகவே தான் கற்றுக்கொள்ள வேண்டும்!!

யார் ஏழை!

"ஒரு பணக்கார பெண்மணி துணி கடைக்குச் சென்று கடைக்காரரிடம் "தம்பி என் மகனுக்குக் கல்யாணம் வேலைக்காரிக்கு கொடுக்க குறைந்த விலையுள்ள புடைவையா ஒன்று கொடுப்பா...."

சிறிது நேரத்தில் அதே கடைக்குச் சென்ற வேலைக்காரி கடைக்காரரிடம் "தம்பி என் பையனுக்கு கல்யாணம் எஜமானியம்மாவுக்கு கொடுக்க விலை உயர்ந்த புடைவையா கொடுப்பா...!

ஐ.தே.க ஜெயிச்சிட்டா மகிந்த பழிவாங்கலாம் எண்டு நினைச்சிருப்பாங்க போல ..

அவனுங்களும் ஏமாத்தி பழகிட்டானுங்க..
இவனுங்களும் ஏமாந்து பழகிட்டானுங்க..

தேர்தல் அலப்பறை

11.08.2006 மகிந்தவின் போர்ப் பிரகடனம்
11.08.2019 கோத்தாவை ஜனாதிபதி வேட்பாளரக அறிவித்த #மகிந்தவின் தேர்தல் பிரகடனம்

வழக்கம் போல விஜய், அஜித் ரசிகர்கள் போல இரண்டு பிரிவாகப் பிரிந்து கொண்டு சமூக வலைத்தளங்களில் தத்தம் தலைமைகளை வக்காலத்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தமிழரது அரசியல் எதிர்காலம் சிங்களப் பேரினவாத அரசியல்வாதிகள் மெல்ல மெல்லக் கரைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய மாநாட்டில் தமிழைக் காணவில்லை

ஒ! இங்க தமிழ் இருக்குமென்ற எதிர்பார்ப்பு இருக்கோ!

இலங்கை அரசியல் இனி வரையறுக்கப்பட்ட குடும்ப நிறுவனம்....

கருத்துச் சித்திரம்

Study In Canada/US and Beyond...

Follow ABEA 3 months Foundation Diploma program in Sri Lanka and further your studies in one of our panel of Universities and Colleges in Canada or US.

On completion of Diploma/Degree in Canada and US, students will have further options for work permit and beyond.

You can follow courses such as: Diploma in Business Management / Advanced Diploma in Tourism & Hospitality Management / Bachelor's Degree in Business Management / Bachelor's Degree in Computing / MBA.....

எதிர்வரும் 18.08.2019 ஞாயிற்றுக்கிழமை Valampuri Hotel இல் ABEA, UK நிறுவனத்தின் COUNTRY MANAGER திரு.செல்வரட்ணம் நிமால் அவர்கள் பின்வரும் நேரங்களில் நேரில் சந்திக்கவுள்ளார். இவரை சந்திக்கவுள்ளோர் 077 377 1222 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு குறித்த நேரங்களில் ஒன்றை முற்பதிவு செய்துகொள்ளவும்.

2019.08.18 மு.ப. 9.30 மணி அல்லது
மு.ப. 11.45 மணி அல்லது பி.ப. 2.30 மணி

(மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை அன்புடன் அழைக்கின்றோம்)

ABEA
Association of British Education Awards

s.nimal@abea.org.uk 0773 771 222 www.abea.org.uk

YOGIS
Institute of Beauty Therapy, Hair Dressing & Home Science (Pvt)Ltd

குறுகிய கால அழகுக்கலை பயிற்சிகள், கேக் ஐசிங் பயிற்சிகள் **புதிய வகுப்புக்கள் 17.08.2019** (சனிக்கிழமை) ஆரம்பமாகவுள்ளன.

சேரவிரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
மகளிருக்கான GIM Exercise நடைபெறுகின்றது.

75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

077 716 4923/ 021 222 2796

ES Printers

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

தனியார் தளபாட விற்பனை நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை

- பணம் வசூலிப்பாளர்
- பட்டாக்கள் வாடகைக்கு
- விற்பனை முகவர்கள்

உணவு. தங்குமிடம் வசதி இலவசம்.
சண்டிலிப்பாய், நாவற்குழி

மாதம் 80,000/= இற்கு மேல் சம்பாதிக்கலாம்.

தொடர்பு: 011 432 0236
011 432 0237
சுரேஸ் - 076 535 0102
ரமேஸ் - 076 707 4609
அலுவலக உதவியாளர் - பெண்

வாடகைக்கும் விற்பனைக்கும்

ஒரு தொகுதி கதிரை மேசை வாடகைக்கும் / விற்பனைக்கும் உண்டு.

021 221 2464, 077 460 2356

நெஞ்சை விட்டு அகலா

3ஆம் வருட நினைவஞ்சலி

செல்வி துவாரகா சண்முகராஜகுருக்கள்

மலர்வு
22.12.2000

உதிர்வு
13.08.2016

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடமை காத்துப் பக்குவமாய் வழிநடந்த
இரக்கத்தின் இருப்பிடமாய் எல்லோர்க்கும் நல்லதாய்
எல்லோர் மனதிலும் இருந்த எம் துவாரகா !
ஏனோ! இறைவன் இடை நடுவில் பறித்துவிட்டான்

ஓடி மறைந்ததம்மா மூன்று ஆண்டுகள்
உன் நினைவுகள் ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும் மறைந்திடுமா ?
பண்புள்ளோரைப் பலகாலம்
- வாழவிடக் கூடாதென்றா?

உம்மை ஆண்டவன் அழைத்தான்
என் செய்வோம் இறைவன் சித்தம் இது
இனிக் காணமுடியாத சோகநிலையோடு
எமது ஏகபுத்திரி துவாரகா !
இங்கிருந்தே ஏங்கி அழுகின்றோம் - அம்மா!
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திக்கரை, களபூமி, காரைநகர்

குடும்பத்தினர்.

(10359)(14.17)

அரச தலைவர்...

அதிபர் ஊடாக கருத்துக்கேள் பத்திரத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, உயர் நீதிமன்றத்தில் இன்று தாக்கல் செய்யவுள்ளார்.

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. அதில் இணக்கப்பாடு எட்டப்படவில்லை. கோத்தபாய ராஜபக்சவை அரச தலைவர் வேட்பாளராக சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி அறிவித்துள்ளது. இந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அரச தலைவர் வேட்பாளர் தனித்துக் களமிறங்குவதா? இல்லை சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கு ஆதரவு வழங்குவதா என்பது தொடர்பில் எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை.

இவ்வாறானதொரு நிலையில் அரச தலைவர் தேர்தலுக்கு முன்னர் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான முயற்சிகளில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஈடுபட்டுள்ளார். அரச தலைவர் தேர்தலுக்கு முன்னர் மாகாணசபைத் தேர்தலை புதிய முறையிலோ, பழைய முறையிலோ நடத்துவதற்குச் சாத்தியம் உண்டா என்று உயர் நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்பதற்காக, சட்டமா அதிபர் ஊடாக கருத்துக்கேள் நகர்த்தல் பத்திரம் இன்று தாக்கல் செய்யப்படவுள்ளது. உயர் நீதிமன்றம் எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்னர் அதற்குரிய பதிலை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உயர் நீதிமன்றத்தின் பதிலைப் பொறுத்தே தேர்தல்கள் ஆணைக்குழு தனது அடுத்த கட்ட நடவடிக்கைகளை தீர்மானிக்கவுள்ளது. இதன் காரணமாகதேர்தல்கள்ஆணைக்குழுவின் நேற்றைய கூட்டத்தில் அரச தலைவர் தேர்தலுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டிருந்தபோதும், மைத்திரியின் இந்த நகர்வால் மேற்படி விடயம் ஆராயப்படவில்லை.

(ஒ.5.105)

பலூன்கள் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

- பலூன்களைப் பிடிக்காதவர்கள் யாரும் இருக்க முடியாது. பிறந்த நாள் திருமணம் திருவிழாக்களில் பலூன்கள் இன்று முக்கியமான இடத்தைப் பிடித்து விட்டன.
- பொம்மை பலூன்களுக்கு முன்பாகவே மிகப் பெரிய வெப்பக்காற்று பலூன்கள் வந்துவிட்டன. 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரான்ஸில் வெப்பக் காற்று பலூன்கள் பறக்க விடப்பட்டன. 1783ஆம் ஆண்டு முதல் மனிதராக எட்டின்னெ மாண்ட் கோல்ஃபியர் பலூனில் பறந்தார்.
- விஞ்ஞானி மைக்கேல்ஃபாரடே 1824ஆம் ஆண்டு எலாஸ்ரிக் பலூன்களில் பல வாயுக்களை நிரப்பிப் பரிசோதனைகளைச் செய்தார். ஓராண்டுக்குப் பின்பு மொம்மை பலூன்கள் உற்பத்தி செய்யப்பட்டன.
- பலூன்களில் ஈலியம் நைதரசன், நைதரசன் ஒக்சைட், ஒட்சிசன், காற்று, நீர் போன்ற வற்றை நிரப்பிப் பயன்படுத்துகிறார்கள். இறப்பர் வாடெக்ஸ் நைலோன்துணி போன்ற பொருள்களில் இருந்து நவீன பலூன்கள் தயாரிக்கப்படுகின்றன. வித விதமான வண்ணங்களிலும் வடிவங்களிலும் பொம்மை பலூன்கள் கிடைக்கின்றன. விழாக்களுக்குப் பயன்படுத்தும் பலூன்கள் வெப்பக்காற்று நிரப்பப்பட்ட பலூன்கள் என்று பல வகைகளில் பலூன்கள் உள்ளன. ஈலியத்தால் நிரப்பப்பட்ட இறப்பர் பலூன்களும் பிளாஸ்ரிக் பலூன்களும் மிதத்துகொண்டே இருக்கக் கூடியவை. சில நாள்களிலிருந்து ஒருவாரம் வரை கூட இந்த பலூன்கள் உடையாமல் தாக்குப் பிடிக்கின்றன.
- சில நாடுகளின் பலூன்களை வானில் பறக்க விடும் போட்டிகளை நடத்துகிறார்கள். தண்ணீரால் நிரப்பப்பட்ட பலூன்களை ஒருவர் மீது மற்றொருவர் அடித்து விளையாடுகின்றனர். முக்கிய நிகழ்வுகளை பலூன்கள் மூலம் விளம்பரப் படுத்தும் நிகழ்வுகளும் நடைபெறுகின்றன.
- அறிவியல் ஆராய்ச்சிகளிலும் பலூன்கள் பயன்படுகின்றன. இரண்டாம் உலகப் போருக்கு முன்பு எதிரிகளைக் கண்காணிக்கவும் பலூன்கள் பயன்பட்டன.

மரண அறிவித்தல்

விநாசித்தம்பி பொன்னையா



அரசடி வீதி வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் பாடசாலை வீதி, பன்னாலை தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி பொன்னையா நேற்று (12.08.2019) திங்கட்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் விநாசித்தம்பி நாகரத்தினம் அம்மா தம்பதிகளின் அன்பு மகனும், நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மணோன்மணி, திருச்செல்வம் மற்றும் இராஜராஜேஸ்வரி, தங்கராணி, பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவலிங்கம்(லண்டன்), கலாலோசினி (லண்டன்), உமா புவனேஸ்வரி , சங்கர் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் சுபாங்கர், சுஷாங்கர்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் (பன்னாலை) நாளை (14.08.2019) புதன்கிழமை காலை 08.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
இராணி அக்கா - 077 2171804 , சிவலிங்கம் - 0761955035
மனைவி - 077 5380477

மரண அறிவித்தல்

கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம்

(ஓய்வுபெற்ற அதிபர், சமாதான நீதவான்)

சாவகச்சேரி சப்பச்சி மாவடியைப் பிறப்பிடமாகவும் தாவடி தெற்கு பத்திரகாளி கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் நேற்று (12.08.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசதுரை - செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற நகுலேஸ்வரன் மற்றும் சுதர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற மஞ்சுளா மற்றும் சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:குடும்பத்தினர்.
0212213785

(J/10372/15/17)

ஆசிரியர்கள் தேவை

உடுவில், இணுவில் பிரதேசங்களுக்கு அண்மையில் இயங்கும் கல்வி நிலையம் ஒன்றுக்கு ஆரம்பக்கல்வி, ஆங்கிலம், புவியியல் பாட ஆசிரியர்கள் தேவை.

077 592 2236

(CS 27301)(14.17)

புதிய வீடு வாடகைக்கு

இடம்-தாழபாடு வீதி, மன்னார்.
(வீதி ஓரமாக உள்ளது)

4 அறைகள்
2 குளியல் அறைகள்
காரியாலயங்கள் விரும்பத்தக்கது.
வாகனத்தரிப்பிடம்

தொடர்பு:- 077 227 6173

CS27358(16/17)

TRADE FINANCE & INVESTMENTS PLC
பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் விற்பனைக்கு
கிளிநொச்சிக் கிளையில்

C10959(16/17)

Model	Reg Number	Condition
DIO	NPBHM - 2454	Running
FZS	NPBGZ - 8060	Running
SCOOTY	NPBGR - 8591	Running
CDL	NPBGW - 3665	Running
RAY	NPBGZ - 6698	Running
BAJ	NPBHC - 6668	Running
WEG	NP BFM - 2030	Running
STR	NPBHR - 1878	Running
PLS	NPBHN - 7549	Running

வேலை நாட்களில் கிளிநொச்சி கிளையில் பார்வையிடலாம்.
08.30AM - 05.30PM பணம் செலுத்தியதுடன் அனைத்து ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம். நிபந்தனைக்குட்பட்டது.
மேதிக விபரங்களுக்கு:- 077 212 5848, 077 166 1648, 021 228 0110

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் : 16.04.1935 மறைவு : 15.07.2019

கடந்த 15.07.2019 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது தாயார்

அமரர்

பராசக்தி அம்பலவாணர்

எமது அன்னையின் மறைவுச் செய்திகேட்டு எமக்கு நேரடியாகவும் ஊடகங்கள் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்கள் மரணச்சடங்கில் பங்கேற்றவர்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்தவர்கள், பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் 12.08.2019 காலை 7.00 மணியளவில் வேலணை சாட்டி வெள்ளக்கடற்கரை சமுத்திரக் கரையில் நடைபெற்றது. 14.08.2019 புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிருத்தியமும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நடைபெறும். அன்றைய தினம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் கலந்து கொள்வதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.27, பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர் சார்பாக அ.சிவபாலசுந்தரன்
(செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்குமாகாணம்)

(J 10371) (14.17)

14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திருமதி
சிவபாலாம்பிகை சுந்தரலிங்கம்

பூமியில் 22.04.1942 விண்ணில் 19.07.2005

திதி:- ஆடிமாத பூர்வபட்ச திரயோதசி

ஆண்டுகள் பத்து நான்கு சென்றிடினும்
ஆறாது உன் பசுமை நினைவுகள்
கண் காணாத இடத்துக்கு நீ சென்றிடினும் – எம்
கண்முன்னே எப்போதும் காட்சி தருகிறாய்
ஆசானாய் அன்புசால் மனைவியாய்
அருமை வளர்ப்பு அன்னையாய்
அன்பான பாசமுள்ள சகோதரியாய் – நீ
ஆற்றிய அரும் பணிகள் யாவும்
மாறாத நினைவுகளாய் எப்போதும்
மனதை விட்டு அகல மாட்டா
எங்கிருந்தாலும் வாழ்க வளமுடன்!

உன் அன்புக் கணவர் சுந்தரலிங்கம்,
ஆசை வளர்ப்பு மகன் சஞ்ஜீவன்,
பாசமுள்ள உடன் பிறப்புக்கள்
மற்றும் உற்றார், உறவினர்.

9–பேரின்பநாயகம் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(CS 27339)(14.17)

09 ஆம் மாத நினைவலைகள்

தோற்றம்
05 . 02 . 1943

மறைவு
13 . 12 . 2018

வே.த.மு.கதிர்காமநாதன் J.P

(சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்)

கோடுகள் கோலங்கள் ஆகலாம்
கோபங்கள் உறவுகளைப் பிரிக்கலாம்
சாலைகள் மூடலாம் கதவுகள் திறக்கலாம்
காலங்கள் செல்லலாம் கடமைகள் தவறலாம்
தீபங்கள் அணையலாம்
உங்கள் பாசதீபம் என்றும் எங்கள் இதயங்களில்
சுடர்விட்டு எரிந்து கொண்டே இருக்கும்

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(CS 27269)(14.17)

இதய அஞ்சலி

அமரர் கனகசுந்தரம் கனகசபாபதி (காந்தி)

(ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர் - யாழ்.செயகம்)

மலர்வு 25.10.1938 உதிர்வு 10.08.2019

அன்னார் மண்டைதீவு காலஞ்சென்ற **பொன்னம்பலம் சிவஞானசுந்தரம்** அவர்களின் உறவுவழி அன்பு மருமகனார் கனடாவில் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து எமது ஆழ்ந்த இதய அஞ்சலி பகிர்கின்றோம்.

அன்னார் நற்குணம், இறைபக்தி, இரக்கம், எப்போதும் எல்லோரிடமும் இன்சொல்லே பேசுதல், எதற்குமே கோபப்படாத இனிய பண்பு, எல்லோரும் என்றென்றும் நன்றாக வாழவேண்டும் என்று நினைக்கின்ற மனப்பான்மை, பிறருக்கு உதவுவதில் பேரார்வம், ஆனால் தனக்கென உதவி கோருவதில் கூச்சம், உற்றார், உறவினர் ஆகியவர்களின் இன்ப துன்பங்களில் தீவிர பங்கேற்று அவற்றினை முன்னின்று நடத்தும் மதிப்புக்குரியவர்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

மைத்துனர்கள் :
சி.சிவசேகரமும் சகோதரங்களும்.

(CS 27339) (14.17)

மரண அறிவித்தல்

சின்னத்தம்பி இராசதுரை

(அருளகம், உரும்பிராய் தெற்கு)



தோற்றம் 01.02.1928 மறைவு 11.08.2019

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கையும் பின்னர் வெள்ள வத்தை பாமன்கடையினையும் வதிவிடமாக கொண்டிருந்த சின்னத்தம்பி இராசதுரை (11.08.2019) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி முத்துப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக்கணவரும் Dr.அருளேந்திரன், (சருமரோக வைத்திய நிபுணர் ஆதார வைத்தியசாலை ஹொரண), அருள்தாசன் (லண்டன்), அருள்மதி (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் Dr.மைதிலி (இரத்தவங்கி, டீ செயிசா வைத்தியசாலை, கொழும்பு).சிவசுகி (மாதுமி, லண்டன்), இராமச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கிரிஷ்ணவி, சங்கவி, கவிஷ், வாகிஷ், திரிஷா, அட்சயா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், வைத்திலிங்கம், தம்பித்துரை, செல்லம்மா, தங்கம்மா ஆகியோரின் அன்புச்சகோதரனும் தவமணி, இராசையா (அவுஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான நாகம்மா கந்தையா, காங்கேசு பொற்கொடி ஜெகநாதன் மற்றும் கணேஸ்வரி நவரத்தினம் (U.K) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.08.2019) செவ்வாய்க்கிழமை காலை 10.00மணிமுதல் மாலை 6.00மணிவரை இறுதி அஞ்சலிக்காக பொரளை ஜெயரட்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு 14.08.2019 புதன்கிழமை காலை 9.00மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று மு.ப 11மணியளவில் பொரளை கனத்தை பொது மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

241, 1/5 W.A. சில்வா மாவத்தை C12950/15/17 தகவல்: Dr. S.R.அருளேந்திரன்

நெஞ்சை விட்டு அகலா முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **நாகமுத்து பத்மநாதன்**

[மூளாய் மேற்கு, சுழிபுரம், யாழ்ப்பாணம்]



அன்னை மடியில்
02 . 11 . 1952

ஆண்டவன் அடியில்
24 . 07 . 2018

திதி:- திரயோதசி (13.08.2019 செவ்வாய்க்கிழமை)

ஊருக்கெல்லாம் சிறந்த உத்தம சீலராகவும், நல்ல தந்தைக்குரிய தனிப்பெருமை மாறாத கல்வியைப் பெற்றுத் தந்து, கௌரவம் மிக்க பிள்ளைகளாக்கி, குடும்பத்தலைவனாய் பொறுப்பு மிக்கவராய், உறவினர்களுடன் பாசம் மிக வைத்து உதவி புரிபவராகக் குடும்பத்துக்குரிய குலப்பெருமையுடன் எங்களுடன் சிறப்புற்று வாழ்ந்த எங்கள் தெய்வம் அப்பா நீங்கள்!

எங்களை விட்டு மறைந்து ஓராண்டு என்ன எத்தனை ஆண்டுகள் போனாலும் ஆறாது எம் துயரம். உங்கள் நினைவுகளும் செயல்களும் எங்கள் நெஞ்சில் நிறைந்து எங்களை வாழ வைத்துக் கொண்டிருக்கும் எங்கள் வாழ்வின் எந்த நிகழ்வும் உங்கள் ஆசியுடனே நடப்பதாக நினைத்துக் காலத்தை நகர்த்திக் கொண்டிருப்போம்.

என்றும் நீங்கள் தினமும் வணங்கும் அராலி முத்துமாரி அம்பாள், நாச்சிமார் தாயையும் மற்றும் பொன்னாலை வரதராஜப் பெருமானையும் மனம் உருகி உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இல.77/05, குட்செட்வீதி,
வவுனியா.

(AVA/555)(11.17)

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

திருமதி சின்னத்துரை தங்கம்மா

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை தங்கம்மா 10.08.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - கற்பகம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ் சென்ற சபாபதி - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் செல்வரட்ணத்தின் (ஜேர்மனி) பாசமிகு தாயாரும் விஜயலதாவின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான அன்னம்மா, பாக்கியம், சோமசுந்தரம், பூரணம், தர்மலிங்கம் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை, இரத்தினம், இராசதுரை, பாக்கியம், செல்லத்துரை, வீரசிங்கம், புண்ணியராசா ஆகியோரின் மைத்துனியும் இந்துஜா, கார்த்தீபன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ரிதம், ரித்விகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.**

(CS 27348)
(14.17)

தகவல் :
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்கள்

தோற்றம்
21 . 12 . 1948

மறைவு
12 . 08 . 2019

மாணிக்கம் தில்லைப்பதி

ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் கொட்டடி வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் தில்லைப்பதி நேற்று (12.08.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற முத்தையா - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், விமலா தேவியின் அன்புக் கணவரும், குணாளன் (சுவிஸ்), குணாளினி, தயாளன் (சுவிஸ்), காலஞ்சென்ற தயாகரன் மற்றும் கேதாரகௌரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்னபூரணி (சுவிஸ்), அம்பிகைபாகன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான தில்லைநாதன், தில்லைராஜா மற்றும் யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், இந்திராணி (பிரான்ஸ்), காலஞ்சென்ற நடராசா ஆகியோரின் மைத்துனரும், சறோஜினிதேவி (பிரான்ஸ்), சத்தியநாதன் (முத்தா), சச்சிதானந்ததேவி, தவானந்தன் (லண்டன்), ஜீவானந்தன் (பிரான்ஸ்), கண்ணன் (சின்னக்கடை தேங்காய்க் கடை உரிமையாளர்), பிரபா (தேவிபடமாடம் யாழ்ப் பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2019) செவ்வாய்க்கிழமை முற் பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS/27336)(11.17)

தகவல்:-குடும்பத்தினர்.
077 0617187

அன்ரன் கொட்மன் (டினா)

பிறப்பு
22.03.1986

இறப்பு
10.08.2019

39/3, சோமசுந்தரம் லேனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரன் கொட்மன் (டினா) 10.08.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசப் அன்ரன் மற்றும் தவமணிதேவி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், கொலிசின், கொலின், கொன்சலியா, கொன்சன், கொலஸ்ரீனா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சிறி, சுனித்ரா, சண், சோபனா, சுரேஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிந்து, லக்ஷி, ஜெறிக், ஜெனிபர், ஜெவ்றின், சுஜித், ஆன்செறின் ஆகியோரின் சித்தப்பாவும், சமீரா, கெவின், கெஷான், றியா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்க ஆராதனை இன்று (13.08.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு புனித திரேசாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**39/3, சோமசுந்தரம் லேன்,
சுன்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

(CS/27345)(11.17)

தகவல்:-
குடும்பத்தினர்.

வாடகைக்கு

நல்லூரில் வெளி இடங்களில் இருந்து வருபவர்களிற்கு ஏற்ற தனி அறை. சமையல் அறை வசதியுடன் வாடகைக்கு.

077 788 7360

நன்றி நவில்கின்றோம்

எமது கிராமத்தின் மிக நீண்ட கால தேவையான கலையரங்கம் ஒன்றை நிறுவுவதற்கு முதற்கட்டமாக ஒரு மில்லியன் ரூபாவை ஒதுக்கி வழங்கியமைக்காகவும், கலையரங்க வேலையை நிறைவு செய்ய மேலும் ஒரு மில்லியன் ரூபாவை ஒதுக்கியமைக்காகவும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்

உயர்திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன் ஐயா

அவர்களுக்கும்

இளைஞர் அணிப் பொறுப்பாளர்

திரு.T.யுவராஜ் அவர்களுக்கும்

எமது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தியேட்டர் வீதி, இணுவில் கிழக்கு.

கிழக்கு இணுவில் மக்கள் சார்பில் நிலைய நிர்வாகம், கலாஜோதி ச.ச.நிலையம்.

(CS/27331)(11,17)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 • 08 • 1938

உதிர்வு 25 • 07 • 2018

திருமதி விமலேஸ்வரி நாகராஜா

(இளைப்பாறிய ஆசிரியர்)

திதி:- தேய்பிறை திரயோதசி

பொறுமையின் இலக்கணமாய்
அன்பின் இருப்பிடமாய்
பாசத்தின் சிகரமாய் விளங்கி எம்மை ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டுச் சென்ற குல விளக்கின்
ஆத்மா சாந்தி பெறுவதாக.

"வாழ்க"

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

வடிவேல் துளசிகா

வேலணை கிழக்கு 4ம் வட்டாரம் துறையூரைச் சேர்ந்த வடிவேல் துளசிகா அவர்கள் நேற்று (12.08.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வடிவேல் மற்றும் அரசகேசரி தம்பதியினரின் கனிஸ்ட புத்திரியும், கிருஷாந் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்-வவுனியா), கோகுலதாஸ் (கிராம அலுவலர் J/28, J/32 - புங்குடுதீவு), நிரோஷன் (கமநல உத்தியோகத்தர் - வேலணை), கிருஷிகா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சசிகலா (ஆசிரியை - சிவபுரம் அ.த.க.பாடசாலை-வவுனியா), சண்ஜா (ஆசிரியை - நயினாதீவு மகாவித்தியாலயம்), இருதயராசா ஆகியோரின் மைத்துனியும் கனிஸ்ரிகா, கபிலாஸ் ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2019) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் ந.ப 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 1.00 மணிக்கு தாளையடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

CS27346(16/17)

4ம் வட்டாரம், துறையூர், வேலணை.

தகவல்: குடும்பத்தினர், T.P:- 077 285 2750, 077 308 6910

பெயர்மாற்றம்

கந்தபுராண வீதி, கந்தர்மடத்தைச் சேர்ந்த **உதயகுமார் தேவசோதி** ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை **தேவஜோதி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் எவ்வகை ஆவணத்திலும் எனது பெயரை இவ்வாறே பயன்படுத்துவேன் என்பதை அறியத்தருகின்றேன்.

உ.தேவஜோதி

(CS/27342(11)

கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலயத்தின் பழைய மாணவனும் எமது வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு நிதி பங்களிப்பு செய்தும் பல்வேறு வழிகளிலும் உதவியவருமான

பரராஜசிங்கம் வசந்தகுமார்

அவர்கள் (03.08.2019) சனிக்கிழமை அன்று காலமான செய்தி கேட்டு நாம் ஆழ்ந்த துயரம் அடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

CS27347(16/17)

ஆசிரியர் நலன்புரி கழகம்,
யா/ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணி Hotel இற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

சமையலாளர் - Cook
வரவேற்பாளர் (பெண்) - Receptionist (Female)
வர்ண பூச்சாளர் - Painter

அனுபவம் மற்றும் வயதிற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.

உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

தங்களது சுயவிபரக் கோவையை 20.08.2019 இற்கு முன்னர் நேரில் அல்லது கீழ்க்காணும் முகவரிக்கு /மின்னஞ்சலிற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தொடர்புகளுக்கு : 077 217 1523
info@tilkohotels.com

Tilko Jaffna City Hotel
70/6, K.K.S Road, Jaffna.

(CS 27337)(4.17)

மரண அறிவித்தல்

திருமதி சௌபாக்கியகௌரி அம்மாள் (கௌரி) ஏரம்பமூர்த்தி

பன்னாலை தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சௌபாக்கியகௌரி அம்மாள் (கௌரி) ஏரம்பமூர்த்தி (11.08.2019) ஞாயிற்றுக்கிழமை ஈசனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் ஏரம்பமூர்த்தியின் துணைவியாரும் காலஞ்சென்ற பொன்னம்பலம் சிவகாமிப் பிள்ளையின் மகளும் காலஞ்சென்ற திரு. திருமதி. சோமசுந்தரத்தின் மருமகளும் இரஞ்சன் (இணைப்புச் செயலாளர்-தேசியகொள்கைகள், பொருளாதாரவிவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு) வசந்தன் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற அசோகன், திருமதி வாசுகி ஸ்ரீதரன் ஆகியோரின் அன்புத்தாயாரும் ஜெயராணி (அவுஸ்திரேலியா), நவமலர் (நியூசிலாந்து), S.N ஸ்ரீதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் டர்ஷான் (அவுஸ்திரேலியா), ஹங்கா சுதன், ஹரிஹாலன் (நியூசிலாந்து), கேசிகன் (அவுஸ்திரேலியா), சரண்யை (IT மாணவி) ஆகியோரின் அன்புப் பாட்டியும், காலஞ்சென்ற சிவபாதசுந்தரம், காலஞ்சென்ற சௌந்தரநாயகி, சிவயோகநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக 13.08.2019 காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை வைக்கப்பட்டு 14.08.2019 காலை 9.00 மணியிலிருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மதியம் 1.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் ஆரம்பமாகி 3.00 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

42/7, பொஸ்வல் பிளேஸ், கொழும்பு - 6

C 10960/15/17

தகவல்: மகன், S.A. இரஞ்சன் 077 734 2058

விடுகதைகள்

1. ஒற்றைக் காதுக்காரன், ஓடி ஓடி வேலி அடைக்கிறான். அது என்ன?
2. புறப்பட்டது தெரிகிறது; போன சுவடு தெரியவில்லை. அது என்ன?
3. பார்த்தால் கல்; பல் பட்டால் நீர். அது என்ன?
4. பிடி இல்லாத குடையைத் தொட முடிய வில்லை. அது என்ன?
5. மனிதன் போடாத பந்தலிலே மலர்ந்து கிடக்கின்றன பூக்கள். அது என்ன?
6. மட்டை உண்டு, கட்டை இல்லை, பூ உண்டு, மணமில்லை. அது என்ன?
7. மூடாத வாய்க்கு முழ வால். அது என்ன?
8. கண்ணுக்குத் தெரியாதவன்; உயிருக்கு உகந்தவன். அவன் யார்?
9. தீரி இல்லாத விளக்கு; உலகம் எல்லாம் தெரியும். அது என்ன?
10. சின்னத் தம்பி, குனிய வச்சான். அது என்ன?

விடைகள்

1. ஊசி
2. புயல்
3. பனிக்கட்டி
4. வானம்
5. நட்சத்திரம்
6. வாழை
7. அகப்பை
8. காற்று
9. சூரியன்
10. முள்

பொது அறிவு

1. எகிப்து நாகரிகம் எந்த நதிக்கரையில் தோன்றியது?
   நைல் நதி.
2. மண்டேலா அவர்கள் எத்தனை ஆண்டுகள் சிறைவாசம் செய்தார்?
   27 ஆண்டுகள்
3. தொலைநோக்கியில்மட்டும்பார்க்கக் கூடியகோள்கள் ?
   யுரேனஸ், நெப்டியூன்
4. தையல் இயந்திரம் கண்டுபிடித்தவர் யார்?
   ஐசக் சிங்கர்.
5. உலகின் முதல் பெண் பிரதமர்?
   சிறிமாவோ பண்டாரநாயக்க
6. மஞ்சள் ஆறு என அழைக்கப்படும் ஆறு?
   ஹோவாங்கோ ஆறு
7. உலகில் மிக அதிகமாக இஸ்லாமியர்கள் வாழும் நாடு எது?
   இந்தோனேசியா
8. உலகிலேயே மிகவும் பெரிய தேசியக்கொடி கொண்ட நாடு எது?
   டென்மார்க்
9. கடல்களின் எஜமானி என அழைக்கப்படும் நாடு எது?
   இங்கிலாந்து
10. மூன்று தலைநகரங்களைக் கொண்ட நாடு எது?
    தென்னாப்பிரிக்கா

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

கேள்விக்குறிகள்!

இலங்கைப் பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ச அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும் என்கிற கோரிக்கை தமிழர் தரப்பிலிருந்து மேலெழுந்திருக்கிறது. அதையெழுப்பியவர் வேறு யாருமல்லர், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்தான்.

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் சிங்கள வாக்குகள் பிரிந்து செல்லும் நிலை ஏற்பட்டிருக்கையில் தமிழர்கள் ஒற்றுமையுடன் செயற்பட்டு தமது நலன்களை முழுமை செய்துகொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.

தமிழர் தரப்பு இதனைச் சரியான வகையில் கையாள வேண்டிய பொறுப்பு இருக்கின்றது. ஏனெனில் கடந்தகாலங்களில் அரசதலைவராகத் தெரிவு செய்யப்பட்டுவந்தவர்கள் ஏமாற்றி விட்டார்கள் என்று தமிழர் தரப்புக்களே கூறுகின்றநிலையில் இந்தமுறை சரியானதொரு தீர்மானத்தை எடுத்து தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முயற்சிக்கவேண்டும். தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கின்றவர்களுக்கே ஆதரவு என்கிற ஒரு உடன்பாட்டுக்கு வரவேண்டும். அத்தகைய ஒரு உடன்பாட்டைத் தமிழ்க் கட்சிகளிடையே ஏற்படுத்தி அதனைப் போட்டியிடும் வேட்பாளர்களிடம் முன்வைத்துப் பேச்சு நடத்தவேண்டும். அவ்வாறு இணைந்து செயற்படுவதே இனத்தின் நலனுக்குச் சிறந்தது. அதனைவிடுத்து தனித்தனியாக முடிவெடுத்துச் செயற்படுவோமாக இருந்தால் அது பலபாதிப்புக்களை ஏற்படுத்தும். ஆகவே இது விடயத்தில் அனைவரும் சிந்தித்து இனத்தின் நன்மைக்காக ஒருமித்துச் செயற்படவேண்டும்.

தனது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பின்போது சுரேஷ் பிரேமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்தார். அவர்கூறுகின்றபடி தமிழர்கள் ஒருமித்துச் செயற்படவேண்டியது அவசியம்தான். ஆனால் அது ஒரு தேர்தல்காலக் கூட்டாக இல்லாமல், கொள்கை வழியான அரசியல் இணைப்பாக இருக்கவேண்டும்.

அதேநேரத்தில், புதிய அரசதலைவரைத் தேர்த்தெடுப்பதில் தமிழர்களின் வாக்குகள் மிக முக்கியமானவையாக இருந்தாலும்கூட அதற்குரிய மதிப்பை ஐக்கிய தேசியக்கட்சியும், பொதுமக்கள் முன்னணியும் வழங்குமா? என்பது கேள்விக்குறிதான். அதுவும் பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளராகக் கோத்தபாய அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் தமிழர்களின் முன் பல தெரிவுகளுக்கான வாய்ப்புக்கள் இருப்பதாகத் தோன்றவில்லை. இந்த நிலையை ஐக்கிய தேசியக் கட்சி தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும்என்பதில்ஐயமில்லை. இத்தகையஒருஅரசியல்நிலை ஏற்கனவே இருப்பதைக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஆபிரகாம் சுமந்திரன் கட்சிக் கூட்டம் ஒன்றிலேயே சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியைவிட்டுவிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால்வெளியேறமுடியாதுஎன்கிறநிலைப்பாடு ஐ.தே.கட்சிக்கு இருக்கிறது. அதனை மாற்றவேண்டும் என்றுஅவர்வலியுறுத்தியிருந்தார்.அதாவதுமகிந்தராஜபக்ச பக்கம் போக முடியாது என்பதால்தமிழ்த் தேசியக் கூட்பைப்பு எப்படியும் தம்முடனேயே இருந்தாகவேண்டும், அதனால்தமக்குஎந்தப்பயமும்கிடையாதுஎன்கிறநிலைப்பாட்டில்ஐக்கிய தேசியக்கட்சி இருக்கிறதுஎன்பதை அவர் தெளிவுபடுத்தியிருந்தார்.

அத்தகையதொரு நிலமையே அரச தலைவர் தேர்தலிலும் தொடர்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. கோத்தபாயவை ஆதரிக்க முடியாது என்கிற தமிழர்களின் உணர்வு பூர்வ முடிவுக்கு முன்பாகத் தன்னைத் தேர்தெடுப்பதைத் தவிரதமிழர்களுக்கு வேறுவழியில்லைஎன்றுஐக்கிய தேசியக்கட்சிவேட்பாளர்எண்ணக்கூடும். அதனால்அந்தவேட்பாளரின் கவனம் சிங்கள வாக்குகள் மீதே குவிந்திருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

அதேநேரம் வெற்றிக்கு தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் வாக்குகளைநம்பிதேர்தலைஎதிர்கொள்ளவேண்டியநிலைப்பாட்டில் கோத்தபாய ராஜபக்சவும் இருக்கும் நிலையில் தமிழர்களின்ஒற்றுமை, ஒருமைப்பாடு என்கிறவியூகங்கள் எல்லாம் பயனுள்ளவையா? என்பதும் கேள்விக்குறிதான்.

அரசியல்வாதிகளின் பசப்பு வார்த்தைகள் இனியும் எடுபடுமா?

■ இந்துமதி

வடக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கூட்டமைப்பு வாயே திறப்பதில்லை என்ற பொருள்படத் தெரிவித்திருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ச. அதுவும் யாழ்ப்பாணத்தில் வைத்து அவர் இதைக் கூறியிருக்கிறார்.

கூட்டமைப்பை விமர்சிப்பதைத் தற்போது அனைவருமே ஒரு நாகரிகமாகக் கருதுகின்றனர் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியதை மெய்ப்பிக்கும் வகையில் நாமலின் கருத்து அமைந்துள்ளது. அவர் வடக்குத் தமிழர்களுக்குப் பிரச்சினைகள் உள்ளதை ஏற்றுக்கொண்டமை பெரிய விடயமாகும். ஏனென்றால் பொது மக்களில் எவருக்குமே பாதிப்பு ஏற்படாத வகையில் போரை நடத்தி வெற்றிகண்ட மகிந்தவின் புதல்வனல்லவா அவர்.

தேர்தல் அக்கறை

தேர்தல்கள் நெருங்கிவரும் நிலையில் தமிழ் மக்கள் மீது பலரும் அக்கறை காட்டுவது இயல்பான தொன்றே. ஆனால் தமிழர்கள் மீது அக்கறை காட்டுவதாகக் காட்டிக்கொண்டு தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாக விளங்கும் கூட்டமைப்பை விமர்சிப்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அரசியல்வாதிகள் பலரும் வடக்கு- கிழக்கில் வாழ்கின்ற சிறுபான்மையின மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக வலை வீச ஆரம்பித்துவிட்டார்கள். குறிப்பாக அரச தலைவர் தேர்தலில் உறுதியான வெற்றியைப் பெறவேண்டுமென்றால் சிறுபான்மையினரின் வாக்குகள் மிகவும் அவசியமானவை என்பதை இவர்கள் நன்கு அறிந்து கொண்டதால், இவ்வாறு நடந்து கொள்கின்றார். கடந்த அரச தலைவர் தேர்தலிலும் இதுதான் நடந்துள்ளது.

உரிமை இருக்கிறது

நாமல் ராஜபக்சவுக்கு வடபகுதிக்கு வருவதற்கு முழு உரிமையும் உள்ளது. தமது கட்சி அலுவலகத்தைத் திறந்து வைப்பதையும் எவருமே தடுத்து நிறுத்திவிடமுடியாது. மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றுக்குத் தீர்வு காணவும் அவர் முயற்சிக்க முடியும். இதற்கும் மேலாக அங்கு வாழ்கின்ற மக்களிடம் வாக்குகளைச் சேகரிப்பதற்கான பரப்புரைகளையும் அவரால் மேற்கொள்ளமுடியும். ஆனால் மக்களைக் குழப்பிவிட்டு அவரால் வேடிக்கை பார்ப்பதை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது. தமது தந்தையாரின் கோரிக்கைகளையேற்று கூட்டமைப்புநடந்துகொள்ளாமையை மனதில் வைத்தே நாமல் கூட்டமைப்பை விமர்சித்திருந்ததை நாம் நினைவில்கொள்ள வேண்டும். அரச தலைவரால் அரசியல் குழப்பமொன்று ஏற்படுத்தப்பட்டபோது கூட்டமைப்பின் ஆதரவு அதற்கு இருந்திருக்குமானால் மகிந்தவே இன்று தலைமை அமைச்சர் பொறுப்பை வகித்துக் கொண்டிருப்பார். அதுமட்டுமல்லாது அண்மையில் மக்கள் விடுதலை முன்னணியால் அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத்தீர்மானத்தின்போது கூட்டமைப்பு அதற்கு ஆதரவாக வாக்களித்திருந்தால் அரசு கவிழ்ந்திருக்கும். மகிந்த மைத்திரி தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதரவுடன் புதிய அரசை அமைப்பதற்கான வாய்ப்பும் இந்திருக்கும். ஆனால் கூட்டமைப்பு தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்ததால் மகிந்தவின் அந்த விருப்பமும் நிறைவேறவில்லை.

இதனால் கூட்டமைப்பின் மீது மிகக் கடுமையான கோபத்தில் மகிந்த தரப்பு காணப்படுகின்றது. அதைவெளிப்படுத்தும் முகமாகவே நாமல் கருத்து வெளியிட்டுள்ளார்.

பேசாதிருக்கும் பழக்கம்

கூட்டமைப்பின் தலைவர்களைப் பொறுத்தவரையில் எவர் தம்மீது விமர்சனங்களை முன்வைத்தாலும் அதற்குப் பதிலடி கொடுக்காமல் விடுவதை ஒருவழக்கமாகவே கொண்டுள்ளனர். எல்லாம் மக்களுக்குத் தெரியுமென அவர்கள் நினைக்கிறார்களோ தெரியவில்லை. ஆனால் அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பதற்கு ஏற்ப காலப்போக்கில் மக்களின் மனங்களில் மாற்றம் ஏற்படாதென நாம் எதிர்பார்க்கமுடியாது. கூட்டமைப்பின் தலைவர்களும் இதைப் புரிந்துகொள்ள வேண்டும். அரச தலைவர் தேர்தலுக்கு முன்பாக மாகாண சபைத் தேர்தல்கள் இடம்பெறுமென ஒரு தகவல் தெரிவிக்கின்றது. இது உண்மையாக இருந்தால் வடபகுதி திருவிழாக் கோலமே பூணப்போகின்றது. மாகாண சபைகளுக்கு எவ்வித அதிகாரமும் இல்லையெனக் கூறியவர்கள் பதவிகளைப் பெறுவதற்கான போட்டிகளில் ஈடுபடுவதைக் கண்குளிரப் பார்க்க முடியும்.

பதவிப் போராட்டம்

மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்காக மாற்று அணியைக் கட்டியெழுப்புவோமெனக் கூறியவர்கள், மக்களை மறந்து தமது பதவிகளுக்கான போராட்டங்களில் ஈடுபடப்போகின்றனர்.

வடக்கு மாகாண சபையின் நிதியின் பெரும்பகுதி முதலமைச்சர் உள்ளிட்ட ஏனைய உறுப்பினர்களின் செலவுக்கே பெருமளவில் செலவிடப்பட்டது. இன்று மக்களைப் பற்றிப் பேசுகின்ற முன்னால் முதல மைச்சர் தமது வசதிகளில் எவ்வித குறைபாடும் இல்லாமல் பார்த்துக் கொண்டார். தாம் பதவி விலகுகின்ற இறுதி நேரத்தில் கோடிக் கணக்கான ரூபா பெறுமதியான அதிநவீன சொகுசு வாகனத்தைத் தமக்கு வழங்குமாறு கேட்டுக்கொண்ட பெருமகனார் அவர். ஏனைய மாகாண சபை உறுப்பினர்களும் மக்களை விடத் தமக்கே முன்னுரிமை வழங்கிச் செயற்பட்டனர். தற்போது மாகாண சபை அமைவது தொடர்பாக மக்கள் எவ்வித அக்கறையும் காட்டுவதில்லை. முதலாவது மாகாண சபையின்செயற்பாடுகள் அந்த அளவுக்கு அவர்களிடம் வெறுப்பை ஏற்படுத்தி விட்டது.

தலைக்கு மேலே ஆயிரம் பிரச்சினைகளை வைத்துக்கொண்டு அல்லாடிக்கொண்டிருக்கின்ற வடபகுதி மக்கள் இனியும் அரசியல்வாதிகளின் பசப்பு வார்த்தைகளுக்கு மளங்கிவிடமாட்டார்கள். அரசியல்வாதிகள் இதைப்புரிந்து கொண்டால் அதுவே போதுமானது.

24 மணி நேரமும் உடனுக்குடன்
செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

உதயன்
செய்திகள்

09

செவ்வாய்க்கிழமை 13 ஒகஸ்ட் 2019

வவு. மோதல் சந்தேகத்தில் 7பேர் கைது

வவுனியா, ஓக. 13

வவுனியா குருமன்காட்டில் நேற்று இரவு 7மணிக்கு இடம்பெற்ற குழு மோதலில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குருமன்காடு பகுதியில் நேற்று மாலை 5 மணியிலிருந்து இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற கருத்து முரண்பாடு இரவு 7 மணிக்கு மோதலாக மாறியதில் கண்ணாடிப் போத்தல், வாள், கத்திகள் போன்ற வெவ்வேறு பொருள்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இளைஞர் குழுக்கள் மதுபோதையில் இருந்ததாக அந்தப் பகுதியிலுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை ஏழு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஓ.5,110,ரி4)

வலிகாமத்தில் இரு இடங்களில் 119 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது

நான்கு பேர் சந்தேகத்தில் கைது

யாழ்ப்பாணம், ஓக. 13

காங்கேசன்துறை, கீரிமலைப் பகுதியில் 79 கிலோ 900 கிராம் கேரளாக் கஞ்சாவும், இளவாலைப் பகுதியில் 40 கிலோக் கிராம் கஞ்சாவும் நேற்றைய தினம் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பில் 4பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கீரிமலை

கடற்படையினரும், தேசிய போதைத் தடுப்புப் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையிலேயே கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. அவர்களுக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே இந்தநடவடிக்கைமுன்னெடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கீரிமலையில் உள்ள காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டுப் பின்னர் கைமாற்றுவதற்குத் தயாராக இருந்தபோதே கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். 34 பொதிகளாகத் தயார் செய்யப்பட்டநிலையில் கஞ்சா காணப்பட்டது. இது தொடர்பில் 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இளவாலை

இளவாலைப் பகுதியில் உள்ள பாழடைந்த வீட்டிலிருந்து நேற்று மாலை 40 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. கடற்படையினருடன் இணைந்து இளவாலை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். 19 பொதிகளை கைப்பற்றியதுடன் சந்தேகத்தின் பேரில் 27 வயதுடைய பண்டத்தரிப்பை சேர்ந்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

(ஓ.5,26)

தமிழர்களின் விரோதியாகவே கோத்தபாயவை பார்க்கின்றனர்

கருணாகரம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஓக. 13

கோத்தபாய ராஜபக்ச தமிழ் மக்களால் விரோதியாகவே பார்க்கப்படுகின்றார் என்று, கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் ரெலோ முக்கியஸ்தருமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் தமிழர்கள் சிங்கள தலைவர்களை நம்பி ஏமாந்த வரலாறே காணப்படுகின்றது. இறுதியாக 2015ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேனவை ஒட்டுமொத்த சிறுபான்மையினமும் அரச தலைவராக்கி இன்று அவரை நம்பி ஏமாந்த நிலையில் இருக்கின்றோம். இன்னுமொரு தடவை சிங்கள தலைமைகளை நம்பி ஏமாற வேண்டிய நிலையில் நாங்களும் இல்லை, தமிழ் மக்களும் இல்லை. அதற்காக அரச தலைவர் தேர்தலை புறக்கணிக்கும் நிலையும் இல்லை.

2005ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலை புறக்கணித்த காரணத்தால் தமிழ் மக்கள் என்ன கஷ்டங்களை அனுபவித்தார்கள் என்பதை நாங்கள் உணரவேண்டும்.

தமிழர்கள் தங்களது வாக்குகளை இந்த நாட்டில் அரச தலைவராக வருபவருக்கு இனிமேல் வழங்க வேண்டுமாகவிருந்தால் அவரிடமிருந்து உறுதியான உறுதிமொழியொன்று வடகிழக்கு தமிழ் மக்கள் தொடர்பாக உண்மையான கரிசனை கொண்டுள்ள பன்னாட்டுச் சமூகத்தின் இணக்கத்துடன் ஒப்பந்தம் ஒன்று உருவாக்கி, அதன் மூலம் உறுதிமொழி வழங்கப்படுவதன் ஊடாகவே ஒரு தலைவரை நாங்கள் ஆதரிக்கலாம்.

வேட்பாளர்கள் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டு அவர்களின் தேர்தல் அறிக்கைகளும் வெளியிடப்படும்போது அதில் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் தொடர்பான விடயங்களை கருத்தில்கொண்டு தமிழ் மக்களின் அரசியல் வேணவாக்களையும் முழுமை செய்யக்கூடிய ஒருவரை தெரிவுசெய்ய வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாக இருக்கவேண்டும் என நான் கருதுகின்றேன்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் கோத்தபாயவை தமிழ் மக்களின் விரோதி என்ற வகையிலேயே பார்க்கின்றனர். முள்ளிவாய்க்காலில் ஒன்றரை இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்களின் அழிவுக்கு காரணம் அவர் என்பதை இன்னும் தமிழ் மக்கள் மறக்கவில்லை - என்றார். (ஓ.5)

மைத்திரிக்குரிய பதவி பேசி தீர்மானிக்கப்படும்

ரோகித எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக.13

புதிய அரசில் அரச தலைவராக முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவும், தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்சவும் நிச்சயம் பதவி வகிப்பார்கள். சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு என்ன பதவியை வழங்கலாம் என்று இரு தலைவர்களும் பேசித் தீர்மானிப்பார்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரோகித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

பொதுமக்கள் முன்னணியின் கன்னி சம்மேளனத்தில் விடுக்கப்பட்ட தீர்மானங்களை நாட்டு மக்கள் ஆவலுடன் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

கட்சி பேதமின்றி நாட்டின் எதிர்காலம் கருதியே நாட்டு மக்கள் இத்தீர்மானத்தை முன்னெடுத்துள்ளார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக பலமான ஒரு அரசை அமைக்க வேண்டும் என்பது அனைவரது எதிர்பார்ப்பாகக் காணப்படுகின்றது - என்றார்.

(எ)

நல்லூர் பெருந்திருவிழாவுக்கு சோதனை இயந்திரம் வருமென்று ஆளுநர் கூறியும் வரவேயில்லை

யாழ்ப்பாணம், ஓக. 13

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தனிடம் செல்லும் பக்தர்கள் இயந்திரம் மூலமாகச் சோதிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்து 5நாள்கள் கடந்துவிட்ட பொழுதும் எந்த முன்னேற்றமும் இல்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

அங்கு ஏராளமான பக்தர்கள் கூடுவர் என்பது அனைவருக்கும் தெரிந்திருந்தும் சோதனைக் கெடுபிடிகள் குறைவில்லை. அதனால் பொலிஸாரின் சோதனைக்குப் பக்தர்கள் மட்டுமன்றி பலரும் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவம் கடந்த 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான நிலையில் பொலிஸார் உடற்பரிசோதனை யில் ஈடுபடுவதற்குக் கடும் ஆட்சேபனை தெரிவிக்கின்றனர்.

கடந்த எட்டாம் திகதி வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் நடத்திய செய்தியாளர் சந்திப்பில், உடற்பரிசோதனை நிறுத்தப்பட்டு இயந்திரம் ஊடான பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்று உறுதி அளித்திருந்தார்.

இதுவரை எந்தவித முன்னேற்றமும் இல்லை என்று பக்தர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

(த-105)

சஜித் எமக்கு சவாலேயில்லை

கூறுகிறார் மகிந்த

கொழும்பு, ஓக. 13

அரச தலைவர் வேட்பாளராக சஜித் பிரேமதாசகளமிறங்கினாலும் அவர் எமக்குச் சவாலே இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளுந்தரப்பில் பலர் வேட்பாளராக தம்மை காட்டிக் கொண்டு வருகின்றனர். எனக்குத் தெரிந்தவகையில் ஆறு பேர்களின் பெயர்கள் பேசப்படுகின்றன. அதில் மூவர் பிரதானமாக இருக்கின்றனர்.

சபாநாயகர் கரு ஜயசூரிய, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர் சஜித் பிரேமதாச ஆகியோர் பிரதானமாக உள்ளனர்.

ஆனால்என்னைப்பொறுத்தவரையில் இந்த மூவரும் எமக்குச் சவாலே இல்லை. மூவர் பற்றியும் நாங்கள் கவலை கொள்ளவில்லை. இவர்களில் யார் வந்தாலும் நாங்கள் வெற்றியடைவோம்.

அதுதான் நாட்டின் இன்றைய நிலையாகும். மக்களுக்கு உணவில்லை. மக்கள் கடன்பட்டு வருகின்றனர்.

அனைத்தையும் அடகு வைத்து அவை வங்கிகளுக்கு சொந்தமாகிவிடுகின்றன - என்றார்.

(ஓ.5)

இனந்தெரியாதோர் தாக்கினரென இருவர் மருத்துவமனையில்

நள்ளிரவு நேரத்தில் இனந் தெரியாதோர் தாக்குதல் நடத்தினர் என்று தெரிவித்து இருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப் பட்டு, ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணப் போதனா மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் மட்டுவிலில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றுள்ளது.

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த மாதன் சிவகுமார் (வயது -42) என்பவர் மேலதிக சிகிச்சைக்காக போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த சண்முகராசா சுரண்ராஜ் (வயது-20) என்பவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கல்

வவுனியா, ஓக. 13

வவுனியா, ஓமந்தை பாலமோட்டை கிராம அலுவலர் பிரிவு மக்களின் பயன்பாட்டுக்கென்றுகுடிதண்ணீர் சுத்திகரிக்கும் இயந்திரத் தொகுதி ஒன்று நேற்று வழங்கப்பட்டது.

வவுனியா, இறம்பைக்குளம் 'ஈஷி' மிசனின் ஏற்பாட்டில் மருத்துவர் த. துரைராஜாவின் நிதி உதவியில் இயந்திரம் வழங்கப்பட்டது.

பாலமோட்டை கிராம அலுவலர் பிரிவிலுள்ள கோவில் குஞ்சுக்குளம் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் இந்த இயந்திரம் வைக்கப்பட்டுள்ளது. நாளாந்தம் 800லீற்றர் குடிதண்ணீர் சுத்திகரிக்கும் இயந்திரத் தொகுதி கிராம மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கோவில்குஞ்சுக்குளம், மடத்துவிளாங்குளம், நவ்வி, ஊறக்குளம்போன்ற கிராமங்களை உள்ளடக்கிய 215 குடும்பங்களின் குடிதண்ணீர்த் தேவைக்கு இலவசமாக இது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இந்தப் பகுதியில் அதிகரித்து வரும் சிறுநீரக நோய்த் தாக்கத்தால் பலர் இனங் காணப்பட்டுள்ளனர். இந்தப் பகுதி மக்களின் உடனடித் தேவைக்கு முதற்கட்டமாக நவ்வி பிரதேச மருத்துவமனை மருத்துவரின் ஆலோசனைக்கு அமைவாக வழங்கப்பட்டது. நிகழ்வில் கண்பார்வையற்றவர்களுக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. (த)

கிளிநொச்சியில் கடும் வறட்சி

சுத்திகரிக்கப்பட்ட நீரை சிக்கனமாகப் பாவியுங்கள்

தேசிய நீர்வழங்கல் அதிகார சபையினர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக.13

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது காணப்படும் வறட்சியான காலநிலையால் நீருக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது. நாளை முதல் இரு தினங்களுக்கு ஒரு தடவை சுழற்சி முறையில் நீர் வழங்கல் இடம்பெறும். முன்னறிவித்தல் இன்றி நீர் வழங்கல் தடைப்படும் சந்தர்ப்பங்களும் ஏற்படலாம்.

இவ்வாறு தேசிய நீர்வழங்கல் அதிகார சபையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டதாவது:

தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவுகின்றது. நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரின் நீர் பெறப்படும் வளங்களில் அதிகளவு வேறுபாடுகள் காணப்படுகின்றன. அந்த நீரைச் சுத்திகரிப்பதில் பல சிரமங்களைஎதிர்கொள்ளவேண்டியுள்ளது. இதனால் சுத்திகரிக்கப்பட்ட நீருக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது. அதனால் பாவனையாளர்கள் நீரை வீண் விரயம் செய்யாது, சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுகின்றோம்.

நாளை முதல் இரு நாள்களுக்கு ஒது தடவை என்ற சுழற்சி முறையில் நீர் வழங்கல் நடைபெறும். முன்னறிவித்தல் இன்றி நீர் வழங்கல் தடைப்படக் கூடிய சாத்தியமும் உள்ளது.

பாவனையாளர்கள் நீரைக் கொதிக்க வைத்துப் பாவனைக்கு உட்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (எ)

கசிப்பு உற்பத்தி செய்தனரென மூவர் பொருள்களுடன் கைது

கசிப்பு உற்பத்தி மற்றும் உடைமையில் வைத்திருந்த பெண் உள்ளிட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

கிளிநொச்சி, தருமபுரம், கட்டைக்காடுப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த மூவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர். அங்கு 2 பெரல் கசிப்பு போதைப் பானம் மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் கோடா பொருள்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் சான்றுபொருள்களுடன் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் பன்னங்கண்டி பகுதியில் 4 போத்தல் கசிப்பை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். அவரும் நீதிமன்ற நடவடிக்கைக்காக கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார் என்று கிளிநொச்சி மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார். (த-6)

ஒட்டுசுட்டான் மேழிவனத்தில் அனுமதியின்றி மணல் அகழ்வு

தடுக்குமாறு அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஓக. 13

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட மேழிவனம் பகுதியில் அனுமதியின்றி மணல் அகழ்வது அதிகரித்துள்ளது. சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்கள் இதுவரை இதைக் கண்டுகொள்ளவில்லை என்று அந்தப் பகுதி மக்களால் குற்றஞ்சாட்டப்படுகிறது. இனியாவது இதைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று கோரிக்கையையும் விடுக்கின்றனர்.

ஒரு இரவில் 30க்கும் மேற்பட்ட டிப்பர்களில் மணல் அகழ்வு நடைபெறுகின்றது. மாலை 6 மணிதொடக்கம் அதிகாலை 5 மணிவரை மணல் அகழ்ந்து டிப்பர்களில் ஏற்றப்பட்டு வெளி இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றது.

பொலிஸாரும் இதைக் கண்டுகொள்வதில்லை என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். டிப்பர் உரிமையாளர்கள் 12ஆயிரம் ரூபாவுக்கு உழவு இயந்திரக்காரர்களிடமிருந்து மணல் கொள்வனவு செய்து, ஒட்டுசுட்டான் பகுதியில் 28 ஆயிரம் ரூபாவுக்கும், நெடுங்கேணி, முள்ளியவளை பகுதிகளில் 30 ஆயிரம் ரூபாவுக்கும், புளியங்குளம் பகுதியில் 32 ஆயிரம் ரூபாவுக்கும் விற்பனை செய்துவருகின்றார்கள். ஒட்டுசுட்டான் நெடுங்கேணி ஊடாகவும் மாங்குளம் ஊடாகவும் குறித்த பகுதியிலிருந்து மணல் ஏற்றப்பட்டு வருகின்றது. இதனை ஒட்டுசுட்டான் பொலிஸார், நெடுங்கேணிப் பொலிஸார், மாங்குளம் பொலிஸார் கண்டுகொள்வதில்லை. அவர்கள் மணல் ஏற்றுபவர்களுக்கு சாப்பாகவே நடந்துகொள்கின்றனர் என்றும் குற்றஞ்சாட்டுகின்றனர். எனவே சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் இதில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றனர். (த-ரி3)

மடுத் திருத்தலத்துக்கு 4 சக்கர நாற்காலிகள்

மன்னார், ஓக.13

மடுத் திருத்தலத்துக்கு 4 சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்தச் சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன.

சிங்கப்பூர் பௌத்த சங்கத்தின் ஏற்பாட்டில்இவைவழங்கப்பட்டுள்ளன. சிங்கப்பூர் பௌத்த சங்கத்தின் ஏற்பாட்டில் மடுத் திருத்தலத்துக்குச் சென்ற அல்வா குணரத்தின தேரர் இவற்றை மடுத் திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எஸ். ஜே. பெப்பி சோசை அடிகளிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்க, மடுப் பிரதே பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (எ-56)

நியமனம் பெற்ற 51 பேர் கடமையை ஏற்கவில்லை

யாழ்ப்பாணம், ஓக.13

வவுனியா மாவட்டத்தில் பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்ட நியமனத்தில் 51 பேர் தமது கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை என்று வவுனியா மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் 20 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் நியமனத்தில் இரண்டாம் கட்டமாக கடந்த முதலாம் திகதி 16 ஆயிரத்து 800 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன. அதில் வவுனியா மாவட்டத்தில் 199 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டிருந்தது. அவர்களில் 197 பேர் நியமனக் கடிதங்களை பெற்றிருந்தனர்.

நியமனக் கடிதங்களை பெற்ற 197 பேரில் தற்போதுவரை 146 பேர் மட்டுமே கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர் என்று மாவட்டச் செயலர் தெரிவித்தார். 57 பட்டதாரிகள் தமக்கான கடமையைப் பொறுப்பேற்கவில்லை. இவர்கள் ஏற்கனவே வேறு கடமைகளில் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (எ-105)

உற்பத்தியாளரை ஊக்குவிக்க கண்காட்சியும் விற்பனையும்

கொடிகாமம், ஓக. 13

தென்மராட்சி, கைதடி மேற்கு சரஸ்வதி இளைஞர் கழகம் சுயதொழில் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக கண்காட்சியும் விற்பனையும் நடத்தியது.

சரஸ்வதி வைரவிழா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இந்த நிகழ்வு இளைஞர் கழகத் தலைவி. ஜெ. வினுஜா தலைமையில் நடைபெற்றது.

தேசிய இளைஞர் தினத்தை முன்னிட்டு நடத்திய இந்த நிகழ்வில் விருந்தினர்களாக J/293 கிராம அலுவலர் சி. தர்மினி, சாவகச்சேரி பிரதேச இளைஞர் சம்மேளனத் தலைவர் சு. நக்கீரன், சரஸ்வதி சனசமூக நிலைய உபதலைவர் ஞா. கிருபதீசன், கைதடி தென்மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி கெ. தயாகினி, கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத் தலைவர் வே. மோகனதாஸ் உட்படப் பலர் கலந்து கொண்டனர். கண்காட்சியைப் பலர் பார்வையிட்டிருந்தனர். (த-159)

தீவக மருத்துவமனைகளுக்கு நேரில் செல்லவுள்ளார் ராஜித

அங்குள்ள நிலமைகளை ஆராய்வதற்காக

யாழ்ப்பாணம், ஓக.13

வடக்குக்குநாளை வரவுள்ள சுகாதார அமைச்சர் தீவகத்தில் உள்ள மருத்துவமனைகளுக்குச் சென்று, அங்குள்ள நிலமைகளை ஆராய்வார் என்று அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்தன நாளை வடக்குக்கு வருகின்றார். சுகாதாரம் தொடர்பான பல வேலைத் திட்டங்களை அவர் ஆரம்பித்து வைக்கவுள்ளார். அத்துடன் மருத்துவமனைகளில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாகவும் அவர் ஆராயவுள்ளார்.

யாழ்ப்பாணம், தீவகத்தில் உள்ள மருத்துவமனைகள் பல்வேறு வளப் பற்றாக்குறைகளுடன் இயங்குகின்றன என்று கூறப்படும் நிலையில் அவர் அங்கு சென்று நிலமைகளை நேரில் ஆராயவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதார அமைச்சர் நாளை வவுனியா பொது மருத்துவமனையின் விபத்துச் சிகிச்சைப் பிரிவை ஆரம்பித்து வைக்கவுள்ளார். நெதர்லாந்து நாட்டின் அபிவிருத்தித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்விலும் கலந்துகொள்ளவுள்ளார்.

மறுநாள் அவர் தீவகத்தில் உள்ள மருத்துவமனைகளுக்குச் செல்லவுள்ளார். அங்குள்ள தேவைகள் தொடர்பாகக் கேட்டறியவுள்ளார்.

16ஆம் திகதி அவர் பருத்தித்துறை மருத்துவமனையில் நெதர்லாந்து நாட்டின் அபிவிருத்தித் திட்ட ஆரம்ப நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளார். பின்னர் மாங்குளத்தில் அமைக்கப்படவுள்ள மறுவாழ்வு மருத்துவமனையின் அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளார் என்று அமைச்சுத் தகவல்கள் தெரிவித்தன. (எ-7)

சிறப்புத் தேவையுடையோரின் இல்லத்துக்கு விக்கி சென்றார்

வவுனியா, ஓக. 13

வவுனியா, வரோட், தாய் மடி இல்லத்தில் தங்கியிருக்கும் சிறப்புத் தேவையுடையோருக்கான தேவைகள் தொடர்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரன் கேட்டறிந்தார்.

வவுனியாவுக்குச் சென்றிருந்த அவர் இல்லத்திலுள்ள சிறப்புத் தேவையுடைய சிறுவர்கள், இளையோர்களை நேற்றுமுன்தினம் மாலை 6 மணிக்குச் சந்தித்துக் கலந்துரையாடினார். அவர்களின் தேவைகள் குறித்தும் அவர்களைப் பராமரிக்கும் அருட் தந்தையர்களிடமும் கேட்டறிந்து கொண்டார்.

சந்திப்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் வவுனியா அமைப்பாளர் செ.சிறிதரன், இளைஞரணித் தலைவர் கிருஸ்ணமேனன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (த-ரி4)

நல்லாட்சியின் கொள்கைகளை காட்டிக் கொடுத்தார் மைத்திரி

அதனாலேயே மோசடியாளர்கள் தப்பினர்
ராஜித சேனாரத்ன கொந்தளிப்பு

கொழும்பு, ஓக.13

நல்லாட்சியை அமைத்து, அபிவிருத்திகளை மேற்கொண்டபோது, அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன 180 பாகை திரும்பி, சுதந்திரக் கட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இது அபிவிருத்தியை நோக்கிய எமது பயணத்துக்கான நிலமையை மாற்றியது. இந்த மாற்றத்தினால் மோசடியாளர்களை கைதுசெய்து, அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாமல் போனது.

இவ்வாறு சுகாதார போசனை மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

மத்துகம பிரதேசத்தில் மறுசீரமைக்கப்பட்ட பாலமொன்று நேற்று திறக்கப்பட்டது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ராஜித இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறிப்பிட்ட ஒரு சமூகத்தால் விரும்பப்படும் ஒருவரை நாம் வேட்பாளராக நிறுத்தப்போவதில்லை. பெரும் வாக்கு வித்தியாசத்தில் நாடுமுழுவதும் வெற்றி கொள்ளக் கூடிய ஒருவரையே களமிறக்குவோம். ஐக்கிய தேசியக் கட்சியே விவசாயிகள், தொழிலாளர்கள் என சகல தரப்பினரையும் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சியாகும். அவ்வாறான கட்சியிலிருந்து நிறுத்தப்படும் ஒருவரே அரச தலைவராக முடியும்.

முன்னாள் அரச தலைவர்களான ஆர். பிரேமதாச மற்றும் டி.பி.விஜயதுங்க ஆகியோர் இதற்குச் சிறந்த உதாரணங்களாகும். பல்வேறு சவால்களுக்கு மத்தியில் கடந்த நான்கரை வருடங்களில் நாட்டை அபிவிருத்தி செய்ய முடிந்துள்ளது. இந்த அபிவிருத்தியை விரும்பும் மக்கள் எதிர்வரும் 10 வருடங்களுக்கு எமக்கே வாக்களிப்பார்கள்.

2015ஆம் ஆண்டு நாம் வென்ற பின்னர் பசில் ராஜபக்ச நாட்டைவிட்டுச் சென்றார். மகிந்த ராஜபக்ச கால்டன் இல்லத்துக்குச் சென்றுவிட்டார். அப்போது நாம் பொதுத் தேர்தலை நடத்தியிருக்க வேண்டும். எனினும் தொடர்ச்சியான வெற்றிகளுக்கு முன்னுரிமையளிக்காது, நாட்டுக்கு முன்னுரிமையளித்தோம். அதைப் பயன்படுத்தி நாம் அபிவிருத்திகளை மேற்கொண்டோம். எனினும், அரசில் பதவிகளுக்கு இணைந்துகொண்ட சிலர் அரசுக்குள் இருந்துகொண்டே அரசை விமர்சித்தனர்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன 180 பாகை திரும்பி சுதந்திரக் கட்சித் தலைமைப்பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இது அபிவிருத்தியை நோக்கிய எமது பயணத்துக்கான நிலமையை மாற்றியது. இந்த மாற்றத்தால் மோசடியாளர்களை கைதுசெய்து, அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமுடியாமல் போனது. அவர் நல்லாட்சியின் கொள்கைகளைக் காட்டிக் கொடுத்துவிட்டார். லசந்த விக்ரமதுங்க, பிரகீத் எக்னெலிகொட ஆகியோர்பற்றியவிசாரணைகள் இழுத்தடிக்கப்பட்டன. ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரையே தலைவராகக் கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசியல் சக்தியொன்று உள்ளது. அவர்களை முன்னிலைப்படுத்தியே அவர்களால் அரசியல் செய்ய முடியும். - என்றார். (எ-21)

கூலர் ரக வாகனம் மோதி கன்றுக்குட்டி உயிரிழப்பு

மன்னார், ஓக.13

வீதியைக் கடந்த கன்றை கூலர் மோதியதில் கன்று உயிரிழந்தது. இந்தச் சம்பவம் நேற்று மன்னார், நறுவிக்குளம் பொது விளையாட்டு மைதானத்துக்கு அருகே இடம்பெற்றது.

வீதியைக் கடந்த கன்றை மோதிவிட்டு கூலர் ரக வாகனம் நிற்காது சென்றுள்ளது. குற்றுயிராய் வீதியோரம் கிடந்த கன்றுக்குட்டி பின்னர் உயிரிழந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-213)

அனுமதியின்றி மணல் ஏற்றினரென 3 சாரதிகள் கைது

கிளிநொச்சி, ஓக. 13

அனுமதிப்பத்திரமின்றி மண் மற்றும் மணல் ஏற்றினார்கள்என்ற குற்றச்சாட்டில் மூன்று சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

முரசுமோட்டை பகுதியில் நேற்றுமுன்தினம் அவர்கள் கைது செய்யப்பட்டனர். அனுமதிப்பத்திரம் இன்றி மண் அகழ்ந்து ஏற்றினரென்று இரண்டு டிப்பர்களின் சாரதிகள் கைது செய்யப்பட்டனர். குறித்த இரு டிப்பர்களுடன் பைக்கோ வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதுதவிர, முரசுமோட்டை ஐயனார்கோவிலடியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றினரென்ற குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் உழவியந்திரசாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவங்களில் கைது செய்யப்பட்ட 3 சாரதிகளும் வாகனங்களும் மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்கதெரிவித்தார். (சு-6)

மின்னொளியாகத் தரமுயர்த்தப்பட்ட இரு மைதானங்கள் திறந்துவைப்பு

நானாட்டான், ஓக. 13

மாங்குளம் மின்னொளி விளையாட்டுக் கழகம் மற்றும் நானாட்டான் றீகன் ஸ்டார் விளையாட்டுக்கழகம் ஆகியன மின்னொளியிலான விளையாட்டு மைதானங்களாகத் தரமுயர்த்தப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் இந்த நிதியை ஒதுக்கியிருந்தார்.

மாங்குளம் மின்னொளிக்கு 15 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு சீரமைக்கப்பட்டு, நேற்றுமுன்தினம் மாலை நாடாளுமன்ற உறுப்பினர் அதைத் திறந்து வைத்தார். மின்னொளி விளையாட்டுக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டு நிகழ்வில் வெற்றியீட்டிய வீரர்களுக்கான வெற்றிக்கிண்ணத்தையும் அவர் வழங்கிவைத்தார்.

நானாட்டான் றீகன் ஸ்டார் 10 லட்சம் ரூபாவில் மின்னொளியாகத் தரமுயர்த்தப்பட்டது. அங்கு மின்னொளி சாதனங்கள் பொருத்துவதற்காகவும், விளையாட்டு வீரர்களின் பல தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும், சிறிய கட்டடம் அமைப்பதற்காகவும், ரூபா பத்து லட்சம் ஒதுக்கியிருந்தார். அதையும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார். அவருடன் நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் ச.ரூபன், மன்னார் மாவட்ட இணைப்பாளர் நடேசானந்தன், கிராம மட்ட அமைப்புகளின் பிரிநிதிகளும் கலந்து கொண்டனர். (த-213)

அரச பணியில் உள்ளவர்கள் மீண்டும் நியமனம் பெற்றிருந்தால் நடவடிக்கை

மீள்குடியேற்ற அமைச்சின் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.13

நாடு முழுவதும் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்ட நியமனமத்தில் ஏற்கனவே பணியில் இருந்தவர்கள் மற்றும் 2016 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பட்டம் பெற்றவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டிருந்தால் அவர்கள் அந்தப் பட்டியலில் இருந்து நீக்கப்படுவார்கள் என்று மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சின் செயலர் வீ. சிவஞானசோதி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:

வேலையற்ற பட்டதாரிகளுக்கு நாடு முழுவதும் 20 ஆயிரம் பேருக்கு வழங்கப்படும் நியமனத்தின் இரண்டாம்கட்டம்கடந்த முதலாம் திகதி வழங்கப்பட்டது. அதில் 16 ஆயிரத்து 800 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன.

இந்த நியமனத்தின்போது 2016ஆம் ஆண்டுக்கு முன்னர் பட்டம் பெற்றவர்களுக்கு மட்டுமே நியமனம் வழங்கப் பரிந்துரைக்கப் பட்டிருந்தது. அத்துடன் ஒரு

அரச பணியாளர் இந்த நியமனத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது. கடந்த முதலாம் திகதி வழங்கப்பட்ட நியமனத்தில் நூற்றுக் கணக்கானோர் ஏற்கனவே அரச பணிகளில் இருந்து கொண்டு, மீண்டும் இந்த நியமனத்தைப் பெற்றுள்ளனர்என்றுசுற்றறிக்கையில் காணப்படுகின்றது. அவ்வாறு மோசடிசெய்தால்நியமனத்தைப்பெற்ற அனைவரையும் பணியில் இருந்து நீக்க வேண்டும் என்று மாவட்டச் செயலர்களுக்கு நாம் தற்போது எழுத்து மூலம் அறிவிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு அந்தப் பட்டதாரிகளே பொறுப்பாளிகள் ஆவர்.

நாம் நியமனம் வழங்கும் போது இது வேலையற்ற பட்டதாரிகளுக்கான நியமனம் என்பதைத் தெளிவாகத் தெரிவித்திருந்தோம். அதேநேரம் 2016ஆம் ஆண்டுக்குப் பின்னர் பட்டம் பெற்றவர்களுக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று சிலமுறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவை தொடர்பாகவும் ஆராயவுள்ளோம். அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களும் அந்தச் சந்தர்ப்பத்தை இழக்கும் சூழல் ஏற்படும்.

அவ்வாறு நீக்கப்படும் பட்டதாரிகளின் இடைவெளிகையோடு மேலும் குறிப்பிட்ட தொகைப் பட்டாரிகளை உள்வாங்கி தற்போது உள்ள உள்வாரி, வெளிவாரிப் பட்டதாரிகள் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிக்கின்றோம். 2016 ஆம் ஆண்டுக்கு முன்னர் பட்டம் பெற்ற அனைவருக்கும் எதிர்வரும் மாதங்களில் நியமனம் வழங்க முயற்சிக்கின்றோம் - என்றார். (எ-105)

வவுனியா உலுக்குளத்தில் ஆயுதங்கள் கண்டெடுப்பு

வவுனியா, ஓக.13

வவுனியா, உலுக்குளம் பிரதேசத்தில் இருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று உலுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர். பாவற்குளத்தில் இருந்து உலுக்குளம் நோக்கிச் செல்லும் அணைக்கட்டுப் பகுதியில் இருந்தே இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் மாலை அந்தப் பகுதியால் பயணித்த ஒருவர் பொலித்தீனால் சுற்றப்பட்டநிலையில் ஆயுதங்கள் இருந்ததை அவதானித்துள்ளார். அதையடுத்து அவர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் ஆயுதங்களை மீட்டனர். கைக்குண்டுஒன்றும், ரி-56ரகத்துப்பாக்கியின் மகசின்கள் இரண்டும் மீட்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் மேலும் வெடிபொருள்கள் உள்ளனவா என்பது தொடர்பாக நீதிமன்ற அனுமதி பெற்றுத் தேடுதல் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை உலுக்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-110,ரி4)

தென்னை அபிவிருத்தி அலுவலர் அலுவலகம் புதுக்குடியிருப்பில்

கொழும்பு, ஓக.13

புதுக்குடியிருப்பில் அமைக்கப்பட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகம் நேற்று பெருந்தோட்ட தொழில் அமைச்சர் நவீன் திசநாயக்கவால் திறக்கப்பட்டது.

புதுக்குடியிருப்புப் பிரதேச கமநல சேவைகள் திணைக்களக் கட்டடத் தொகுதியில் இந்த அலுவலகம் அமைந்துள்ளது. அலுவலகத்தின் பெயர்ப்பலகையை அமைச்சர் திரைநீக்கம் செய்ததுடன், நாடா வெட்டி அலுவலகச் செயற்பாட்டையும் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு தென்னை அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் ம.பிரதீபன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (எ-ரி3)

திடீரென மயங்கி வீழ்ந்து ஒருவர் சாவு

சாவகச்சேரி, ஓக.13

திடீரென மயங்கி விழுந்த சந்தை வியாபாரி சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரியில் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி, சிவன் கோயிலடியைச் சேர்ந்த க.பரராஜசிங்கம் (வயது-73) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சாவகச்சேரி- சந்தையில் பழ வியாபாரம் செய்யும் வியாபாரியே திடீரென மயங்கிச் சரிந்துள்ளார். அங்கிருந்தவர்கள் அவரைச் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். அவருக்குச் சிகிச்சைகள் வழங்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். (எ-9)

வனஜீவராசிகள் திணைக்களம் நீரோரி சீரமைப்பைத் தடுக்கிறது

அங்குள்ள மக்கள் விசனம்

முல்லைத்தீவு, ஓக. 13

நாயாறு நீரோரி மற்றும் அதனைச்சூழவுள்ள பகுதிகளைச் சீரமைப்பதற்கென, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தபோதும், வன ஜீவராசிகள் திணைக்களம் அந்தப் பகுதியில் பெயர்ப்பலகை நட்டு, சீரமைப்பு வேலைகளைச் செய்யமுடியாது தடுப்பதாகப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

கரைதுறைப்பற்று பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில், வடக்கு மாகாணமுன்னாள்சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் மற்றும் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோர் பிரதேசத்திலுள்ள கிராம மட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்களுடன் கடந்த சனிக்கிழமை கலந்துரையாடியிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே நாயாறுப்பகுதி பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மேற்கொண்ட விடயத்தைத் தெரிவித்தனர்.

நாயாறு ஏரியைச் சுத்தப்படுத்துவது, அதனைச் சூழவுள்ள வீதிகளைச் சீரமைப்புச்செய்வது போன்ற பல வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இருப்பினும் வனஜீவராசிகள் திணைக்களம் பெயர்ப்பலகையை நட்டுள்ளதால், குறித்த அபிவிருத்தி வேலைகளைச் செய்யமுடியாத நிலை காணப்படுகின்றது.

தமிழ் மக்களின் அபிவிருத்தி வேலைகளைத் தடுப்பதற்காகவே இவ்வாறான பெயர்ப்பலகைகள் அமைக்கப்படுகின்றன என்று தெரிவித்தனர்.

இதுதவிர, முல்லைத்தீவு கொக்கிளாய் கடல் நீரேரியில் சட்ட விரோத தொழில் முறைகள் அதிகரித்துள்ளன. இதனால் இறால் உற்பத்தி முற்றாக இல்லாமற் போயுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

களப்பில், சிறுதொழில்களை மாத்திரமே நம்பியிருக்கும் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

சிறுகடல் தொழில், தடை செய்யப்பட்டதொழில்தொடருமாகவிருந்தால், இன்னும் எட்டுவருடங்களில் சிறுகடல் தொழில் இல்லாமற் போய்விடும். இதை 2011ஆம் ஆண்டிலிருந்தே தெரிவித்து வருகின்றோம்.

கடந்த காலங்களில், வருடம் முழுவதும் இறால் பிடித்தால் கூட கொக்கிளாய் களப்பினுள் குறைந்தது ஒரு நாளைக்கு ஒரு கிலோ இறால் என்றாலும் பிடிக்க முடியும். தற்போது இறால் உற்பத்தியே அற்றுப்போயுள்ளது என்றும் தெரிவித்தனர். (த-246)

சிறுவயதில் இருந்தே பிள்ளைகள் வாசிப்பதைத் தூண்டவேண்டும்

பெற்றோர்களுக்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்து

கொடிகாமம், ஓக. 13

பிள்ளைகளுக்கு நல்ல நூல்களை வாங்கிக் கொடுங்கள். நல்ல நூல்களை சிறுவயதிலிருந்தே வாசிக்கப் பழக்குங்கள். அவர்களுக்கு ஆரம்பப் பருவத்திலிருந்தே வாசிப்பதில் ஆர்வம் ஏற்படுத்தப்படவேண்டும். தற்போது மாணவர்களிடையே தேடல் இல்லை, வாசிப்பதில் பொறுமையில்லை. எனவே எதிர்காலத்தில் நல்ல மனிதர்களாக வளர வழிகாட்டுங்கள். எதிர்காலச் சந்ததியை நல்ல வழியிலே உருவாக்குவது எங்கள் எல்லோருடையதும் கடமையாகும். இவ்வாறு தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்(கல்வி அபிவிருத்தி) திருமதி சிவத்திரை சிவநாதன் தெரிவித்தார்.

தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளிகளின் சாவகச்சேரி பிரதேச மட்ட விளையாட்டு விழா மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலய மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. தென்மராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது தமது வேலைகளை இலகுவாக்கு வதற்காக பெற்றோர்கள் பிள்ளைகளிடம் அலைபேசியைக் கொடுக்கின்றனர். பெற்றோர்களே பிள்ளைகளுக்கு நல்ல விளையாட்டுக் கதைகள் சொல்லிக் கொடுத்து வளர்க்க வேண்டும். வாசிப்பதில் ஆர்வம் கொள்ள வைக்க வேண்டும்.

பெற்றோர்களே! ஆசிரியர்களுக்கு எவ்வளவு ஆதரவு வழங்குகிறீர்களோ? அந்தளவுக்கு அவர்கள் செயற்பாடுகளை முன்னேற்றுவதற்கு பேருதவியாக இருக்கும். எதிர்காலத்தில் இந்தப் பிள்ளைகள் சிறந்த சிற்பிகளாக ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமூகத்தினர் ஆகியோர் பிள்ளைகளை நல்ல மக்களாக்குவதற்கு அனைவரும் முன்வரவேண்டும்.

தாயின் மடியில் தவழ்ந்த குழந்தைகள் அடுத்தபடியாக முன்பள்ளிக்கு வருகை தருகின்றபோது அவர்களை அன்போடு அரவணைத்து, அவர்களை மகிழ வைக்கும் வகையில் நல்ல பழக்கவழக்கங்கள் நல்ல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். நாம் இன்று வீட்டிலே ஒன்று இரண்டு பிள்ளைகளை வைத்து பராமரிக்கச் சிரமப்படும் நேரத்தில், குறைந்த ஊதியத்தோடு சிறந்த முறையில் வழிகாட்டி, சிறந்த செயற்பாடுகளை வழங்கி, எதிர்காலத்தில் நல்ல மனிதர்களாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எதிர்காலத்தில் குழந்தைகளை வளர்த்துச் செல்ல பயிற்சிகள் உதவுகின்றன. குழுவாக விளையாடிய விளையாட்டுக்களில் குழுவாக இயங்கும் போது அவர்களிடையே இருக்கக்கூடிய தலைமைத்துவப் பண்பு என்ற வகையில் இணைந்து செயற்படுவார்கள். எதிர்காலத்தில் இந்தப் பண்புகள் நல்ல மனப்பாங்கை பார்க்க உதவியாக இருக்கும் - என்றார். (த-159)

வீதியோரத்தில் வீசப்பட்ட மருத்துவமனைக் கழிவுகள்

கொழும்பு, ஓக.13

வவுனியா - மன்னார் வீதியில் பூவரசன்குளம், பம்பைமடுப்பகுதியில்மருத்துவமனைக் கழிவுப் பொருள்கள் வீதியோரம் வீசப்பட்டுள்ளன என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

நோயாளர்களுக்குப் பயன்படுத்திய ஊசி, சேலைன் போத்தல்களும், பாவிக்காத நிலையில் உள்ள சில பொருள்களும் வீதியோரம் வீசப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. அவற்றுக்கு அருகே வெற்றுப்பெட்டி ஒன்றும் காணப்படுகின்றது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அவற்றை அகற்றுவதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இவ்வாறான செயற்பாடுகள் எதிர்காலத்தில் நடக்காதவாறு அவதானமாக நடந்துகொள்ள வேண்டும் என்றும் - பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

அழித்தவற்றைத் தரத்தான் வேண்டும் அதற்காக அரசுடன் சேர்ந்துவிடக்கூடாது

நாடாளுமன்ற உறுப்பினர் சரா. இளையோருக்கு அறிவுறுத்து

கொடிகாமம், ஓக. 13
ஜக்கிய தேசியக் கட்சியா? சுதந்திரக் கட்சியா? தெரிவு என்பதை நீங்கள் யோசித்துக் கொள்ளலாம். அவர்கள் எங்களிடமிருந்து அழித்தவற்றை, உடைத்தவற்றை, எரித்தவற்றைத் திருப்பித்தர வேண்டும். அதெல்லாம் அவர்களின் கடமை. அவற்றைக் கேளுங்கள்.
அதற்காக அவர்களுடன் சேர்ந்து விடக்கூடாது. அவர்களுக்கு இந்தப் பகுதியின் ஒரு சதம் கூட எடுத்துக் கொடுக்கக் கூடாது. சில தமிழர்கள் தமது சுய நலத்துக்காகத் திரிகிறார்கள்.
இவ்வாறு யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் தெரிவித்தார்.
கைதடி தெற்கு மூத்தலாவத்தை வீதிச் சீரமைப்பு மூன்று கோடி ரூபா செலவில் இடம்பெறவுள்ளது. இதை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு கைதடி வடக்கு வன்னியசிங்கம் வீதிச் சந்தியில் கடந்த சனிக்கிழமை மாலை நடைபெற்றது.
நிகழ்வில் சரவணபவன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு சீரமைப்புப் பணியை ஆரம்பித்து வைத்தார். அதன்பின்னர் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தரவேண்டியது அரசின் கடமை

இளைஞர்களே! ஒன்றைச் சிந்தியுங்கள், ஜக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தமிழர்களை அடித்துத் துவம்சம் செய்தார்கள், சொத்துக்களை அழித்தார்கள்.
நாம் எவ்வளவோ கஷ்டப்பட்டோம். இன்று அவர்கள் ஜக்கிய தேசியக் கட்சியாக இருந்தால் என்ன சிறிலங்கா சுதந்திரக் கட்சியாக இருந்தாலென்ன வடக்கு மாகாணத்தில் அழித்தவற்றைக் கொண்டு வரவேண்டும். கொண்டுவருபவற்றைக் கட்டாயம் வாங்க வேண்டும்.

மனதில் வைத்திருங்கள்

அவற்றை நாங்கள் அங்கீகரிக்க வேண்டும் என்றால் எல்லாவிதமான வளங்களுடனும் அபிவிருத்தி செய்யப்பட்டு மற்றைய மாகாணங்களுக்கு நிகராக வடக்கு மாகாணம் வரவேண்டும். எத்தனை பேர் உயிரை அர்ப்பணித்தார்கள்?. ஏன்?. எவருக்காக அர்ப்பணித்தார்கள் என்பனவற்றையும் மனதில் வைத்திருங்கள்.
ஒவ்வொரு இளைஞர்களும் ஒன்று சேர்ந்தால் ஜக்கிய தேசியக் கட்சியாக இருந்தாலும் சுதந்திரக் கட்சியாக இருந்தாலும் சரியான பதிலடி கொடுக்கலாம்.

அபிவிருத்தியில் நாட்டம் செலுத்துகிறேன்

அபிவிருத்தியில் நான் நாட்டம் செலுத்துகின்றேன். கிடைப்பதை வேண்டுகின்றேன். கிடைக்கக்கூடிய வழிமுறைகளையும் பார்த்துக் கொண்டு இருக்கின்றேன். வட்டுக்கோட்டைக்கு, அடுத்தாக கைதடியில் பல அபிவிருத்திகளைச் செய்து வழங்கியுள்ளேன். கைதடிக் கிராமத்தில் பல வீதிகள் சீரமைத்திருக்கின்றேன். ஆனால் இது ஒரு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இந்த நிகழ்வு கைதடி சனசமூக நிலையங்களின் ஒற்றுமையைக் காட்டுகிறது. தேர்தல் காலத்தில்கூட இவ்வளவு மக்கள் வருவார்களா என்று தெரிய வில்லை.

இளைஞர்களின் வேகத்தால் இவ்வளவும் செய்கின்றேன்

தென்மராட்சியில் முதன் முதலில் விடத்தற்பளையில் வேலைத் திட்டங்களை ஆரம்பித்தேன். இளைஞர்களின் வேகம் தான் இவற்றைக் கொண்டு வருகிறது. இளைஞர்கள் முன்னின்றால் எதையும் சாதிக்கலாம். உங்களின் பங்களிப்புதான் முக்கியம். இங்கு வரும்போது இந்த வீதியில் கூடுதலான இளைஞர்களைப் பார்த்தேன். ஒவ்வொரு சனசமூக நிலையப் பிரதிநிதிகளும் கருத்திலெடுத்து நீங்களாகவே இந்த நிகழ்வைச் செய்வது ஒற்றுமையின் வெளிப்பாடும் முன்னுதாரணமும் கூட. எல்லா இடத்திலும் செய்வது மிக மிக கஷ்டம். முக்கியமாக யாழ்ப்பாணத்தில் இப்படி ஒன்றாக இணைந்து செய்தமை எங்குமில்லாதவாறு உங்கள் ஒற்றுமையை வெளிக்காட்டுகிறது. சஜித் பிரேமதாசவிடம் சொன்னேன், வீட்டுத் திட்டத்தைத் தவிர வேறு எதுவும் எமது பிரதேசத்தில் நடைபெறவில்லை என்று. அவர் தன்னுடைய பேச்சில் மிகத் தெளிவாக சொன்னார், "எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும்.
இப்போது வடக்கு- கிழக்கு பின்னோக்கியுள்ளது. அதனை மேலோங்க செய்ய வேண்டும்" என்ற வசனம் பாவித்தார். அரச தலைவர் வேட்பாளராக வரும்போது என்ன சொல்ல போகிறார்? என்ன செய்யப் போகிறார் தெரியவில்லை.
"யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் 19 பிரதேச செயலகங்கள் உள்ளன. அவற்றில் யாழ்ப்பாணத்தில் 15, கிளிநொச்சியில் 4 உள்ளன. பிரதேச செயலகத்திலுள்ள கிராமங்களை முன்னேற்றுவதற்கு 2 ஆயிரத்து 740 வீடுகள் பிரதேச செயலகத்தின்கீழ் கட்டும் நோக்கம் உண்டு. 2025 ஆம் ஆண்டு எல்லோருக்கும் வீடு கட்டி முடித்து விடுவேன்." என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தெரிவித்தார்.
கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் இ. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்புவிருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க. வாமதேவன், உபதவிசாளர் செ. மயூரன், வட்டார உறுப்பினர் சு. கேதீஸ்வரன், ஆசிரியரும், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளருமான செ. பிரதாப், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் திருமதி கூல், வலிகாமம் வலயக் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. மதியழகன், யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் அ. லோகநாதன், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் பேரின்பநாதன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். கைதடி சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள், கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களும் இதில் கலந்து கொண்டனர்.
கைதடி வடக்கு கயிற்றசிட்டி கந்தசாமி கோவில் தலைமைக்குரு சிவஸ்ரீ கணேச குருக்கள் ஆசியுரை வழங்கினார். நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் மாலை அணிவிக்கப்பட்டு, பொன்னாடை போர்த்தி, வாழ்த்து மடல் வழங்கி மதிப்பளிக்கப்பட்டார். விருந்தினர்களும் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டனர். (த-159)

461 கிலோ பீடி இலைகள் மன்னாரில் நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், ஓக.14

மன்னார், ஓலைத் தொடுவாய் கடற்கரையில் இருந்து 461 கிலோ பீடி இலைகள் நேற்றுக் கைப்பற்றப் பட்டுள்ளன என்று கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்தது.

கண்காணிப்புச் சுற்றுக்காவல் நடவடிக்கையின்போது கடற்பரையில் கரையொதுங்கிய நிலையில் பீடி இலைகள் கைப்பற்றப் பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.
கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் யாழ்ப்பாணம் மேலதிக சுங்கத் திணைக்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்தது. (எ-7)

கந்தனுக்குத் தீர்த்தக்கேணி அமைக்கும் பணி ஆரம்பிப்பு

வவுனியா, ஓக. 13
வவுனியா, ஓமந்தை ஆறுமுகத்தான்புதுக்குளம் சிறிகந்த சுவாமி கோவில் தீர்த்தக்கேணி அமைக்கும் பணியை வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் சம்பிரதாயபூர்வமாக நேற்று ஆரம்பித்து வைத்தார்.
சத்தியலிங்கத்தின் பரிந்துரையில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசாவின் கிராம எழுச்சி நிதியில் தீர்த்தக்கேணி அமைக்கும் பணிகள் இடம்பெறவுள்ளன.
ஆரம்ப நிகழ்வில் கிராம அலுவலர், அபிவிருத்தி அலுவலர், வட்டார மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள், தமிழ் அரசுக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ந. கருணாநிதி, இளையோரணி மாவட்ட பொருளாளர் க. கேதீஸ்வரன், ஆலய நிர்வாக உறுப்பினர்கள், கிராம மக்கள் பலரும் இதில் கலந்து கொண்டிருந்தனர். (த-ரி4)

'ஒன்றாக எழுவோம்' திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு உதவிகள்

யாழ்ப்பாணம், ஓக 13
அரச தலைவரின் "ஒன்றாக எழுவோம்" நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பல்வேறு செயற்றிட்டங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் தேவைகள் பிரதேச செயலகங்கள் ஊடாக மாவட்டச் செயலகத்துக்குத் தெரிவிக்கப்பட்டு, அது அரச தலைவர் செயலகத்துக்கு, அனுப்பிவைக்கப்பட்டது. விவசாயிகள் தமக்கு தேவையானவற்றை பிரதேச செயலகங்களுக்கு தெரிவித்தனர். அவை முன் மொழிவுகளாக அனுப்பப்பட்டு பயனாளிக்குக்கான உதவி திட்டங்கள் அந்த அந்தப் பிரதேச செயலகம் ஊடாக வழங்கப்படஉள்ளது. இந்த மாதம் அரச தலைவர் செயலகத்தின் அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்கு வந்து, இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
சூரிய மின்கல தண்ணீர் பம்மி வழங்கல், தண்ணீர் இறைக்கும் இயந்திரம், எள்ளு, குரக்கன் விதைகள் வழங்கல், இஞ்சி செய்கைக்கான மானியம் வழங்கல் போன்ற பல்வேறு உதவி திட்டங்கள் வழங்கப்படவுள்ளன. சுமார் 700க்கும் மேற்பட்ட பயனாளிகள் பயனடைவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக.13
கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மன்னாரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்தது.
இவர்கள் நேற்றுக் காலை சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டனர் என்றும்- அவர்களிடம் இருந்து 230 கிராம் கஞ்சா மீட்கப்பட்டது என்றும் - தெரிவிக்கப்படுகின்றது.
சந்தேகத்துக்கு இடமாக நடமாடியவர்களிடம் விசாரணை மேற்கொண்டபோது அவர்களிடம் கஞ்சா இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது என்றும் - கைது செய்யப்பட்டவர்கள் தற்போது தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் - கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்தது.
(எ-7)

ராஜபக்ச குடும்பத்தினருக்கு மாநாட்டில் முக்கியத்துவம்

கொழும்பு அரசியலில் பலத்த விமர்சனம்

கொழும்பு, ஒக.13

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் முதலாவது தேசிய மாநாட்டில் ராஜபக்ச குடும்பத்தினருக்குக் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டமை தொடர்பாகப் பலத்த விமர்சனங்கள் எழுந்துள்ளன.

மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இருந்த போது, ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த வர்கள் முக்கிய பதவிகளில் அமர்த்தப் பட்டிருந்தனர். நாட்டின் அதிகாரம் முழுவதும் அவர்களின் கைகளிலேயே இருந்தது. அது2015 இல் அவர்களின் தோல்விக்கான முக்கியமான காரண மாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

2015 தோல்விக்குப் பின்னர், தாங்கள் கடந்த காலத் தவறுகளில் இருந்து பாடம் கற்றுக் கொண்டுள்ளோம் என்று ராஜபக்சவினர் கூறிவந்தனர். கடந்த சனிக்கிழமை நாமல் ராஜபக்சவும் கூட ஒரு நிகழ்வில் உரையாற்றியபோது அதனைக் கூறியிருந்தார். எனினும், நேற்றுமுன்தினம் நடந்த சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தேசிய மாநாட்டில் ராஜபக்ச குடும்பத்தினரே, முன்வரிசையை ஆக்கிரமித்திருந்த னர். மகிந்தராஜபக்ச, அவரதுமனைவி ஷிராந்தி ராஜபக்ச, சமல் ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்ச, பசில் ராஜபக்ச உள்ளிட்டோர் முன்வரிசையில் அமர்ந் திருந்தனர்.

அவர்களுக்குப் பின்னர், மகிந்தவின் புதல்வர்களான, நாமல் ராஜபக்ச, யோசித ராஜபக்ச உள்ளிட்ட ராஜபக்ச குடும்பத்தினர் பலரும் அமர்ந்திருந்த னர். கோத்தபாய ராஜபக்சவை அதிபர் வேட்பாளராக நிறுத்தியுள்ள மகிந்த ராஜபக்ச, தாம் அடுத்த பொதுத் தேர்த லில் தலைமை அமைச்சர் பதவிக்காக போட்டியிடுவேன் என்றும், தானும் கோத்தபாய ராஜபக்சவும் இணைந்து ஆட்சியை நடத்துவோம் என்றும் கூறி யுள்ளார்.

இந்தநிலையில் சிறிலங்கா பொதுமக் கள் முன்னணி ஆட்சிக்கு வந்தால் மீண்டும் ராஜபக்ச குடும்ப ஆட்சி வலுப் பெறும் என்பதை நேற்றுமுன்தினம் நடந்த மாநாட்டில் இருந்து உணர முடிந்துள்ளது என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை, மகிந்த ராஜபக்சவுடன் அவரது மனைவி ஷிராந்தி ராஜபக்ச வும் மாநாட்டில் பங்கேற்றதும் கேள்வி களை எழுப்பியுள்ளது. கோத்தாபய ராஜ பக்ச போட்டியிட முடியாதுபோனால், மாற்று வேட்பாளராக அவரை களமி றக்கும் உத்தியாகவும் இருக்கலாம் எனவும் கொழும்பு அரசியல் வட்டாரங் கள் கருதுகின்றன.

முன்னதாக, கோத்தபாய ராஜபக்சவுக் குப் பதிலாக சமல் ராஜபக்சவையே களமிறக்க வேண்டும் என சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் இடது சாரி பங்காளிக் கட்சிகள் வலியுறுத்தி யிருந்தன.

எனினும், அதை மகிந்த ராஜபக்ச செவி மடுக்கவில்லை. கோத்தபாய ராஜபக்ச வையே களமிறக்கியுள்ளார். அத்துடன் தனது மனைவிக்கும் இந்த மாநாட்டில் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்துள் ளார். இது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக பார்க்கப்படுகிறது. அதேவேளை, சமல் ராஜபக்சவின் அர சியல் வாரிசும், ஊவா மாகாண முன் னாள் முதலமைச்சருமான சசீந்திர ராஜபக்ச நேற்றுமுன்தினம் நடந்த மாநாட்டில் நான்காவது வரிசையில் ஒதுக்குப் புறமாகவே அமர்ந்திருந் தார். (எ)

ஆன்மிக வழிபாடுகளில் இறங்கியது மகிந்த அணி

கொழும்பு, ஒக.13

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலை வர் வேட்பாளராக நேற்றுமுன்தினம் கோத்தபாய ராஜபக்ச அறிவிப்பட்டுள்ள நிலையில், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்கள் சமய வழிபாடுகளில் இறங்கியுள்ளனர்.

நாட்டில் உள்ள பிரபலமான மதத் தலங்களுக்குச் சென்று அவர்கள் வழிபாடுகள் நடத்தி வருகின்றனர். பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட் பாளர் அறிமுக நிகழ்வு நேற்று கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றது. அதில் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்த பாய ராஜபக்ச அரச தலைவர் வேட்பாளராக மகிந்த ராஜபக்சவால் அறிவிக்கப்பட்டார். பெரும் ஆரவாரங் கள், கோசங்களுக்கு மத்தியில் மகிந்தா கோத்தாவை அரச தலைவர் வேட்பாளராக அறிவித்திருந்தார்.

அந்த நிகழ்வு நிறைவடைந்ததைத் தொடர்ந்து பொது மக்கள் முன்னணியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச மற்றும் அந்தக் கட்சியின் அரசதலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச உள்ளிட்டோர் களனி ரஜமகா விகாரைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டனர். நேற்று மாலை 6 மணிக்கு அங்கு சென்றனர். விகாரை யிலும் பெரு மளவிலான ஆதரவாளர்கள் கூடியிருந்தனர். அங்கு மகாநாயக்க தேரர்கள் நாட்டுக்காகவும், கோத்தபாய ராஜபக்ச உள்ளிட்ட பிரதநிதிகளுக்காகவும் பிரார்த னைகளில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து நேற்று மகிந்த ராஜபக்ச மற்றும் கோத்த பாய ராஜபக்ச உள்ளிட்டவர்கள் அநுராதபுரத்துக்குச் சென்றனர். நேற்று இரவு இரவு 7 மணிக்கு ருவான் வெலிசாய விகாரையில் நடைபெற்ற ஆசீர்வாத வழிப்பாட்டில் அவர்கள் பங்கேற்றனர். இந்தக் குழு வினர் இன்று காலை ஸ்ரீ மகா போதியையும் வழிப் படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-21)

எம்.பி. வீட்டில் நகை திருட்டு

கொழும்பு, ஒக.13

நாடாளுமன்ற உறுப் பினர் ஒருவரின் வீட் டில் தங்க நகை யொன்று திருடப்பட் டுள்ளது என்று பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மாதிவெலயிலுள்ள நாடாளுமன்ற உறுப் பினர் சுமேதா.ஜீ.ஜய சேனவின் வீட்டி லேயே இந்தச் சம்ப வம் நேற்று முன்தி னம் இடம்பெற்றுள் ளது.

இது தொடர்பில் மிரி ஹான பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு பதிவுசெய்யப்பட் டுள்ளது. பொலிஸா ருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய பொலிஸார் விசார ணைகளை ஆரம்பித் துள்ளனர்.

3பவுண்தங்கவளைய லொன்று திருடப்பட் டுள்ளது என்று முறை யிடப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்த னர். சம்பவம் தொடர் பில் விசாரணை களை ஆரம்பித்துள்ள பொலிஸார் மறைகா ணியின் காட்சிகள் ஊடாகவும் விசார ணை களை முன்னெ டுத்து வருகின்னர் என்று தெரிவித்தனர்.

(எ-21)

நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஒக. 13

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழாவின் பக்தி நிகழ்வு கள் வரிசையில் சிறிலசிறி ஆறுமுகநாவலர் மணிமண்டபத் தில் பஜனை நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இன்று உடுவில் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் ஆலயக் குழுவினரின் பஜனை நிகழ்வு இடம்பெறவுள்ளது. நல்லூர் உற்சவகாலத்தை முன் னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இது இடம்பெறுகின்றது.

★★★

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இடம்பெற்று வருகின்ற "கந்தபுராண எழுச்சி அருள்நெறியில் இன்று மாலை 6.30 மணிக்கு வணக்கத்துக்குரிய நல்லை ஆதீன முதல்வர் சிறிலசிறி சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் இந்துக் குருமார் அமைப்பின் உறுப்பினர், பிரம்மஸ்ரீ ப.சனாதன சர்மா ஆகியோர் திரு முன்னிலை வகிக்க, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரனின் தலைமையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர், வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை முதன்மை விருந்தினராகவும், யாழ்ப் பாணப் பல்கலைக்கழகக் கல்வியியற் துறை விரிவுரை யாளர், இ.சர்வேஸ்வரா சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்க நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட சிறி கற்பக விநாயகர் அறநெறிப் பாடசாலை, அரசடி விநாயகர் அற நெறிப் பாடசாலை மற்றும் இலக்கண சுவாமிகள் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், யாழ்ப்பா ணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட விரிவுரையாளர் தி.செல்வமனோகரனின் 'இடருழப்பச் செய்தனையோ?' எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன. சிறப்புச் சொற்பொழிவின்போது மாணவர்களிடையே சொற்பொழிவு தொடர்பான வினாக்கள் உள்ளடங்கிய வினாத்தாள் வழங்கப்பட்டுச் சிறப்புத் திறனை வெளிப்படுத் துவோருக்குப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளது.

இன்றைய தின நிகழ்வுகளின் சிறப்புநிகழ்வாக கலாவித்தகர் திருமதி சுகன்யா வசந்தனின் இசைக்கச்சேரி இடம்பெறவுள் ளது என்று இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

★★★

நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று மாலை 6.45 தொடக்கம் 7.15 வரை குழு இசை இடம்பெறும். நல் லூர் சாரங்கம் இசைக் கல்லூரி மாணவர்கள் வழங்குவர். வயலின் எஸ்.நிறைஞ்சலா, மிருதங்கம் ஞா.வசந், நெறி யாள்கை வாசஸ்பதி ரஜீந்திரன்.

இரவு 7.15 தொடக்கம் 8.15 வரை வயலினிசை இடம்பெ றும். வயலின் கே.வேலதீபன், மிருதங்கம் கே.பிரணவ கரன், கெஞ்சிரா ஞா.வசந் ஆகியோர் நிகழ்த்துவர். (த)

கிணற்றில் தவறி வீழ்ந்து குழந்தை உயிரிழப்பு

கொழும்பு, ஒக.13

புத்தளம் மாவட்ட நுரைச் சோலைப் பகுதியில் கிணற் றில் தவறி விழ்ந்து இரண் டரைவயதுடையகுழந்தை யொன்று உயிரிழந்துள் ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். கிணற்றில் தவறி விழுந்த குழந்தை ம ரு த் து வ ம னை யில் சேர்க்கப்பட்டது என்றும்- எனினும் சிகிச்சை பய னின்றி குழந்தை உயி ரிழந்தது என்றும் - பொலி ஸார் தெரிவித்தனர். (எ)

ஒரு வாரத்தில் கொழும்பில் 200 மெற்றிக் தொன் கழிவு

கொழும்பு, ஒக.13

கடந்த ஒரு வாரகாலப் பகு தி க் குள் சுமார் 200 மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான குப்பைகள் கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்டபகுதியில் கு வி ந் து ள் ள ன என் று கொழும்பு மாநாகர சபை பிரதி மேயர் எம்.டி.எம். இக் பால் தெரிவித்தார்.

அவற்றை அகற்றும் பணி கள் தீவிரப்படத்தப்பட்டுள்ள நிலையில், சுமார் 80 வீத மான குப்பைகள் சேகரிக் கும் பணிகள் நிறை வடைந் துள்ளன என்றும் அவர் - மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கொழும்பு பகுதியில் சேரும் குப்பை களை அறுவக்காலு பகு தி க் கு கொண்டு செல்வதற்கு புத்தளம் பிரதேச வாசிக ளால் எதிர்ப்பு தெரிவிக்கப பட்டதை அடுத்து, பொலிஸ் பாதுகாப்புடன்குப்பைகளை அந்தப் பகுதிக்கு கொண்டு செல்லும் நடவடிக்கைகள் முன் னெடுக்கப்படுகின் றன. (எ)

ஹஜ் பெருநாளை மிகச் சிறப்பாக கொண்டாடினர் முஸ்லிம் மக்கள்

யாழ்ப்பாணம், ஒக.13

நாடு முழுவதும் முஸ்லிம் மக்களால் நேற்று ஹஜ் பெருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட் டது. ஹஜ் பெருநாள் சிறப்புத் தொழுகைகளி லும் முஸ்லிம் மக்கள் ஈடுபட்டனர்.

நாட்டில் உள்ள பள்ளிவாசல்களில் நேற்றுக் காலை தொழுகைகள் நடைபெற்றன.

வவுனியாவில் பள்ளிவாசல்களில் தொழுகை கள் நடைபெற்று. பெருநாள் திடல் தொழுகை, பட்டைக்காடு குடாவயல் திடலில் நடைபெற் றது. மௌலவி ஏ.தஸ்ணீம் தலைமையில் திடல் தொழுகை நடைபெற்றது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிவாசல்களிலும் ஆண்,பெண் இருபாலா ருக்கும் தனித்தனியாக பெருநாள் தொழுகை கள் இடம் பெற்றன. மன்னார் மூர்வீதி ஜீம்மா பள்ளி வாசலில் காலை 8 மணிக்கு பெருநாள் தொழுகை இடம்பெற்றது.

மூர்வீதி ஜீம்மா பள்ளிவாசல் மௌலவி எஸ். ஏ. அஸீம் தலைமையில் பெருநாள் தொழுகைகள் மற்றும் சிறப்பு பிரார்த்தனை களும் இடம் பெற்றன.

மலையகத்தில் ஹஜ் பெருநாள் பண்டிகை சிறப்புத் தொழுகையில் பின்னர் வெகு விமர் சையாக கொண்டாடப்பட்டது.

ஹற்றன் நகரில் பிரதான ஜும்மா பள்ளிவா சலில் முஸ்லிம் மக்கள் சிறப்பு ஹஜ் பெரு நாள் தொழுகையிலும் பிரார்த்தனைகளிலும் ஈடுப்பட்டனர்.

(எ-56,110)

சஜித்தை களமிறக்காவிட்டால் சுயேச்சையாகப் போட்டியிடுவோம்

சமீர பெரோ தெரிவிக்கிறார்

கொழும்பு, ஓக. 13

அரசதலைவர் வேட்பாளராக சஜித் பிரேமதாசவை ஐக்கிய தேசியக் கட்சி களமிறக்காவிட்டால் சுயேச்சையாக போட்டியிடுவோம் என்று மக்கள் தேசிய ஒன்றியத்தின் அமைப்பாளர் சமீர பெரோ தெரிவித்தார்.

ஹற்றனில் நேற்றுமுன்தினம் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சர் சஜித் பிரேமதாசவை அரசதலைவர் வேட்பாளராக்குமாறு இலங்கை நாட்டு மக்கள் கோருகின்றனர். நாமும் அதையே வலியுறுத்துகின்றோம்.

சஜித் பிரேமதாசவைக் களமிறக்காவிட்டால், கோத்தபாய ராஜபக்ச வெற்றிபெற வழியேற்படுத்திவிடும். ஐ.தே.கட்சியின் கதையும் முடிந்துவிடும்.

அத்தோடு, கோத்தபாய ராஜபக்ச இந்த நாட்டின் புதிய தலைவரா? அவர் எவ்வாறு புதிய நாட்டை உருவாக்குவார். அவர்களின் காலத்தில்தான் பிரிட்டனிலிருந்து இலங்கைக்கு குப்பைகள் கொண்டு வரப்பட்டன. இராணுவப் பாதுகாப்பு தனியாருக்கு விற்கப்பட்டது. சீனாவிடமிருந்து பெருமளவில் கடன் சுமை பெற்று, இந்த நாட்டை கடன்கார நாடாக மாற்றியுள்ளனர்.

இவ்வாறான நபர் எவ்வாறு இந்த நாட்டின் அரச தலைவராக வர முடியும்- என்றார். (த)

தமிழ்க் கட்சிகளுடன் கூட்டாகச் செயற்படத் தயார் பூனைக்கு யார் மணி கட்டுவது என்பதுதான் குழப்பம்

சீ.வீ.கே. சிவஞானம் இப்படித் தெரிவிக்கிறார்

யாழ்ப்பாணம், ஓக. 13

தமிழ்க் கட்சிகளுடன் கூட்டாகச் சேர்ந்து செயற்பட நான் தயாராக உள்ளேன். ஆனால் பூனைக்கு யார் மணி கட்டுவது என்பதில் குழப்பம் வரும். ஆகவே அது சாத்தியமற்றது என்று வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கே: மகிந்த தரப்பினரைக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் சந்திப்பது தொடர்பாக?

ப: நாம் எல்லாக் கட்சியுடனும் கதைக்கின்றோம். அப்போதுதான் அவர்களின் நிலைப்பாடு எமக்குத் தெரியவரும். எமக்குத் தேவையான வற்றை யார் தருவார்கள் என்று தெரிந்து வைத்துகொள்ள வேண்டும். அப்போதுதான் எமது உரிமைக்காகப் பேரம் பேச முடியும்.

கே: அரசதலைவர் வேட்பாளர் கோத்தபாயவை ஆதரிப்பது தொடர்பாக

ப: எல்லா கட்சியும் முதலில் அவர்களின் அரச தலைவர் வேட்பாளரை அறிவிக்கட்டும். அதன் பின்னர் எமது மக்களுக்குத் தேவையான தீர்வு பற்றி எந்த கட்சி தங்கள் நிலைப்பாட்டைத் தெரிவிக்கும்போது எவை நன்மை என்று தெரிகின றனவோ அதன் பின்னர் ஆதரவு தொடர்பில் தீர்மானிக்கலாம். எமக்கான தீர்வு தொடர்பில் அவர்கள் வெளிப்படையாகச் சிங்கள மக்களுக்குச் சொல்ல வேண்டும்.

கே: தமிழ் கட்சிகள் ஒன்றாக நின்று உரிமைக்காகக் குரல் கொடுப்பது தொடர்பாக?

ப: எல்லாருடனும் பேசுவதற்கு, கூட்டாக செயற்படுவதற்கு நான் தயார். உங்கள் உங்கள் கட்சியில் நீங்கள் நில்லுங்கள். பரவாயில்லை. ஆனால் ஏனைய கட்சிகள் கூட்டாகச் சேர்வதற்குச் சிந்திக்க மாட்டார்கள். பூனைக்கு யார் மணி கட்டுவது என்பது போல, யார் தலைவன் என்பதில் அங்கு ஒரு பிரச்சினை நிகழும்.

கே: கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த தரப்புடன் ஆதரவாக இருப்பதாகக் கூறும் தகவல் ஒன்றை அனுப்பியதாகச் சொல்லப்படுகிறது.

ப: அது அவரின் தனிப்பட்ட விருப்பம். ஆனால் கட்சியாகச் சேர்ந்து ஒரு முடிவு எடுக்கும்போது அவர் அதற்குக் கட்டுப்பட்டவராக இருப்பார். (த-7)

பிரதேச சபை உறுப்பினருக்கு மறியல்

கொழும்பு, ஓக.13

ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட கருவலகஸ்வெவ பிரதேச சபையின் உறுப்பினர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

28 வயதுடைய குறித்த நபர் 700 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்று கொழும்பு போதை ஒழிப்பு பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். நேற்று அவர் ஆனமடுவ நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ)

டெனீஸ்வரனின் பதவி நீக்கத்துக்கும் கூட்டமைப்புக்கும் சம்பந்தமில்லை

அவைத்தலைவர் சீ.வீ.கே. விளக்குகிறார்

யாழ்ப்பாணம், ஓக. 13

வடக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சர் பா.டெனீஸ்வரன் பதவிநீக்கம் செய்யப்பட்டமை தொடர்பில் கூட்டமைப்பை இணைத்துப் பேசுவது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுவது மாதிரியானது என்று வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பா.டெனீஸ்வரன், தான் பதவிநீக்கம் செய்யப்பட்டமை சட்டரீதியானது அல்ல என்று விக்னேஸ்வரனுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு கடந்த 5ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. அது பற்றி எமது கருத்துக் கேட்கப்பட்ட போது அதன் மீது கருத்துத் தெரிவிப்பதைத் தவிர்க்க விரும்புவதாக கூறிவந்தேன்.

இப்பொழுது இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தொடர்புபடுத்தி விமர்சனங்கள் செய்யப்படுவதனால் அவற்றுக்குப் பதிலளிக்க வேண்டிய கடப்பாடு அவைத் தலைவர் என்ற முறையில் மட்டுமன்றி இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் மூத்த துணைத் தலைவர் என்ற வகையிலும் எனக்கு உண்டு.

கடந்த மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட எவரும் இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் 1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மகாண சபைகள் சட்டம், மாகாண சபைகள் தேர்தல் சட்டம் போன்றவற்றைத் தெரிந்துகொண்டுதான் போட்டியிட்டனர். இவர்களில் எவரும் தமக்கு இந்தச் சட்டங்கள் தெரியாது என்று கூறிவிடமுடியாது.

13ஆவது அரசமைப்புத் திருத்தச்சட்டம் வலுவற்றது என்பது இப்பொழுதுதான் தெரியவந்தவிடயமல்ல. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை இது முழுமைசெய்யவில்லை என்று ஏற்கனவே நாம் எல்லோருமே கூறியிருக்கிறோம். இதனைத் தெரிந்து கொண்டுதானே செயற்படவேண்டும்! நீதிமன்றம் கூட அமைச்சரை முதலமைச்சர் நீக்கமுடியாது என்று கூறவில்லை. அதனைச் சட்ட ஏற்பாட்டின் படி முறைப்படியாகச் செய்யலாம் என்றே கூறியுள்ளது. அரசமைப்பின் உறுப்புரை 154 ஊ (5) பின்வருமாறு கூறுகின்றது.

"ஆளுநர் முதன்மை அமைச்சரின் ஆலோசனையின் மீது அந்த மாகாணத்துக்கென அமைக்கப்பட்ட மாகாண சபையின் உறுப்பினர்களில் இருந்து ஏனைய அமைச்சர்களை நியமித்தல் வேண்டும்"

இதற்கமையத்தானே முதலமைச்சர் சகல அமைச்சர்களின் நியமனங்களையும் ஆளுநருக்கு ஆலோசனை வழங்கி மேற்கொள்வித்தார். டெனீஸ்வரன் தவிர்ந்த ஏனைய அமைச்சர்களின் பதவி நீக்கம் அல்லது பதவி விலகல் தொடர்பாகவும் ஆளுநருக்கு ஆலோசனை வழங்கியே மேற்கொள்ளப்பட்டன. அப்பொழுதெல்லாம் அமைச்சர்களை நியமிக்க அல்லது நீக்க முதலமைச்சருக்கு அதிகாரம் இல்லை என்று தெரியவில்லையா? என்ற கேள்வி இயல்பாக எழுகிறதே.

இந்த விடயத்தில் இந்திய அரசமைப்பின் உறுப்புரிமை 164 (i) அச்சொட்டாக இதே வார்த்தைகளையே கொண்டுள்ளது. அதாவது முதலமைச்சரின் ஆலோசனையின் பெயரிலேயே அமைச்சர்களை நியமிக்கலாம் என்ற ஏற்பாடு ஆண்டாண்டு காலமாக இந்தியாவில் நடைமுறையில் உள்ளது. அதுவே இந்த நாட்டின் அரசமைப்பிலும் உள்ளது.

அறிவிலித்தனம்

மாகாண சபைகள் சட்டம் தொடர்பாகப் பேசுபவர்களும் எழுதுபவர்களும் இந்தக் கட்டமைப்பு பற்றிய சட்ட ஏற்பாடுகள் மிகப்பெரும்பாலானவை இந்திய அரசமைப்பின் மீள்பதிப்பாகவே இருப்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். அமைச்சர்களின் நியமனம் இருதரப்பு இணைந்த செயற்பாடு என்பதை சபைக் கூட்டங்களிலே நான் தெளிவுபடுத்தியிருக்கின்றேன்.

நியமன அதிகாரம் ஆளுநருக்கே உண்டு. ஆனால் அவர் அதனைத் தன்னிச்சையாகச் செய்யமுடியாது. முதலமைச்சரின் ஆலோசனையின் பெயரிலேயே நியமிக்க முடியும். நியமன அதிகாரத்துக்கும் ஆலோசனை அதிகாரத்துக்கும் உள்ள வேறுபாடு தெளிவானது. ஆலோசனை வழங்கும் அதிகாரம் முதலமைச்சருக்கே உண்டு.

ஆகவே முதலமைச்சருக்கு அதிகாரம் இல்லை என்று கூறுவது அறிவிலித்தனமாகும்.

அமைச்சர்களின் நியமனம் மற்றும் பதவி நீக்கம் பற்றி ஆளுநருக்கு ஆலோசனை வழங்கவேண்டிய முதலமைச்சர், தாமே நேரடியாக சட்டத்துக்கு முரணாகப் பதவி நீக்கத்தை மேற்கொண்ட நிலையில் பார்த்தீர்களா அமைச்சர்களை நீக்கக்கூட முதலமைச்சருக்கு அதிகரமில்லை என்று கூறுவது அர்த்தமற்றது.

விதண்டாவாதம்

நியமனம் ஆளுநரால் செய்யப்பட்டால் மட்டுமே அரசிதழ் வெளியீடு எழும்.

நியமனம் அல்லது பதவி நீக்கம் என்பது சம்பந்தப்பட்டவருக்கு எழுத்து மூலம் ஆளுநரால் வழங்கப்பட வேண்டியது என்பதையும் நான் சபையிலே சுட்டிக்காட்டியிருக்கிறேன். எனவே அமைச்சர்களை நீக்கும் அதிகாரம் முதலமைச்சருக்கு இல்லை என்ற வாதம் விதண்டாவாதம்.

கூட்டமைப்பில் தவறில்லை

நிச்சயமாக முதலமைச்சருக்கு அந்த அதிகாரம் உண்டு. ஆனால் அது ஆளுநர் ஊடாகநிறைவேற்றப்படவேண்டும் என்பதே ஏற்பாடு. இந்தியாவிலும் இதுதானே நடைமுறை. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தவறு எங்கே இருக்கின்றது?. ஏதோ 13ஆவது திருத்தச் சட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் வரைந்து நிறைவேற்றியது போன்று தவறான கருத்தை விதைக்க முயற்சிக்கப்படுகின்றது கண்கூடு.

எமது மக்கள் உண்மை நிலைமையைப் புரிந்துகொள்வார்கள் என்றே நம்புகிறேன். சட்ட ஏற்பாடுகள் முறையாகப் பின்பற்றப்படவில்லை என்பதே விடயப்பொருளாக நீதிமன்றத் தீர்ப்புக்கு உள்ளாகியது.

அதற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் என்ன சம்பந்தம்?. மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது மாதிரியானதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதான குற்றச்சாட்டு - என்றார். (த-7)

அரச தலைவர் தேர்தலில் போட்டியிட்டு வெல்வேன்

அமைச்சர் சஜித் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 13

நடக்கவுள்ள அரச தலைவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவேன் என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும், அமைச்சருமான சஜித் பிரேமதாச

அநுராதபுரம், திறப்பனவில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் போட்டியிட நான் தயாராக இருக்கிறேன். எனக்கு ரஜரட்டை மக்களின் ஆதரவு தேவை. நாட்டில் உள்ள அனைத்து மக்களின் ஆதரவும் எனக்கு உறுதி செய்யப்பட்டால், தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர், நாட்டிற்கு ஒரு புதிய யுகத்தை உருவாக்க தயாராக இருக்கிறேன். - என்றார். (எ)

ரணிலின் தலையில் துப்பாக்கி வைத்து கையெழுத்திட நாம் முயற்சிக்கவில்லை

அமைச்சர் மனோ கணேசன் தெரிவிக்கிறார்

கொழும்பு, ஓக. 13

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருக்கும் குப்பைகளை வெளியே கொண்டு வந்து கழுவ வேண்டாம். கட்டாயப்படுத்தி ஒரு கூட்டணியை உருவாக்க வேண்டிய தேவை எமக்கு இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாக்குச் சென்று கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலையில் துப்பாக்கியை வைத்து நாம் இந்தக் கூட்டணி உடன்பாட்டில் பலவந்தமாகக் கையெழுத்திட முயற்சிக்கவில்லை. இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஜனநாயக மக்கள் முன்னணி ஆகியவற்றின் தலைவரும், தேசிய ஒருமைப்பாடு, அரசகருமமொழிகள், சமூக மேம் பாடு, இந்து சமய விவகார அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மாத்தறை தெணியாய பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று அவரது ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

திருமணம் செய்வதற்கு ஆணும் சம்மதம் தெரிவிக்க வேண்டும். பெண்ணும் சம்மதம் தெரிவிக்க வேண்டும். அப்போதே திருமணம் நடக்கும். கூட்டணி அமைப்பதும் இப்படித்தான்.

கூட்டணி அமைப்பதற்கும் அதசதலைவர் வேட்பாளர் தெரிவு செய்யப்படுவதற்கும் எந்தவித தொடர்பும் இல்லை. உண்மையில் இங்கே பெரும் பிரச்சினையில்லை. குழப்பமடையத் தேவையில்லை. இந்த முறை அரசதலைவர் வேட்பாளர் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினராக இருக்க வேண்டும் என்று நாம்தான் தீர்மானித்தோம். இந்த யோசனையை நானே முதலில், ஜனவரி மாத கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் தெரிவித்தேன்.

ஐ.தே.கவிலுள்ள சேனநாயக்கவின், ஜெயவர்த்தனவின், பிரேமதாசவின் புத்திரன்கள், பேரன்கள், கொள்ளுப்பேரன்கள் சிந்தித்து ஒழுங்கான முடிவை எடுங்கள். ஒருநாளில் இந்தப் பிரச்சினையை தீர்க்கலாம். ஐக்கிய தேசியக் கட்சியையும், நாடாளுமன்ற உறுப்பினர் குழுவையும் கூட்டுங்கள். தேநீர், கோப்பி வழங்குங்கள். கூட்டத்தில் எவருக்குப் பெரும்பான்மை ஆதரவு இருக்கின்றது என்பதை கண்டறியுங்கள்.

மக்கள் விரும்பும் வேட்பாளரைப் பெயரிடுவதை ஐ.தே.கவின் உள்ளே இருந்து தடுத்து கொண்டு சிலர் இருக்கின்றனர். இவர்கள் எதிர்க்கட்சியுடன் இரகசிய உடன்பாடு கண்டுள்ளார்கள் எனவும் நான் சந்தேகிக்கின்றேன்.

இனிமேல் நாம் பொறுக்க மாட்டோம். எமது பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு. உங்கள் வேட்பாளர் பெயரை எங்களுக்கும் அறிவியுங்கள். நீங்கள் சொல்லும் வேட்பாளருடன் எமக்கும் உடன்பாடு இருந்தால் நாம் உங்களுடன் வருகிறோம். இல்லாவிட்டால் வெளியேறுகிறோம். நீங்கள் உங்கள் வேட்பாளரை அழைத்துக்கொண்டு தேர்தலுக்குச் செல்லுங்கள்.

அரசதலைவர் தேர்தலில் வென்றால் போதாது. அதன்பிறகு நாடாளுமன்றத் தேர்தலில் ஐ.தே.கவுடன்தான் நாம் வர வேண்டும் என்று சொல்லி எம்மைப் பயமுறுத்த முயற்சிக்க வேண்டாம். தமிழ் முற்போக்குக் கூட்டணி நாடு முழுக்க அனைத்து மாவட்டங்களிலும் தனித்துப் போட்டியிடத் தயார்.

எங்களுக்கு உடன்பாடு இல்லாத வேட்பாளரை அரசதலைவர் தேர்தலில் நிறுத்தினாலோ, தேவையில்லாமல் உட்கட்சி சண்டை போட்டுக்கொண்டு, உங்கள் கட்சிக்குள் இருக்கும் குப்பைகளை வெளியே கொண்டு வந்து கழுவி நாறடித்தாலோ, நாம் கூட்டணியில் இருந்து வெளியேறுவோம். எம்மைப் போலவே ஏனைய சிறு கட்சிகளும் வெளியேறும் என நான் நினைக்கிறேன். அதன்பிறகு ஐ.தே.க. தனியாக சுடுகாட்டுக்குச் செல்லலாம். உங்களுடன் சுடுகாடுவரை பயணிக்க நாம் தயாரில்லை. இந்தநாட்டின் மிகப்பெரும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை அதற்குள்ளே இருக்கும் சிலர், இன்னமும் குறைந்தபட்சம் பதினைந்து வருடங்களுக்கு தலையெடுக்க விடாமல் அரசியல் புதைகுழியில் தள்ள முயற்சிக்கிறார்கள். கட்சிக்கு உள்ளே இருந்துக்கொண்டு சதித்திட்டம் தீட்டுகிறார்கள். அது நாம் அல்ல. அவர்கள் ஐ.தே.கவின் உள்ளேதான் இருக்கிறார்கள். நான் சொல்வதில் உள்ள உண்மையை நாடு முழுக்க உள்ள இலட்சக்கணக்கான ஐ.தே.கவின் அடிமட்ட உறுப்பினர்கள் புரிந்துக்கொள்வார்கள் என நான் நம்புகிறேன் - என்றுள்ளது. (த)

ஐ.தே.க. குட்டியானைகளை இன்று சந்திக்கின்றார் சஜித்

கொழும்பு, ஓக.13

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும், அந்தக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மிடையிலான சிறப்புச் சந்திப்பொன்று இன்று இரவு 8 மணிக்கு கொழும்பு ஹில்டன் விடுதியில் நடைபெறவுள்ளது என்று அறிய முடிகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் மலரவுள்ள புதிய அரசியல் கூட்டணி சார்பில் சஜித் பிரேமதாசவே அரசதலைவர் வேட்பாளராகப் போட்டியிட வேண்டும் என அந்தக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தி வருகின்றனர். அண்மையில் இடம்பெற்ற ரணிலுடனான சந்திப்பின்போதும் சஜித்தை அரச தலைவர் வேட்பாளராக முன்மொழிய வேண்டும் என்று வலியுறுத்திக் கடிதம் ஒன்றைக் கையளித்திருந்தனர். அரச தலைவர் வேட்பாளர் விவகாரம் தொடர்பாக முடிவெடுப்பதற்காகக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தையும், நாடாளுமன்றக் குழுவையும் ஒரே நேரத்தில் கூட்ட வேண்டும் என்றும் அவர்கள் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பு விதிமுறைகளுக்கு அமைவாக தேர்தல்கள் ஆணையாளர் அரச தலைவர் தேர்தலுக்கான திகதியை அறிவித்த பின்னர் தான் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசதலைவர் வேட்பாளரும் அறிவிக்கப்படுவார் என்று பிரதிச் சபாநாயகர் அண்மையில் கூறியிருந்தார்.

கூட்டணி அமைத்தபின்னரே வேட்பாளர் தெரிவு என்பதில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க விடாப்பிடியாகஉள்ளார். இதேவேளை- அரச தலைவர் வேட்பாளர் தானே என்பதை சூட்சுமமாக சஜித் பிரேமதாச மேடை நிகழ்வுகளில் தெரிவித்து வருகிறார். அவருக்கு கட்சியின் உயர்மட்ட நாடாளுமற்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் ஆதரவும் உள்ளது. இந்த நிலையிலேயே அவர் இன்று பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்திக்கவுள்ளார் என்று அறிய முடிகின்றது. (எ-21)

ஜே.வி.பியின் வேட்பாளர் தயார் நிலையில் உள்ளார்!

அந்தக் கட்சியின் பொதுச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.13

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர் தயார் நிலையில் உள்ளார் என்று மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

அரச தலைவர் வேட்பாளர் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அந்தக் கட்சியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலில் நிறுத்தப்போகும் வேட்பாளரை மக்கள் விடுதலை முன்னணி தீர்மானித்து விட்டது. எதிர்வரும் 18ஆம் திகதிவரை அவரது பெயரை வெளிப்படுத்தப் போவதில்லை.

வேட்பாளராகப் போட்டியிடப் போவது, கட்சியின் தலைவர் அனுரகுமார திசநாயக்கவா அல்லது, களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸவா என்பதை இப்போது கூறமாட்டேன். முற்போக்கு சக்திகளின் சார்பில் நாங்கள் தனித்து வேட்பாளரை நிறுத்தவில்லை. பல அமைப்புக்களுடன் இணைந்தே நிறுத்துகிறோம்.

காலிமுகத் திடலில் எதிர்வரும் 18ஆம் திகதி நடத்தப்படும் பேரணியிலேயே வேட்பாளரின் பெயரை அறிவிக்க வேண்டும் என அவர்களுடன் இணங்கியுள்ளோம். அதற்கு முன்னர் பெயரை வெளியிடுவது நியாயமற்றது. புத்திஜீவிகள், இடதுசாரிக் கட்சிகள், சிவில் அமைப்புகள் இணைந்து இந்த தேர்தலை எதிர்கொள்ளவுள்ளோம், ஜாதிக ஜன பலவேகய முன்னணியை ஆரம்பித்துள்ளோம். எமது வேட்பாளரை அந்த முன்னணியே தீர்மானிக்கும் - என்றார். (எ)

லக்சபான நீர்த் தேக்க வான்கதவுகள் திறப்பு

கொழும்பு, ஓக.13

மலையகத்தில் தொடரும் சீரற்ற காலநிலைக் காரணமாக லக்சபான நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதனால் களனி ஆற்றை அண்மித்த பகுதியில் வசிப்பவர்களை மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. நுவரெலியா, ஹற்றன், கொட்டகலை உள்ளிட்ட பகுதிகளில் கன மழை பெய்து வருகிறது. அதனால் கொட்டகலை கிறிஸ்னஸ்பாம் தோட்டப் பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த 22 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் - பாதிக்கப்பட்டவர்கள் உறவினர்களின் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)



தமிழருக்கு அரசியல் தீர்வில்லாத அபிவிருத்தி என்பது ஒரு மாயை!

பச்சிலைப்பள்ளி தவிசாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஓக. 13

பொதுமக்களின் கோரிக்கைக்கு அமையவே அபிவிருத்தியையும் அரசியல் உரிமையையும் சமாந்தரமாகக் கொண்டு செல்ல வேண்டிய நிலையிலுள்ளோம். அரசியல் தீர்வற்ற அபிவிருத்தி என்பது எங்களுக்கு ஒரு மாயை. அது எந்த வினாடியும் அபிவிருத்தியை இல்லாமல் செய்து விடலாம்.

இவ்வாறு பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு. சுரேன் தெரிவித்தார்.

கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் பரிந்துரையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆலயங்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்களின் நிர்வாகிகளை தவிசாளர் நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பச்சிலைப்பள்ளி பிரதேச காரியாலயத்தில் இது நடைபெற்றது.

அதன்போதே அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதுவரை காலமும் உரிமை சார்ந்த அரசியலை மட்டுமே முன்னெடுத்து வந்தோம். ஆனாலும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு அவர்களுடைய அன்றாடப் பிரச்சினைகளையும் நிவர்த்தி செய்ய கூட்டமைப்பினர் முன்வர வேண்டும் என்பதே. அந்த வேண்டுகோளை நிறைவேற்றுவதற்காக நாங்கள் அபிவிருத்தியையும் அரசியல் உரிமையையும் சமாந்தரமாகக் கொண்டு செல்ல வேண்டிய நிலையிலுள்ளோம்.

அந்த அடிப்படையிலேயே தற்பொழுது இரண்டு விடயங்களையும் எங்களுடைய மக்கள் நலனுக்காக முன்னெடுத்து வருகின்றோம். அரசியல் தீர்வை எட்டிப்பிடிக்க வேண்டும் என்கின்ற நிலைப்பாட்டில் நாங்கள் இருக்கின்றோம். ஏனென்றால் அரசியல் தீர்வு அற்ற அபிவிருத்தி என்பது எங்களுக்கு ஒரு மாயை. அது எந்த வினாடியும் அபிவிருத்தியை இல்லாமல் செய்து விடலாம். எங்களுக்கென்று ஆட்சி அதிகாரம் நிலையாக இருக்குமாயின் நாங்கள் எங்களைக் கட்டியெழுப்ப முடியும். இதை நீங்கள் மனதில் வைத்திருங்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்திக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார் - என்றார்.

சந்திப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உப தலைவரும், வடக்குமாகாண முன்னாள் அமைச்சருமான குருகுல ராஜா, பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உபதவிசாளர் கஜன், உறுப்பினர்களான ரமேஷ், வீரவாகுதேவர், அருட்செல்வி, கோகுல்ராஜ் போன்றோரும் கலந்து கொண்டனர் என்று சுரேனின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

கட்சிகளுடன் கலந்துரையாடி வேட்பாளரை பெயரிடுவோம்

அமைச்சர் நவீன் தெரிவிப்பு

அனைத்து அரசியல் கட்சிகளின் ஆலோசனைகளையும் கருத்தில் கொண்டு அரச தலைவர் வேட்பாளர் தெரிவு செய்யப்படுவார் என அமைச்சர் நவீன் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் நிகழ்வொன்றில் கலந்து கொண்டவர் அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் ஒரு குடும்பத்துக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட அரசியல்கட்சி அல்ல. பல்வேறு அரசியல்கருத்துக்களைக்கொண்ட அரசியல் அணிகளே எம்மிடம் உள்ளனர். அவர்களுடன் கலந்துரையாடித் தான் நாம் எமது அரச தலைவர் வேட்பாளரை முன்னிறுத்துவோம்.

மிகவும் ஜனநாயகமான முறையிலேயே அனைத்து அணிகளின் கருத்துக்களுக்கு முன்னுரிமை கொடுத்து நாம் அந்தத் தீர்மானத்தை மேற்கொள்வோம் - என்றார். (எ)

தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒருமித்த உடன்பாட்டுக்கு வரவேண்டும்

முன்னாள் எம்.பி. சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்துகிறார்

யாழ்ப்பாணம், ஓக. 13

அரசதலைவர் தேர்தலில், சிங்கள வாக்குகள் பிரிந்து செல்கின்ற நிலையில், முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களின் வாக்குகள் மிக முக்கிய பங்கு வகிக்கப் போகின்றன. எனவே அரசதலைவர் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒருமித்த பொதுவான உடன்பாட்டுக்கு வர வேண்டும். தமிழ் இனத்தின் விடுவிக்காக இத்தகைய முடிவு எட்டப்படுவது காலத்தின் கட்டாயம்.

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - கட்டப்பிராயிலுள்ள அவரது வீட்டில் நேற்றுமுன்தினம் மாலை நடந்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசதலைவர் தேர்தலில் சில கட்சிகள் தங்கள் வேட்பாளர்களை அறிவித்திருக்கின்ற நிலையில் இன்னும் சில கட்சிகள் இன்னும் அறிவிக்காத நிலை காணப்படுகின்றது. அடுத்த அரசதலைவர் தேர்தலில் பல முனைப் போட்டிகள் ஏற்படவுள்ளன. சிங்கள வாக்குகள் பிரிந்து செல்கின்ற நிலையில் முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களின் வாக்குகள் மிக முக்கிய பங்கு வகிக்கப் போகின்றன. ஆகையால் தமிழர் தரப்பு இதனைச் சரியான வகையில் கையாள வேண்டிய பொறுப்பு இருக்கின்றது. ஏனெனில் கடந்த காலங்களில் அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு வந்தவர்கள் ஏமாற்றிவிட்டார்கள் என்று தமிழ்த் தரப்புக்களே கூறுகின்றநிலையில். இந்தமுறைசரியான தொரு தீர்மானத்தை எடுத்து, தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். குறிப்பாக அரசியல் கைதிகள் விடுதலை, காணி விடுவிப்பு, பொளத்த மயமாக்கலை நிறுத்துதல் உட்பட இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயங்களை அரசதலைவர் தீர்க்கக் கூடியதாக இருக்கும்.

ஆகவே இந்த விடயங்களை முன்னிலைப்படுத்தி தமிழர் தரப்பில் இருக்கின்ற தமிழ்த் தேசியக் கட்சிகளான ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியன ஒருமித்த பொதுவான முடிவுக்கு வர வேண்டும். தமிழர்களின் பிரச்சினை

களைத் தீர்த்து வைக்கின்றவர்களுக்கே ஆதரவு என்ற ஒரு உடன்பாட்டுக்கு வரவேண்டும். அத்தகைய ஓர் உடன்பாட்டைத் தமிழ்க் கட்சிகளுக்கிடையே ஏற்படுத்தி, அதனைப் போட்டியிடும் வேட்பாளர்களிடம் முன்வைத்து பேச்சு நடத்த வேண்டும். அவ்வாறு இணைந்து செயற்படுவதே இனத்தின் நலனுக்குச் சிறந்தது.

அதனைவிடுத்து தனித்தனியாக முடிவெடுத்துச் செயற்படுவோமாக இருந்தால் அது பல பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே இந்த விடயத்தில் அனைவரும் சிந்தித்து இனத்தின் நன்மைக்காக ஒருமித்துச் செயற்பட வேண்டும் - என்றார்.

(த-ரி)

மன்னார் அபிவிருத்திக்கு ரெலோ குழு அமைப்பு

மன்னார், ஓக. 13

மன்னார் மாவட்டத்தின் அனைத்து பிரதேசங்களின் அபிவிருத்தித் தேவைகளை ஆராய்ந்துசீரானஅபிவிருத்தி வேலைகளைச் செயற்படுத்த ரெலோவின் மாவட்ட அமைப்பாளர் மோகன்ராஜ் தலைமையில் 11 பேர் கொண்ட திட்டமிடல் அபிவிருத்திக் குழு தெரிவு செய்யப்பட்டது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும், நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித் தலைவரும், வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் ரெலோவின் மன்னார் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சந்திப்பு இடம்பெற்றிருந்தது. அதில் இந்தக் குழு தெரிவுசெய்யப்பட்டது.

சந்திப்பில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் மன்னார் மாவட்ட அமைப்பாளரும், மன்னார் பிரதேச சபை உறுப்பினருமான ஏ.ரி.மோகன்ராஜ், துணை அமைப்பாளர் வினோ, மன்னார் நகரமுதல்வர் அன்ரனி டேவிட்சன், நானாட்டான் பிரதேச சபை உபதவிசாளர் லூர்துநாயகம், மன்னார் மாவட்ட இளைஞரணி செயலர் பிறேம்குமார் உட்பட மன்னார் நகரசபை, மன்னார், மாந்தை, நானாட்டான், முசலி பிரதேசசபைகளின் உறுப்பினர்கள் மற்றும் பிரதேச இளைஞரணி செயலர்கள், உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் போட்டியிட்ட அபேட்சகர்கள் கலந்துகொண்டனர்.

இங்கு செல்வம் அடைக்கலநாதனின் நிதி ஒதுக்கீட்டிலான அபிவிருத்திகள் மீளாய்வு செய்யப்பட்டன.

(த-56)

கொக்கைனுடன் வெளிநாட்டு பெண் கைது

கொழும்பு, ஓக.13

ஒரு தொகைப் போதைப் பொருளுடன் வெளிநாட்டுப் பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார் என்று சுங்கத்தி ணைக்களம் தெரிவித்துள்ளது.

சென்னையில் இருந்து கொழும்புக்கு வந்த 37 வயதான இந்தியப் பெண்ணொருவரே கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரிடமிருந்து 18 மில்லியன் ரூபா பெறுமதியான 1.25 கிலோ கிராம் கொக்கையின் போதைப்பொருள்கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபரை பொலிஸார் ஊடாக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் சுங்கப்பிரிவினர் தெரிவித்தனர். (எ)

புதிய அரசமைப்பைக் கொண்டுவரக்கூட மைத்திரி– ரணில் அரசு விரும்பவில்லை

நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஓக. 13

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவோ, ரணில் விக்கிரமசிங்கவோ அரசமைப்பைக்கூட செய்து தர விரும்பாதவர்களாக உள்ளனர். வேலைவாய்ப்புக்களை வழங்க முடியாத அரசாக இது உள்ளது. தமிழ் மக்களுக்கு இந்த அரசு எதையும் செய்திருக்கவில்லை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனின் மக்கள் சந்திப்பு கிளிநொச்சி கோணாவில் பொது நோக்கு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில்உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக தலா ஐந்து வேலை வாய்ப்புகள் வீதம் வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. அதற்காக நாம் விண்ணப்பங்களைப் முழுமை செய்து அனுப்பியிருந்தோம். ஆனால் அதற்கு பதிலாக பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்களுக்கே அரச நியமனங்கள் வழங்கப்பட்டன. அது தொடர்பில் நாம் அமைச்சரிடம் வினவினோம். நம்பிக்கையில்லாத் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் 'ஒருவாரம் பொறுங்கள் எல்லாவற்றையும் சீர் செய்து விடுவோம் என்று கூறினர். ஆனால்

எதுவும் நடக்கவில்லை. அவ்வாறான பொய் கூறும் அமைச்சர்களே அவர்கள் என்றார்.

அரசதலைவர் தேர்தல் தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எவருடனும் பேச்சுக்களில் ஈடுபட்டதா என்று செய்தியாளர்கள் அவரிடம் வினவினர். அதற்கு "இதுவரை அவ்வாறு பேச்சு இடம்பெறவில்லை என்றே நம்புகின்றேன். இணையத்தளங்களில் ஒருவருடன் ஒருவர் பேச்சு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டு செய்திகள் வெளியாகியுள்ளன. இருப்பினும் இதுவரை உத்தியோகபூர்வமாக எவ்வித பேச்சும் இடம்பெறவில்லை" - என்றார்.

(த-6)

கழிவுப்பொருள் கொள்கலன்களை நாட்டிலிருந்து அகற்ற நடவடிக்கை

கொழும்பு, ஓக.13

நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள 130 கழிவு கொள்கலன்களை நாட்டில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகள் வெகு விரைவில் மேற்கொள்ளப்படும் என்று மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தக் கழிவுக் கொள்கலன்கள் தொடர்பாக உடனடி விசாரணை ஆரம்பிக்க வேண்டும் என்றும் - துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 111 கழிவு கொள்கலன்களை மீண்டும் சம்பந்தப்பட்ட நாடுகளுக்கே திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்- பொருளாதார அபிவிருத்தி தொடர்பான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழு ஆலோசனை வழங்கியிருந்தது. அதற்கமையவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

அதிகார சபையின் தலைவர் இசுறு தேவப்பிரிய தெரிவித்ததாவது:

சம்பந்தப்பட்ட முதலீட்டு சபைக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. நாம் பிறப்பித்த உத்தரவுக்கு அமைவாக சம்பந்தப்பட்ட நிறுவனம் கழிவுப் பொருள்களை கொள்கலன்களில் அடைத்துள்ளது.

இந்த கழிவுப்பொருட்கள் 332 கொள்கலன்களில் அடைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் தினங்களில் அவற்றை நாட்டில் இருந்து அகற்ற முதலீட்டு சபை நடவடிக்கை மேற்கொள்ளும். - என்றார்.

(எ)

சிறுபான்மையினரின் ஆதரவோடு கோத்தபாய வெற்றி பெறுவாராம்

விநாயகமூர்த்தி முரளிதரன் நம்பிக்கை

கொழும்பு, ஓக.13

வடக்கு - கிழக்கு மக்கள் கோத்தபாயவுக்கு தங்களது ஆதரவை நிச்சயம் வழங்குவார்கள் என்று முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் முதலாவது தேசிய மாநாட்டில் கலந்துகொண்ட அவர் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ச அரசதலைவர் தேர்தலில் வெற்றியடைவது உறுதி. சிறுபான்மையினரும் அதற்கு முழுமையான ஆதரவை வழங்குவார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரசதலைவர் வேட்பாளராக கோத்தபாய அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து ஏனைய கட்சிகள் வெவ்வேறுப்பட்ட கருத்தை வெளியிட்டு வருகின்றன. கோத்தபாய ராஜபக்சவை இலகுவாகத் தோற்கடித்து விடுவோம் என்று ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது. அதேபோன்று கோத்தபாயவை எதிர்த்து போட்டியிடக்கூடிய சிறந்த வேட்பாளர் தங்களிடம் உள்ளார் என்று மக்கள்விடுதலைமுன்னணி தெரிவித்துள்ளது. (எ)

கோத்தாவை சுதந்திரக் கட்சி விரைவில் சந்தித்துப் பேசும்

அதன் பொதுச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 13

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரசதலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவுடன் கலந்துரையாடப்படும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளர் அறிவிக்கப்பட்டாலும் சுதந்திரக் கட்சியும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும் தொடர்ந்து பேச்சில் ஈடுபடும். வேட்பாளராக அறிக்கப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்சவுடன் எதிர்வரும் நாள்களில் கலந்துரையாடல் இடம்பெறும்.

நாட்டை மீட்டெடுத்து முன்னோக்கிக் கொண்டு செல்லக்கூடிய வேலைத் திட்டத்தைச் சுதந்திரக் கட்சி உருவாக்கியுள்ளது. இந்த வேலைத் திட்டத்தை சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியிடம் முன்வைத்து அது தொடர்பாகக் கலந்துரையாடி, நாட்டைக்கட்டியெழுப்புதவற்கான வேலைத் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம் - என்றார். (எ)

மக்களின் எதிர்பார்ப்புக்களை கோத்தா நிறைவேற்றமாட்டார்

மக்கள் விடுதலை முன்னணி தெரிவிப்பு

கொழும்பு, ஓக.13

ஐ.தே.கட்சியின் அரச தலைவர் வேட்பாளராகப் பெயரிடப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்சவால் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடியாது என்று மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

கோத்தபாய ராஜபக்ச அரச தலைவர் வேட்பாளர் என்று அறிவிக்கப்பட்டுள் ளமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித் தபோதே மக்கள் விடுதலை முன்னணி யின் நாடாளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊழல் மோசடி தொடர்பாக குற்றஞ் சுமத் தப்பட்டுள்ள மற்றும் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்திய கோத்தபாய ராஜபக்ச நாட்டு மக்களின் எதிர்ப் பார்ப்பை நிறைவேற்றமுடியாது. சிறி லங்கா பொதுஜன பெரமுன முன்னணி றுத்தியுள்ள அரச தலைவர் வேட்பாள ரால் நாட்டில் மாற்றங்களை ஏற்படுத்த முடியாது.

குடும்ப ஆட்சிக்கு நாட்டை மீண்டும் தள்ள வேண்டுமா என்பது தொடர்பாக நாட்டு மக்களே தீர்மானம் எடுக்க வேண்டும்- என்றார்.

அதேவேளை, மக்கள் விடுதலை முன் னணியின் அரச தலைவர் வேட்பாள ராக நலிந்த ஜயதிஸ்ஸ போட்டியிடவுள் ளார்என்றுதகவல்கள்வெளியாகியுள்ளன. இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தல் எதிர்வரும் 18ஆம் திகதி வெளியாகும் என்றும் தெரிவிக்கப்படு கின்றது. ஆனால் இந்தத் தகவலை மக் கள் விடுதலை முன்னணி உறுதிப்படுத் தவில்லை. கட்சியின் தலைவர் அநுரகு மார திசாநாயக்க வேட்பாளராகக் களமி றங்கலாம் என்ற தகவலும் வெளியாகி யுள்ளது. (ஏ)

தலை நிமிர்ந்து வாழ்வதற்கே கூட்டமைப்பு தளமிடுகின்றது

கூட்டமைப்பின் பேச்சாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஓக.13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவருக்கும் முட்டுக்கொடுக்கவில்லை. ஓர்மத்துடன் குரல் கொடுத்து, தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழ அடித்தளமிட்டு வருகின்றது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

சமகால அரசியல் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் மக்கள் சந்திப்பு நேற்று மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி இராசாமா ணிக்கம் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சில மாதங்களுக்கு முன்னர் யாழப்பாணத் திலும், சாவகச்சேரியிலும் இவ்வாறான மக் களின் சந்தேகங்களை நிவர்த்தி செய்து, புரிந்துணர்வை ஏற்படுத்தும் நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தோம். இத்தகைய கருத் தரங்குகளுக்கு கட்சி ஆதரவாளர்களைவிட கட்சியை விமர்சிப்பவர்களைத்தான் அழைத்திருந்தோம். ஏனென்றால் கட்சியை விமர்சிப்பவர்களின் கருத்தும் முக்கியம் என் பதால் நாம் அவ்வாறு செய்தோம்.

தற்போதைய அரசுக்கு ஆதரவாகச் செயற் பட்டதன் மூலமாக அடைந்தது என்ன என்ற கேள்விகளே எங்கும் பரவலாக எழுந்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமை சீர்குலைந்திருந்தால் செய்யக்கூடியதாக இருந்த விடயங்களைக்கூட முடியாது இருந் திருக்கும் என்பது மக்களுக்குத் தெரியும்.

எங்களுக்கு இருப்பது இரண்டு பலங்கள். ஒன்று எங்களது ஒற்றுமை. மற்றையது பன் னாடுகள். இவை இரண்டையும் இறுகப் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும். இவற் றைக் கொண்டுதான் விடிவை நோக்கி நகர முடியும். சமாதானச் சூழ்நிலையில் எதைச் செய்ய முடியும், எதைச் செய்ய முடியாது என்று வரையறை இருக்கின்றது. அதே போன்றுதான் ஜனநாயக முறையில் எதைச் செய்ய முடியும் எதைச் செய்யக்கூடாது என்ற வரையறை இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இப்போதும் தடை இருக்கின்றது. அநியாயமான வேண்டு கோள்களை நாங்கள் விடுக்கவில்லை. அவர்களுக்கு உரியதை நாங்கள் கேட்க வில்லை. எங்களுக்கு உரியதைத்தான் நாங்கள் கேட்கின்றோம். இது நியாயமானது. பெரும்பான்மையினத்தவர்களை எதிர்ப் பதை விட அந்த சமூகத்திலுள்ள முற்போக்கு சக்திகளின் ஆதரவை நாங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

சிங்கள மக்கள் மத்தியிலே நாங்கள் சரியா கப் பரப்புரை செய்யவில்லை என்ற கருத்து பரப்பப்படுகிறது. அது தவறானது. சிங்கள மக்கள் மத்தியிலே இருக்கிற முற்போக்கு சக்திகளோடு இணைந்து நாங்கள் பணியாற் றிருக்கின்றோம். சோபித தேரரின் முதலா வது கூட்டத்திலும் நாங்கள் பங்குபற்றி, நாட்டில் பெரும்பான்மை மக்கள் மத்தியியில் எமது நியாயமான விடயங்களை எடுத்துக் கூறுவதில் முன்னின்று உழைத்தோம்.

இணக்கப்பாட்டு அரசை உருவாக்குவதில் சோபித தேரர் எடுத்த முன்னெடுப்பு மிகவும் காத்திரமாக இருந்தது. எமது உரிமைப் போராட்ட வரலாற்றில் தனிநாட்டுக் கோரிக்கை முன்வைத்தபோது சிங்கள மக் கள் எதிர்த்தார்கள். ஆனால் நியாயமான அதிகாரப் பகிர்வோடு ஆட்சியதிகாரங்களைக் கோர முடியும். இதற்கு பன்னாட்டு ஆதரவும் இருக்கும்.

தன்னுடைய சட்டங்களை தானே நடை முறைப்படுத்துகின்றன சுயாதீனம் ஒரு நாட் டுக்கு இருக்கிறது. 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, அதற்கு அப்பாலும் சென்று அர்த்தமுள்ளதாக மாற்று வேன் என்றார் மகிந்த ராஜபக்ச. ஆனால் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. பல முக்கிய விடயங்கள் இன்னமும் நிறை வேற்ற வேண்டி இருக்கிறது. இலங்கைக்கு ஒரு புதிய அரசமைப்புத் தேவை.

காலக்கெடு விதித்து எதையும் செய்ய முடி யாது. அரசை நாங்கள் காப்பாற்றுகின்றோம் என்ற ஒரு குற்றச்சாட்டு இருக்கின்றது. ஜன நாயகப் பாதையை மீறி எதனையும் செய்வ தால்எமக்காகப்பன்னாட்டுஆதரவுஒருபோதும் கிடைக்கப்போவதில்லை - என்றார். (ஏ-46)

தேயிலை ஏற்றுமதி: ஈரானுடன் பேச்சு

கொழும்பு, ஓக.13

தேயிலை ஏற்றுமதி குறித்து ஈரானுடன் முக்கிய பேச்சு முன்னெடுக்கப் பட்டு வருகின்றது என்று இலங்கை தேயிலை சபையின் பணிப்பாளர் நாயகம் அநுர சிறிவர்தன தெரிவித் தார்.

ஏற்றுமதி செய்யப்படும் தேயிலைக்கான பணத் தைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் சிக்கல்களை நீக்குவது குறித்து இதன் போது அவதானம் செலுத் தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அமெரிக்கா விதித்துள்ள பொருளாதா ரத் தடை காரணமாக ஈரா னுக்கு தேயிலை ஏற்றுமதி செய்வதில் சிக்கல்கள் ஏற் பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பாகவும் அவதா னம் செலுத்தப்பட்டு வரு கின்றது என்றும் அவர் தெரிவித்தார். (ஏ)



கிழக்கு மாகாண சபையை விட்டுக் கொடுக்கவில்லை

முன்னாள் எம்.பி. அரியநேத்திரன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஓக.13

கடந்த மாகாண சபை தேர் தலில் 6 ஆயிரத்து 500 மேலதிகமாக வாக்குகள் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்குக் கிடைத்தி ருந் தால் 2 ஆசனங்களை மேல திகமாகப் பெற்றிருக்கலாம். கூட்டமைப்பு ஒரு போதும் கிழக்கு மாகாண சபையை முஸ்லிம் காங்கிரஸ்க்கு விட்டுக்கொடுக்கவில்லை.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் பா.அரிய நேத்திரன் தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பாக மக்களுக்குக் தெளிவூட்டும் கருத்தரங்கு நேற்று களுவாஞ்சிக்குடி யில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பானது விடுதலைப்புலிகள் மௌனிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரே முழுநேர அரசியலில் ஈடுப டத் தொடங்கியது. அதற்கு முன்னர் பகுதி நேர அரசிய லிலே ஈடுபட்டது. முழு நேர அரசியலை அப்போது விடு தலைப்புலிகளே மேற் கொண்டனர்.

அப்போது ஈழம் கிடைக்கும் என் பதை நம்பித்தான் இருந்தோம். ஆனால் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம்திகதிக்குப்பின்னர் அந்த கனவு தவிடு பொடியானது.

கடந்த மாகாண சபை தேர் தலில் 6 ஆயிரத்து 500 மேல திகமாக வாக்குகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்திருந்தால் 2 ஆச னங்களை மேலதிகமாக பெற்றிருக்கலாம். தமிழர் கள் 13 ஆசனங்களையும், முஸ்லிம்கள் 16 ஆசனங்க ளையும், சிங்களவர்கள் 8 ஆசனங்களையும் கடந்த கிழக்கு மாகாண சபையில் பெற்றிருந்தனர். முஸ்லிம் களே பலமான உறுப்பினர் களை வைத்திருந்து 4 கட் சிகளுடன் சேர்ந்து ஆட்சிய மைத்தனர். நாங்கள் மாகாண சபையை முஸ் லிம் காங்கிரஸ்க்கு விட் டுக்கொடுக்கவில்லை- என் றார். (ஏ)

பெரமுனவின் தலைவரானதால் மகிந்தவின் பதவி கேள்விக்குறி

முஜிபுர் ரஹ்மான் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக.13

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவர் பத விையை எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச ஏற்றுக் கொண்டுள்ளதால் அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கேள்விக்குறியாகியுள்ளது என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ் மான்.

கொழும்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தப் பிரச்சினை தொடர்பாக சபாநாயகர் கரு ஜயசூரிய வுக்குத் தெரிவிக்கப்படும். முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட் டார். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பாகவே அவர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் பெற்றுக் கொண் டுள்ளார். தந்போது அவர் சிறிலங்கா பொதுமக்கள் முன்ன ணியின் தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டு கட்சி மாறி யுள்ளார்.

மகிந்த ராஜபக்ச தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பின் பொதுச் செயலர் மகிந்த அமரவீர எடுத்த முடிவு என்ன?. மகிந்த ராஜபக்சவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தொடர சட்டபூர்மாக இடம் இருக்கின்றது என்றால், அதனை சபாநாயகர் நாடாளுமன்றத்தில் அறிவிக்க வேண்டும். இந்த விடயம் தொடர்பாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் பதிலளிக்க வேண்டும் - என்றார். (ஏ)

அதிக நூல்களை வாசிக்கும் மாணவருக்கு மதிப்பளிப்பு

கல்வி அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக 13

அதிக நூல்களை வாசிக்கும் பழக்கம் உடைய மாணவர் கள் 3 ஆயிரம் பேர் மதிப்பளிக் கப்படவுள்ளனர் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் நோக்குடன் பாடசாலைக் கட்டமைப்பில் அறிமுகம் செய்து வைக்கப் பட்ட "நூல்களாகிய தோழர் களே நேசமிகு நண்பர்கள்" என்ற வேலைத்திட்டம் தற் போது பாடசாலை மாணவர் கள் மத்தியில் பிரபலம் அடைந்துள்ளது. அதன் முதற் கட்டத் துக்கான மாணவர் களை மதிப்பளிக்கும் நிகழ்வு செப்ரெம்பர் மாதமளவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் அதிக நூல்களை வாசித்தோருக்குத் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கல பதக்கங்கள் வழங்கப்பட வுள்ளன. 3 ஆயிரம் மாண வர்கள் மதிப்பளிக்கப்படவுள் ளனர். நூல்களை வாசித்த மாணவர்கள் நூலின் சுருக் கத்தை எழுதுதல், வர்ணித் தல், நூலாசிரியர் மற்றும் அச்சு பதிப்பு போன்ற விட யங்களை தெளி வுபடுத்தல், கதை கூறல் போன்ற திட்டங் கள் பாடசாலைகளில் நடை முறைப்படுத்தப்பட்டு வரு கின்றன என்று தெரிவிக்கப் பட்டது. (ஏ-7)

ஆயுததாரிகள் வசமானது ஏமன் நாட்டின் ஏடன் நகர்

சனா, ஓக.13

ஏமனில் உள்நாட்டுப் போர் நடந்து வரும் நிலையில், அந்த நாட்டின் 2 ஆவது மிகப்பெரிய நகரமான ஏடன் நகரை ஆயுததாரிகள் (தெற்குப் பிரிவினைவாதிகள்) கைப்பற்றினர். அரச படைகளுடன் நீடித்த போரின் முடிவிலேயே இந்த நகரை ஆயுததாரிகள் தமது வசமாக்கினர். அதன்படி ஏமனின் 2 ஆவது மிகப்பெரிய நகரும், தெற்குத்துறைமுகநகருமான ஏடன் ஆயுததாரிகள் வசமானது.

இதில் மக்கள் உட்பட 70க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏடனில் உள்ள அதிபர் மாளிகை மற்றும் இராணுவ முகாம்கள் இதன் மூலம் ஆயுததாரிகளின் வசமாகின.

அதிபர் மாளிகையில் இருந்த 200க்கும் மேற்பட்ட இராணுவச்சிப்பாய்களை வெளியேற அனுமதித்ததாக ஆயுததாரிகள் தரப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏடன் நகரை ஆயுததாரிகள் கைப்பற்றியதைக் கடுமையாகக் கண்டித்த சவூதி அரேபியா இதற்குப் பதிலடி வழங்கப்படும் என எச்சரித்தது.

பின்னணி

தென்மேற்கு ஆசிய நாடான ஏமனில், அதிபர் மன்சூர் ஹைதி தலைமையிலான அரச படைக்கும், ஹவுத்திப் போராளிகளுக்கும் இடையே 2015 ஆம் ஆண்டிலிருந்து உள்நாட்டுப் போர் நடக்கிறது. இந்தப் போரில் இதுவரை 11 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாகியுள்ளனர். இந்தப் போரில் அதிபர் மன்சூர் ஹைதிக்கு ஆதரவாகச் சவூதி தலைமையிலான கூட்டுப்படைகள் களத்தில் இருக்கின்றன. அதே போல் ஹவுத்திப் போராளிகளுக்கு ஈரான் ஆதரவளிக்கிறது.

இது ஒருபுறம் இருக்க, அந்த நாட்டின் தெற்குப் பகுதியை தனி நாடாக அறிவிக்கக் கோரி தெற்கு இடைக்கால சபை என்ற பெயரில் ஆயுதம் ஏந்திய பிரிவினைவாத அமைப்பு போராடி வருகிறது.

இந்தப் பிரிவினைவாத அமைப்புக்கு ஐக்கிய அரபு இராஜ்ஜியம் ஆதரவு அளிக்கிறது. தெற்குப் பிரிவினைவாதிகள் அரச படைகளுடன் இணைந்து ஹவுத்திப் போராளிகளுக்கு எதிராகத் தாக்குதல்களை நடத்தி வந்தனர்.

ஆனாலும் அரசுக்கும் தெற்குப்பிரிவினைவாதிகளுக்கும் இடையே உட்பூசல் இருந்து வந்தது.

மியன்மார் நிலச்சரிவு

அதிகரித்தன சாவுகள்

நெப்பிட்டோ, ஓக.13

மியன்மாரில் கடும் மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவால் 34 பேர் சாவடைந்தனர் என்று முதற்கட்டத் தகவல்கள் வெளியாகின. ஆயிரக்கணக்கான மக்கள் இந்த மழை மற்றும் வெள்ளத்தால் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர். பலர் நிலச்சரிவுக்குள் சிக்கியிருப்பதால் சாவு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்பட்டது. இந்த நிலையில் அங்கு நிலச்சரிவில் சிக்கிச் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 56 ஆக அதிகரித்தது.

மியன்மாரில் பெருக்கெடுத்து ஓடும் வெள்ளம் காரணமாக மான் மற்றும் பகோ மாகாணத்தில் 30 ஆயிரம் பேர் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும், பல இடங்களில் போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்த வெள்ளப் பெருக்குக் காரணமாக 89 ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது.

ட்ரம்புக்கு எதிராக

வெனிசுலாவில் கையெழுத்துப் போர்

கராகஸ், ஓக.13

வெனிசுலா மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடைகளைக் கண்டித்து ட்ரம்புக்கு எதிராக வெனிசுலா மக்கள் கையெழுத்துப் போராட்டத்தில் குதித்தனர். வெனிசுலா மீது அமெரிக்கா பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. இந்தத் தடைகளை அண்மையில் மேலும் அதிகரித்தது. இதனால் ட்ரம்புக்கு எதிராக வெனிசுலாவில் ஆளும் ஐக்கிய சோஷலிஸக் கட்சி சார்பில் பெருமளவில் கையெழுத்துப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது. 'ட்ரம்ப் வேண்டாம்' என்ற பெயரில் நாட்டின் முக்கிய நகரங்களில் நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்தில் 13 மில்லியன் பேர் கையெழுத்திட்டனர்.

இந்த மனுவை அடுத்த மாதம் நடைபெறும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 74 ஆவது அமர்வில் சமர்ப்பிக்க உள்ளதாக வெனிசுலா அரசு தெரிவித்தது.

போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் தாக்குதல்

ஹொங்கொங் சம்பவம்

ஹொங்கொங், ஓக.13

ஹொங்கொங்கில் நடந்த பேரணியில் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தினர். இதனால் அங்கு நிலைமை மேலும் மோசமாகியது. கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்கு போராட்டக்காரர்கள் அமைதியாகப் பேரணி ஒன்றைச் செய்தனர். அந்தப் பேரணியின் போது பல இடங்களில் போராட்டக்காரர்களுக்கு எதிராகப் பொலிஸார் இறப்பர் குண்டுகளை பயன்படுத்தி அவர்களைக் கலைக்க முயன்றனர். மேலும், பெற்றோல் குண்டுகளையும் போராட்டக்காரர்களை நோக்கி வீசினர். போராட்டக்காரர்கள் மீது கடுமையாகத் தாக்குதல் நடத்தினர். இதில் போராட்டக்காரர்களுக்குப் பலத்த காயம் ஏற்பட்டது. போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் நடத்திய இந்தத் தாக்குதலையடுத்து, மனித உரிமை அமைப்புகள் பலவும் ஹொங்கொங் அரசுக்குத் தமது கண்டனத்தைத் தெரிவித்தன.

பின்னணி

சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்கின் குற்றவாளிகளைச் சீனாவில் நீதி நடவடிக்கைகளுக்கு உட்படுத்தும் வகையிலான சட்டத் திருத்தத்தைக் ஹொங்காங் நிர்வாகம் கடந்த சில நாள்களுக்கு முன்னர் கொண்டுவந்தது. இந்தத் தீர்மானத்துக்கு ஹொங்கொங் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அவ்கள் நடத்திய பெரும் போராட்டத்தல் ஹொங்கொங் முடங்கியது. குறித்ததீர்மானத்தை நிறுத்தி வைப்பதாக அறிவித்தார் ஹொங்கொங்கின் தலைமை நிர்வாகி கோரிலாம். அதை முற்றாகக் கைவிடுமாறு கோரிப் போராட்டங்கள் தொடர்ந்தன. சமீபத்தில் நடந்த போராட்டத்தில் வன்முறை வெடித்தது. ஹொங்கொங் விடயத்தில் பொறுமை காக்க முடியாது என்று சீனா எச்சரிக்கைத் தொனியில் தெரிவித்தது.

போராட்டக்காரர்களை இனந் தெரியாத நபர்கள் தாக்கினர். அங்குவார இறுதிநாள்களில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இன்றைய நாள்

மேடம்: வெளி வட்டார தொடர்பு, தொந்தரவு தரலாம். தொழில், வியாபார நடைமுறை சீராக, புதிய யுக்தி பயன்படுத்துவது நல்லது. மிதமான அளவில் பணவரவு இருக்கும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி கூடும்.

இடபம்: எதிர்பார்த்த உதவி கிடைக்க தாமதமாகலாம். குடும்ப உறுப்பினர்களிடம், வாக்குவாதம் பேசக்கூடாது. தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலை தொந்தரவு தரலாம்.

மிதுனம்: தாமதமான செயல் புதிய முயற்சியால் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நம்பிக்கை வளரும். பணம் கொடுக்கல், வாங்கல் சீராகும்.

கடகம்: உங்கள் செயலில் அறிவுத் திறமை பரிமளிக்கும். பணியை, எளிதில் நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை உருவாகும். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும்.

சிம்மம்: மாறுபட்ட கருத்து உள்ளவரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்ய கூடுதல் பணம் தேவைப்படும். நேரத்துக்கு உணவு உண்பதால் ஆரோக்கியம் சீராகும்.

கன்னி: உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்வர். சகிப்புத் தன்மை பின்பற்றுவதால், சிரமம் வராமல் தவிர்க்கலாம். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் உழைப்பு உதவும். சேமிப்பு பணம் செலவுக்கு பயன்படும்.

துலாம்: உங்கள் செயல்களில் அதிக நேர்த்தி நிறைந்திருக்கும். பழகுபவர்களின் மனம் அறிந்து பேசுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்கான தேவை நிறைவேறும். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள். பணியாளர்களுக்கு பாராட்டு வெகுமதி கிடைக்கும்.

விருச்சிகம்: உங்கள் மனதில் சங்கடம் வரலாம். எவருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இடையூறை தாமதமின்றி சரிசெய்வது நல்லது.

தனுசு: உங்கள் செயல்களில் நிதானம் கடைப்பிடிப்பீர்கள். எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். உபரி பணவருமானம் பெறுவீர்கள்.

மகரம்: சிலரது அதிருப்தியை பெறுகிற நிலை வரலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற சிலமாற்றம் செய்வது அவசியம். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

கும்பம்: உங்கள் மனதில் கலை உணர்வு அதிகரிக்கும். அலைக்கழிப்பு உருவாக்கிய வேலை, ஆதாயம் தருவதாக மாறும். இயலாதவர்களுக்கு உதவுவீர்கள்.

மீனம்: உங்கள் பேச்சில் அன்பும், பண்பும் மிகுந்திருக்கும். நண்பர் உறவினர் உங்களை மதிப்புடன் நடத்துவர். தொழில், வியாபாரம் செழிக்க முழு முயற்சியுடன் பணிபுரிவீர்கள். நிலுவைப் பணம் வசூலாகும்.

பாகிஸ்தானில் கடும் மழை

28 பேர் சாவு

இஸ்லாமாபாத்,ஓக.13

பாகிஸ்தானின் சில மாகாணங்களில் தொடர்ந்து பெய்துவரும் மழையால்வெள்ளம்மற்றும்நிலச்சரிவுசார்ந்தஇடர்கள்ஏற்பட்டது. இதனால் அங்கு 28 பேர் சாவடைந்தனர். பாகிஸ்தான் நாட்டின் கைபர்துங்கவா மாகாணம், கராச்சி, லாகூர் உள்ளிட்ட பகுதிகளில் கடும்மழைபெய்கிறது.

குறிப்பாக, கராச்சியில்கடந்த24மணிநேரத்தில்150மில்லிமீற்றர் அளவுக்கு மழை கொட்டித் தீர்த்தது. தொடர் மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவு சார்ந்த விபத்துகளில் பலர் சிக்கினர். இந்த இடர்கள் காரணமாகப் பலர் பாதிக்கப்பட்டனர்.

இந்தியாவில் கடும் மழை

60 பேர் சாவு

புதுடெல்லி,ஓக.13

இந்தியாவின்கேரளாமாநிலத்தின்பலமாவட்டங்களில்தொடர்ந்து கடும்மழைபெய்தது. இந்தமழையால்ஏற்பட்டவெள்ளம்மற்றும் நிலச்சரிவில் சிக்கி 60பேர் சாவடைந்தனர். பலர் காணாமற் போயினர்.

கேரளாவில் கடந்த சில தினங்களாகப் பரவலாகப் பெய்து வரும் மழையால் கேரளா மாநிலம் முழுவதும் வெள்ளப் பெருக்கு ஏற் பட்டுள்ளது. கடலை ஒட்டிய மாவட்டங்கள் உட்பட அங்கு பல பகு திகளில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இந்த மழை காரணமாக வீதிகள் நீரால் சேதமாக்கப்பட்டுள்ளன.

பல்வேறுபகுதிகளில்போக்குவரத்துகள்தடைப்பட்டுள்ளன. தொட ருந்துசேவைமற்றும்வானூர்திச்சேவைகளும்அங்குபாதிக்கப் பட்டுள்ளன. கேரளா மாநிலத்தில் வயநாடு, பத்தினம்திட்டா, ஆலப்புழா, கோட்டயம், இடுக்கி, எர்னாகுளம், திரிச்சூர், பாலக் காடு, மலப்புரம் ஆகிய மாவட்டங்களில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதனால் குறித்த மாவட்டத்தில் பல பகுதிகள் வெள்ளக்காடாகக்காட்சியளிக்கின்றன. தொடர்ந்தும்அங்குமோச மான வானிலைநிலவுவதால்மீட்புபணிகளைத்துரிதமாகமேற் கொள்வதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.



7 வயதுச் சிறுவனின் வாயிலிருந்து அகற்றப் பட்ட பற்களே இவை. குறித்த சிறுவனின் வாய்க்குள் இருந்த 526 பற்களைக் கொண்ட கட்டியை, இந்தியாவின் சென் னையிலுள்ள மருத்து வமனை ஒன்றின் மருத்துவர்கள் அகற்றினர். வாய்த் தாடையில் வீக்கம் மற்றும் வலி என்று கூறி மருத்துவமனைக்குச் சென்ற சிறுவனின் கீழ் வலதுத் தாடை யிலிருந்தே இத்தனை பற்களும் அகற்றப் பட்டன.

வெனிசுலா மீது விதிக்கும் தடைகள் மனித உரிமைகளைப் பாதிக்கின்றன

அமெரிக்காவுக்குக் கண்டனம் தெரிவித்தது ஐ.நா.

லண்டன், ஓக.13

வெனிசுலாமீதானபொருளா தாரத் தடையை அமெ ரிக்கா அதிகரித்துள்ளமையானது அங்குள்ள சாதாரண பொதுமக்க ளின்மனிதஉரிமைகளைப்பாதிப்ப தாக அமையப்போகிறது என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமை கள் ஆணையாளர் மிசெல் பச்செ லட் தெரிவித்தார்.

அமெரிக்காவிலுள்ள வெனி சுலாவின் சகல சொத்துக்களை முடக்கவும், அமெரிக்காவிலுள்ள வெனிசுலாவின் நிதிகளைக் கைமாற்றவோ, மீளப்பெறவோ அல்லது அதனூடாகவர்த்தகநடவ டிக்கைகளை மேற்கொள்ளசெய்ய முடியாதபடி அதை முடக்குமாறு கட்டளையிட்டுள்ளார் அமெரிக்க அரசதலைவர்ட்ரம்ப்.

இதனூடாக வெனிசுலா அதிபர் நிக்கோலஸ்மதுரோவைப்பதவி யிலிருந்து அகற்றுவதே தனது திட்டம் என்றும் அவர் தெரிவித் தார்.

மதுரோவைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கு ட்ரம்ப் மேற்கொள் ளும் முயற்சிகளுக்கு பச்செலட் ஆதரவுதெரிவித்தாலும்ட்ரம்ப்பின் இந்தப்பொருளாதாரத்தடைகாரண மாகப் பாதிக்கப்படுபவர்கள் வெனி சுலாவின் சாதாரண பொதுமக் களே என்கிறார்.

இதனால் ட்ரம்ப்பின் இந்தப் பொரு ளாதாரத் தடைக்கு எதிர்ப்புத் தெரி வப்பதாக அவர் தெரிவித்தார்.

பின்னணி

அமெரிக்காவின்ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப்போராடிய வெனிசுலா வின்முன்னாள்அதிபருக்குஅடுத்து அந்தநாட்டின்அதிபரானார்நிக்கோ லஸ்மதுரோ.

மறுபடியும் தேர்தல் மூலம் அவரே வெனிசுலாவின் அடுத்த அதிபரா னார். அவர் தேர்தலில் முறைகே டாக வெற்றிபெற்றார் எனக்கூறி, அமெரிக்காவுக்குச் சார்பானவராக இனங்காணப்படுகிற அந்த நாட் டின் எதிர்க் கட்சித்தலைவர் குவன் குவைடோ மதுரோவுக்கு எதிராகப் போராட்டங்களை மேற்கொண்டு வருகிறார். அவருக்கு மேற்குலக நாடுகள் சிலவும் ஆதரவு வழங்கு கின்றன.

ரஷ்யா, சீனா, ஈரான் போன்ற நாடு களின் பக்கப் பலத்துடனும், தனது நாட்டின் பாதுகாப்புப்படைகளின் ஆதரவோடு மதுரோ தனது ஆட்சி யைத் தக்க வைத்துக்கொள்ளப் போராடுகிறார்.

இந்தஅரசியல்நிலையற்றதன்மை யாலும், ஏலவே அங்கு நிலவிய பொருளாதாரக்கொள்கைகளாலும் வெனிசுலாமக்கள்பசி, பட்டினிஎன அவலங்களை எதிர்கொண்டு வரு கின்றனர்.

கேரளாவின் கடும் மழையால் தமிழகத்துக்குக் காவிரி நீர் திறப்பு

புதுடெல்லி,ஓக.13

கேரளாவில் பெய்கின்ற கடும் மழை காரணமாக அங்கு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால், காவிரி யிலிருந்துதமிழகத்துக்கு 3 லட்சம் கன அடிநீர் அவ சரமாகத் திறந்துவிடப்பட்டது. கேரளா, கர்நாடக மாநி லங்களில் தென்மேற்குப் பருவமழை தொடர்ந்து பெய்து வருவதால், அங்கு நீர்வரத்து அதிகரித்து அணைகள்பலவும்நிரம்பியுள்ளன. இதனால்தமிழ கத்துக்குக் காவிரியிலிருந்து தண்ணீர் திறக்கப்பட் டுள்ளது. கர்நாடக அணை களில் இருந்து 3 லட்சம் கன அடிநீர்தமிழகத்துக்குத்திறக்கப்பட்டது.

சிரியாவில் மோதல் 55 பேர் சாவு

டமஸ்கஸ், ஓக.13

சிரியாவில் அரசுக்கு எதிராகச் செயற்பட்டு வரும் ஆயுததாரி களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் 55 பேர் சாவடைந்த னர் என்று சிரியாவின் மனித உரிமை கண்காணிப்பு அமைப்பினர் தெரிவித்தனர்.

சிரியாவின் வடமேற்குப் பகுதியிலுள்ள ஹாமா, அலெப்போ மற்றும் லடாகியா மாகாணங்களில் செயற்பட்டு வரும் ஆயு தக் குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட இந்த மோதலில் அரசு சார்புப் படைவீரர்கள் மற்றும் போராளிகள் உள்ளிட்ட 55 பேர்சாவடைந்தனர்என்றுசிரியாவிலுள்ளபிரிட்டனுக்கான குறித்த மனித உரிமைகள் அமைப்புத் தெரிவித்தது.

பின்னணி

சிரியாவில் அதிபர் பஷர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு எதிராகப் பல்வேறு குழுக்கள் ஆயுதம் தாங்கிய போராட்டங்களில் ஈடு பட்டு வருகின்றன.

சிரியாவின் தலைநகர் டமஸ்கஸ் அருகேயுள்ள கிழக்குக் கவுட்டாப்பகுதியில்இவர்களில்எவர் ஆதிக்கம்செலுத்துவது என்பதுதொடர்பாக2012ஆம்ஆண்டில்இருந்துஅங்குள்ள போராளிக் குழுக்கள் இரண்டுக்கிடையே மோதல்களும் நடந்து வருகின்றன.

இதுதவிர, ஐ.எஸ். ஆயுததாரிகளும்அங்குசிலபகுதிகளைக் கைப்பற்றிக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். இந்தக் குழுக்களுக்கு எதிராக அமெரிக்க வான் படையின் துணை யுடன் சிரியாவின் முப்படைகள் போரிடுகின்றன.

தேர்தலின்...

ராவ் சுட்டிக்காட்டியுள்ளது.

அரச தலைவர் தேர்தலுக்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கூட்டு அரசை அமைப்பது குறித்து கோத்தபாய ராஜபக்ச சிந்தித்து வருகின்றார் எனவும் கொழும்பு ரெலிகிராவ் தெரிவித்துள்ளது.

அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெற்றால் நாடாளுமன்றத்தை 2020ஆம் ஆண்டு பெப்ரவரியில் கலைக்கலாம் என முன்னாள் பாதுகாப்புச் செயலர் கருதுகின்றார். கோத்தபாய ராஜபக்ச அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் ரணில் விக்கிரமசிங்கவை தலைமை அமைச்சராக்குவது குறித்த பேச்சுக்களும் இடம்பெறுகின்றன எனவும் கொழும்பு ரெலிகிராவ் தெரிவித்துள்ளது.

கோத்தபாயவின் அரச தலைவர் கனவுகளுக்கு தலைமை அமைச்சரும், அயலுறவுத் துறை அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் சாகல ரத்நாயக்கவும் சிறந்த முறையில் உதவி வருகின்றனர் எனவும் கொழும்பு ரெலிகிராவ் தெரிவித்துள்ளது. (ஒ.5)

தமிழ்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் ஆதரவு இன்றி வெல்லுவேன் என்று கோத்தபாய ராஜபக்ச கூறியதாகச் செய்திகள் வந்தன. அதன் பின்னர், தான் அவ்வாறு சொல்லவில்லை என்று கூறினார். அவர் அப்படிக் கூறினாரா? இல்லையா? என்று எனக்குத் தெரியாது. தமிழ் மக்களின் வேணவாக்களை நிறைவேற்றுவேன் என்று தனது நேற்றைய (நேற்றுமுன்தினம்) உரையில் கோத்தபாய சொல்லியிருக்கின்றார். தமிழ் மக்களின் ஆதரவு இன்றி நிச்சயம் வெல்ல முடியாது என்பதால்தான், முதலில் அப்படிக் கூறியிருந்தாலும் பின்னர் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளார்.

கேள்வி: ஐக்கிய தேசியக்கட்சி சார்பாக சஜித், கருஜயசூரிய இருவரில் யார் போட்டியிட்டால், கோத்தபாய ராஜபக்சவை எதிர்த்து வெற்றிபெறுவார் என்று நினைக்கின்றீர்கள் ?

பதில்: ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களை தீர்மானிப்பது அது உட்கட்சி விவகாரம். இதனை நாங்கள் தீர்மானிக்க முடியாது. அதில் தாக்கம் செலுத்தும் படியான கருத்துக்களை நாங்கள் தெரிவிக்க முடியாது.

கேள்வி: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கோத்தபாய ராஜபக்சவை ஆதரிப்பார்களா?

பதில்: நாங்கள் யாரை ஆதரிப்பது, யாரை ஆதரிக்காமல் விடுவது யாரையும் ஆதரிப்பதா என்ற எந்த தீர்மானமும் இன்னும் எடுக்கவில்லை.

கேள்வி: அவ்வாறென்றால் மகிந்த அரசு வந்து விடக் கூடாது என்பதற்காக ஐக்கிய தேசிய கட்சி அரசைக் கொண்டு வந்ததாக நீங்கள் பகிரங்கமாக அறிவித்திருந்தீர்கள். மகிந்த சார்பான ஒருவரான கோத்தபாய ராஜபக்சவை ஆதரிக்க முடியுமா? இல்லையா? என்று தற்போது அழுத்தம் திருத்தமாக தெரிவிக்கமுடியாதா?

பதில்: அழுத்தம் திருத்தமாக நாங்கள் சரியான நேரத்தில், சரியான ஒரு கருத்தை வெளியிடுவோம். அதற்கான நேரம் இப்போதில்லை.

கேள்வி: உங்களது கோரிக்கைகளுக்கு கோத்தபாய ராஜபக்ச ஆதரவளித்தால் எத்தகைய நிலைப்பாடு எடுப்பீர்கள்?

பதில்: நான் ஏற்கனவே சொன்னதைப் போன்று ஆதரவு வழங்குவதா? இல்லையா என்ற தீர்மானங்கள் எல்லாவற்றிக்கும் மேலாக அனைத்து கட்சிகளும் தங்களுடைய வேட்பாளர்களை அறிவிக்கட்டும். எல்லாக் கட்சிகளும் தங்களின் கொள்கைகளை முன்வைக்கட்டும். நாங்கள் அனைத்து கட்சி வேட்பாளர்களுடனும் பேசுவோம். அதன் பின்னர் நிதானமான ஒரு முடிவை எடுப்போம். (ஒ.5)

கோத்தாவுக்காக...

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ச அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் வெடிகள் கொளுத்தப்பட்டன. யாழ்ப்பாணத்தின் பல்வேறு சந்திகளிலும் இவ்வாறு வெடிகள் கொளுத்தப்பட்டன.

தாவடிப் பகுதியிலுள்ள வர்த்தகர் ஒருவரின் ஏற்பாட்டில், தாவடிச் சந்திப் பகுதியிலும் வெடிகள் கொளுத்தப்பட்டன. வீதியின் நடுவே வெடிகள் கொளுத்தப்பட்டமையால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் பொதுமக்கள் வெடி கொளுத்திய வர்களிடம் கேள்வி எழுப்பியுள்ளனர். அது வாய்த்தர்க்கமாக மாறியுள்ளது. பின்னர் கைகலப்பு வரையில் சென்றுள்ளது. கைகலப்பு முடிந்த பின்னர் சுன்னாகம் பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. ஆனால், தாக்குதலுக்கு உள்ளான பாதிக்கப்பட்ட தரப்பினர், பொலிஸ் நிலையம் வரையில் அலையத் தயாரில்லை என்று அந்தப் பகுதியிலிருந்து விலகிச் சென்றுள்ளனர். (ஒ.5,105)

காங்கேசன்துறை...

உட்படுத்தும் முடிவில் எந்த மாற்றமும் இல்லை. அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் நாட்டின் எந்தப் பகுதியில் இருந்தாலும் சிறப்பு விண்ணப்பப் படிவம் ஊடாக தமது பதிவை மேற்கொள்ளமுடியும். இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் இந்த முடிவால் 2019ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலில் 30 ஆயிரம் பேர் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் நீக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால், யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை இரண்டால் குறைவடையும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை தேர்தல் தொகுதியில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத கிராம அலுவலர் பிரிவுகள் கடந்த காலங்களில் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுவதில்லை. இந்த ஆண்டு தேர்தல்கள் ஆணைக்குழு, மக்கள் மீளக்குடியமராத கிராம அலுவர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களை நாட்டின் எந்தப் பாகத்திலிருந்தாலும், வெளிநாடுகளிலிருந்தாலும் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவித்துள்ளது. இதற்காக சிறப்பு விண்ணப்பப் படிவமும் தேர்தல்கள் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பிரதேசங்களில் மீளாய்வு மேற்கொள்ள வேண்டாம் என்ற கோரிக்கை பல தரப்புக்களாலும் முன்வைக்கப்பட்டிருந்தது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் நேற்றைய கூட்டத்தில் இது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. இருப்பினும் அந்தக் கிராம அலுவலர் பிரிவுகளை மீளாய்வுக்கு உட்படுத்துவது என்ற ஆணைக்குழுவின் முடிவில் மாற்றம் எதுவும் செய்வதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஒ.5,105)

எவருக்கும்...

கொழும்பு, ஓக. 13

நான் எவருக்கும் பயந்தவன் அல்லன். மக்களுக்காக இந்த நிமிடம் சாகவும் நான் தயார். தந்தையின் வழியில் நான் எதிர்வரும் நவம்பர் மாதம் செல்ல வேண்டிய இடத்துக்குச் செல்வேன். தந்தைபோல் நாட்டுக்காக நடுவீதியில் உயிரைத் தியாகம் செய்யவும் தயார். இவ்வாறு சூளுரைத்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும், அக்கட்சியின் அரச தலைவர் வேட்பாளராகக் களமிறக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுபவருமான சஜித் பிரேமதாச.

சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு தெரிவித்து பதுளையில் நேற்று மாலை லட்சக்கணக்கான ஆதரவாளர்கள் மத்தியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இளைஞர்களைக் கொண்டு நாட்டை முன்னேற்ற வேண்டும். இளைஞர்களின் எண்ணங்களுக்கும் இலட்சியத்துக்கும் இடம் கொடுக்க வேண்டும். புதிய தொழில்நுட்பத்துடன் நாங்கள் உலகை வெல்லவேண்டும்.

நாட்டை நிர்வகிக்கும்போது சரியான தேசிய கொள்கை வேண்டும். நாட்டைகைத்தொழில் யுகத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும். ஏற்றுமதி பொருளாதாரத்தை விருத்தி செய்து நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். அதேபோல் கல்வி, சுகாதாரத்தையும் மேம்படுத்த வேண்டும்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். இராணுவ மட்டுமல்ல பொருளாதார, சமூக பாதுகாப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். பாதுகாப்பு புலனாய்வுத்துறை மேம்படுத்தப்பட வேண்டும். மக்கள் மீதான வரிச்சுமை குறைக்கப்பட வேண்டும்.

தோட்டத் தொழிலாளரின் சம்பளப் பிரச்சினை குறித்து கவனிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

தோட்டத் தொழிலாளர்கள் சொற்பளவு வருமானத்துடனேயே வாழ்கின்றனர். அவர்களின் வாழ்வில் வறுமை தாண்டவமாடினாலும், தனியார் கம்பனிகள் அதிக இலாபம் பெறுகின்றன. எனவே, தோட்டத் தொழிலாளர்களை நாம் அரவணைப்போம், பாதுகாப்போம்.

ரணசிங்க பிரேமதாசவே இலட்சக்கணக்கான மலையக மக்களுக்கு நிலவுரிமையை வழங்கினார்.

தீவிரவாதத்துக்கு இந்நாட்டில் இடமில்லை. தீவிரவாதிகள் முற்றாக ஒழிக்கப்படுவர். இவற்றை உருவாக்குபவர் யார்? அவை எப்படி உருவாகின்றன? என்பதைப் பார்க்க வேண்டும்.

நாட்டின் இறையாண்மையை நாங்கள் பாதுகாப்போம். நாட்டைப் பிரிக்க எந்தச் சக்திக்கும் இடமளிக்கமாட்டோம். இன, மத பேதமற்று செயற்பட்டு புதிய இலங்கையை உருவாக்குவோம். வெளிநாட்டு சக்திகளுடன் ஒப்பந்தம் செய்யும்போது நாட்டுக்குப் பாதிப்பை ஏற்படும் எதிலும் கையொப்பமிடமாட்டோம்.

நாட்டை எப்படி நிர்வகிப்பது என்பதை பத்து தர்மங்கள் அடிப்படையில் நாங்கள் மேற்கொள்வோம். நாங்கள் பலவீனமானவர்கள் அல்லர். நான் எவருக்கும் பயந்தவன் அல்லன். மக்களுக்காக இந்த நிமிடம் சாகவும் நான் தயார். தந்தையின் வழியில் நான் எதிர்வரும் நவம்பர் மாதம் செல்ல வேண்டிய இடத்துக்குச் செல்வேன். தந்தை போல் நாட்டுக்காக நடுவீதியில் உயிரைத் தியாகம் செய்யவும் தயார். நான் இரட்டை நாக்கு அரசியல்வாதி அல்லன். சொல்வதைக் கட்டாயம் செய்து முடிப்பேன் - என்றார்.

இந்த நிகழ்வில் சஜித்துக்கு ஆதரவான ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஒ.5,22)

மருத்துவ...

நாட்டில் அரச தலைவர் தேர்தலுக்கான ஆயத்தங்கள் இடம்பெற்று வருகின்றன. சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தனது கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்சவை அறிவித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் அரச தலைவர் வேட்பாளருக்கான முரண்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இருப்பினும் சஜித் பிரேமதாசவே களமிறங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அரச தலைவர் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டை இன்னமும் வெளிப்படுத்தவில்லை. சகல கட்சிகளும் வேட்பாளர்களை அறிவித்த பின்னரே தமது நிலைப்பாட்டைத் தெரியப்படுத்துவோம் என்று கூட்டமைப்பு தொடர்ச்சியாகக் கூறிவருகின்றது.

இவ்வாறானதொரு நிலையில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், இந்தியத் தலைநகர் டில்லிக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். முக்கிய விடயங்கள் தொடர்பில் கூட்டமைப்பு இந்தியாவுடன் ஆலோசனை நடத்தியே கடந்த காலங்களில் முடிவுகளை மேற்கொண்டிருந்தது. தற்போதும் அவ்வாறானதொரு நடவடிக்கைக்காகவே சம்பந்தன் டில்லிக்குச் சென்றிருக்கலாம் என்று அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.5,22)

இப்போது...

தோதல் கண்காணிப்பு கொள்கை அதிகாரி ரிக்கார்டோ செலரி மற்றும் அரசியல் வர்த்தகம் மற்றும் தொடர்பாடல்களுக்கான பிரதித் தலைவர் ஆன் வாகியர் சட்டர்ஜி தலைமையிலான குழுவினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை கொழும்பில் நேற்று திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது குறித்த உறுப்பினர்களுக்கு நாட்டின் நிலவரம் தொடர்பாகத் தெளிவுபடுத்திய இரா.சம்பந்தன்,

1994ஆம் ஆண்டிலிருந்து நாட்டு மக்கள் தொடர்ச்சியாக 25 ஆண்டுகளாக நிறைவேற்று அரச தலைவர் முறைமையை ஒழிப்பதற்கு ஆதரவாகவே தேர்தல்களில் தீர்ப்பளித்திருக்கின்றார்கள். இந்தப் பின்னணியில் இன்னுமொரு அரச தலைவர் தேர்தலை நடத்துவதானது மக்கள் ஆணையை மீறுகின்ற ஒரு கபடச் செயலாகும்.

எனவே, தற்போது ஆராயப்பட வேண்டிய விடயம் யாதெனில், மக்கள் ஆணையை மீறுகின்ற இந்த நடவடிக்கையிலே பங்குபெறுவதா என்பதும் மேற்குறிப்பிட்ட பின்னணியில் தேர்தல் நடைமுறையானது நியாயபூர்வமானதா என்பதுமேயாகும்.

கடந்த அரச தலைவர் தேர்தலில் 90 வீதத்துக்கும் அதிகமான மக்கள் ஒரு புதிய அரசமைப்புக்கு ஆதரவாக வாக்களித்திருந்தார்கள். அதன் விளைவாக நாடாளுமன்றத்தில் ஒருதீர்மானம்ஏகமனதாகநிறைவேற்றப்பட்டு புதிய அரசமைப்புக்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், தற்போது அவை அனைத்தும் கிடப்பிலே போடப்பட்டுள்ளது.

1988ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்துக்குப் பிற்பாடு கடந்த 30 ஆண்டுகளாக புதிய அரசமைப்பு தொடர்பாக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் விளைவாக பல்வேறு தீர்வுத் திட்டங்கள் முன்மொழியப்பட்டன. ஆனால், அவற்றுள் எதுவும் முன்னெடுத்துச் செல்லப்படவில்லை.

எனவே, தற்போது நாட்டுக்கு முக்கிய தேவையாக உள்ளது ஒரு அரச தலைவர் தேர்தல் அல்ல மாறாக ஒரு புதிய அரசமைப்பே ஆகும் என்று கூறியுள்ளார். (ஒ.5,22)

உண்மையான...

கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குடும்ப ஆட்சியை ஏற்படுத்த வேண்டிய தேவை ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடையாது. ஐக்கிய தேசியக் கட்சி மக்கள் ஆணையை மதிக்கும் வேட்பாளரையே தொடர்ந்து களமிறக்கியுள்ளது. இந்த ஜனநாயக பொதுகொள்கையே இனியும் தொடரும்.

நாட்டு மக்களுக்கும், கட்சிக்கும் சேவையாற்றிய அமைச்சர் சஜித் பிரேமதாசவை அரச தலைவராக்குவதே எமது பிரதான நோக்கமாகக் காணப்படுகின்றது. இதற்காக முழு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

அவரை வெற்றிபெறச் செய்ய நாம் எந்நிலைக்கும் செல்லத்தயார். நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் ஜனநாயக மிக்க அரசு நிச்சயம் ஐக்கிய தேசியக் கட்சியால் உருவாக்கப்படும் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது - என்றார். (ஒ.5,22)

கைகளில்...

எதிர்க்கட்சியில் இருந்த காலத்தில் உண்மையில் என்ன கற்றுக்கொண்டார் என்ற பயங்கரமான உண்மையை இன்று நான் உணர்ந்தேன். தனது குடும்பத்துக்கு அதிக அதிகாரங்களைக் கொடுத்தார் என்று அவர் உணரவில்லை. தனது குடும்பத்துக்குப் போதுமான அதிகாரத்தை வழங்கவில்லை என்று அவர் தெளிவாக நம்புகிறார்.

அவரது சகாக்கள் பல மில்லியன் ரூபா பொதுப் பணத்தை கொள்ளையிட்டதை அவர் உணரவில்லை. இன்னமும் பால் மிச்சம் இருப்பதாக அவர் நம்புகிறார். இந்த நாட்டை அதிகம் பயமுறுத்தியதாக அவர் உணரவில்லை. இந்த நாட்டை போதுமான அளவு பயமுறுத்தவில்லை என்று அவர் தெளிவாக நம்புகிறார்.

நீதித்துறையின் சுதந்திரத்தை அதிகமாக அச்சுறுத்தியதாக அவர் கவலைப்படவில்லை. நீதித்துறையில் எந்தவொரு சுதந்திரத்தையும் அனுமதித்திருக்கக் கூடாது என்று நம்புகிறார்.

பிரகீத் எக்னெலிகொட காணாமல்ஆக்கப்பட்டது, லசந்த விக்ரமதுங்க கொலை, கீத் நொயார் மற்றும் எண்ணற்ற ஊடகவியலாளர்களை கடத்தி சித்திரவதை செய்தது குறித்து அவர் வருத்தப்படவில்லை. மீதமுள்ள எந்தவொரு சுதந்திர ஊடகவியலாளரும் அதை அறிந்து கொள்ள வேண்டும் என்றே அவர் விரும்புகிறார் என்றும் அந்த அறிக்கையில் கூறியுள்ளார். (ஒ.5)

முதுகெலும்புள்ளவரை...

பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் பயனாளிகளிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் உரையாற்றிய போதே தலைமை அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் அமைச்சர் சஜித் பிரேமதாசவும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

கால்பந்தாட்டத்தில் ஜெகமீட்பர் சாதித்தது

யாழ்ப்பணம், ஓக.13
சாவற்காட்டு கில்லறி விளையாட்டுக்கழகம் அருட் சகோதரன் கில்லறி ஜோசப்பின் 100ஆவது பிறந்த நாளைமுன்னிட்டும், கில்லறி விளையாட்டுக் கழகத்தின் 20ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நட்டாங்கண்டல் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
மற்றுமோர் ஆட்டத்தில் சாவற்காட்டு கில்லறி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென். லூட்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் இரண்டு அணிகளும் தலா 2 கோல்களைப் பதிவு செய்ததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (23)

சென். நியூஸ்ரார் கிண்ணத்தை சுவீகரித்தது

யாழ்ப்பாணம், ஓக.13
வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையிலான எவ். ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் சென். நியூஸ்ரார் விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.
இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெற்ற இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து துணைவி சென். நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வோர் கோலைப் பதிவு செய்ததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணி சார்பில் பரணிதரன், சென். நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி சார்பில் லுகிர்தன் கோலைப் பதிவு செய்தனர். வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்கு சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் 5:4 என்ற கோல் கணக்கில் சென். நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (23)

கூடைப்பந்தாட்டத்தில்

சென்றலைட்ஸ் அணி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஓக.13
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 100ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று கிண்ணம் வென்றது.
பழைய பூங்காவில் அமைந்துள்ள கூடைப்பந்தாட்டத்திடலில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சென்ற லைட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் சென்ற லைட்ஸ் விளையாட்டுக் கழக அணி 68:42 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. இதில் ஆட்டநாயனாக ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி வீரர் சர்மிலன் தெரிவு செய்யப்பட்டார். தொடர் ஆட்ட நாயகனாக சென்ற லைட்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் துவாரகன் தெரிவானார்.
மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே. கே. எஸ். விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 61 :45 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)

'ஏபி' வி.க. அணி அரையிறுதிக்குள்

யாழ்ப்பாணம், ஓக.13
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 100ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையிலான 10 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட கடினப்பந்து துடுப்பாட்டத் தொடரில் 'ஏபி' விளையாட்டுக் கழக அணி 32 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் நேற்று தீங்கட் கிழமை இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் 'ஏபி' விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி துடுப்பாட்டக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய 'ஏபி' விளையாட்டுக்கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 111 ஓட்டங்களைக் குவித்தது.
அணி சார்பில் அதித்தன் 22 ஓட்டங்களையும், ராகுலன் 18 ஓட்டங்களையும், லிங்கநாதன் 15 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் சுரேந்திரன், சுரேஸ் ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய திருநெல்வேலி துடுப்பாட்டக்கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 78 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பந்து வீச்சில் உத்தமன் 4 இலக்குகளையும், நிரோசன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (23)

மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டுக் கழகத்தால்

கடினப்பந்து கிரிக்கெட் அணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன

மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டுக் கழகத்தால் இரண்டு இளம் கடினப்பந்து கிரிக்கெட் அணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.
மட்டக்களப்பில் கடினப்பந்து கிரிக்கெட் விளையாட்டை உயர்வடையச் செய்யும் நோக்குடன், மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தால் புலம்பெயர்ந்து வாழும் உறுப்பினர்களின் பங்களிப்புடன் 13 மற்றும் 15 வயதுக்குட்பட்ட இளம் கிரிக்கெட் வீரர்களைக் கொண்ட அணிகள் நேற்றுமுன்தினம், ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.
கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தின் தலைவர் சிவநாதன் தலைமையில், மட்டக்களப்பு புகையிரத நிலைய வீதியில் தனியார் விடுதி ஒன்றில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கை கிரிக்கெட் அணியின் முதல் டெஸ்ட் அணித் தலைவர் பந்துல வர்ணபுர முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு புதிய இரு அணிகளை ஆரம்பித்து வைத்ததுடன் இளம் வீரர்களுக்கு தனது ஆலோசனைகளையும் வழங்கினார்.
மேலும் இதன்போது பயிற்றுவிப்பாளர் நியமனங்களும் வழங்கப்பட்டது. அத்தோடு விளையாட்டு வீரர்களுக்கு காலணிகள், ஜேர்சிகளும் வழங்கப்பட்டன. (46)

லாராவை பின்தள்ளி கெய்ல் சாதனை

இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டியில் மேற்கிந்திய அணி வீரர் கிறிஸ் கெய்ல் சாதனை படைத்தார்.

இவர் 300ஆவது ஒரு நாள் போட்டியில் விளையாடி அதிகமான ஒருநாள் ஆட்டத்தில் பங்கேற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முதல் வீரர் எனும் பெருமையைப் பெற்றார். இதற்கு முன்னர் மேற்கிந்தியத்தீவுகளின் முன்னாள் வீரர் லாரா 299 போட்டிகள் விளையாடி இந்தச் சாதனைக்கு சொந்தக்காரராக இருந்தார். அதனை கெய்ல் முறியடித்தார்.

அதுமட்டுமல்லாமல் ஒரு நாள் போட்டியில் அதிக ஓட்டங்களைக் குவித்த மேற்கிந்தியத்தீவுகளின் வீரர் எனும் சாதனையையும் படைத்தார். இதற்கு முன்னர், மேற்கிந்தியத்தீவுகளின் அணி முன்னாள் வீரர் பிரையன் லாரா 10 ஆயிரத்து 405 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். அந்தச் சாதனையையும் கெய்ல் முறியடித்து 10 ஆயிரத்து 408 ஓட்டங்களைப் பெற்றார்.

டக்வேர்த் லூயிஸால் இந்திய அணி வெற்றி

இந்திய அணி மேற்கிந்தியத்தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. 5ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் முதலாவது போட்டி மழை காரணமாகக் கைவிப்பட்டது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரண்டாவது போட்டியில் இந்திய அணி டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 59 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான தவான், ரோகித் மேற்கிந்திய பந்து வீச்சாளர்களின் பந்துகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் ஆட்டமிழந்தனர். கோக்லி இணைந்து அணியை தூக்கி நிறுத்தினார். அவர் சதம் கடந்து அசத்தினார். அவருக்கு ஸ்ரேயர்ஸ் அய்யரும் 71ஓட்டங்களைப் பெற்று கைகொடுக்க அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 279 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் பிரித்வைட் அதிகபட்சமாக 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

280 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனக் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கிறிஸ் கெய்ல் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். எனினும் அவர் 9 ஓட்டங்களைப் பெற்ற போது மேற்கிந்திய முன்னாள் வீரர் லாராவின் சாதனையை முறியடித்தார்.

அணியன் இரண்டாவது இலக்கு இழக்கப்பட்போது மழை குறுக்கிட்டது. இதன் காரணமாக ஆட்டம் தடைப்பட்டது. இதனால் 46 பந்துப்பரிமாற்றங்களாகக்குறைக்கப்பட்டு270ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. அணி சார்பில் லூயிஸ் சிறப்பாக ஆடி 65 ஓட்டங்களைப் பெற்றார். போரன் தனது அரைச் சதத்தைத் தவற விட்டு ஆட்டமிழந்தார். ஏனைய வீரர்கள் எவரும் பெரிதாக சோபிக்காததால் அணி 42 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 210 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

பந்து வீச்சில் புவனேஸ்குமார் அசத்தியிருந்தார். அவர் 4 இலக்குகளைச் சரித்தார். முகமட் சமி, குல்தீப் யாதவ் ஆகியோர் தலா 2 இரண்டு இலக்குகளைக் கைப்பற்றி அணியின் வெற்றிக்கு வழி வகுத்தனர். ஆட்டநாயகனாக இந்திய அணி வீரர் கோக்லி தெரிவு செய்யப்பட்டார்.

சென்றலைட்ஸ் வி.க. அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம். ஓக.13

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 100ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையிலான 10 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட கடினப்பந்து துடுப்பாட்டத் தொடரில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி 15 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் வின்ங்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் களமிறங்கிய சென்றலைட்ஸ் விளையட்டுக் கழக அணி 9.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றது.

அணி சார்பில் பிரியலக்சன் 27 ஓட்டங்களையும், ஜெனோசன் 13 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் மைக்கல், எட்வின் ஆகியோர் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய வின்ங்ஸ் விளையாட்டுக் கழக அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 72 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

அணி சார்பில் எட்வின் 23 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்து வீச்சில் ஜெரிக்துசந், தசோபன் ஆகியோர் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர். (23)

ஜொலிஸ்ரார் வி.க. அணி அரையிறுதிக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம். ஓக.13

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 100ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையிலான 10 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட கடினப்பந்து துடுப்பாட்டத் தொடரில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 6 இலக்குகளால் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஒல் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஒல் கோல்ட்ஸ் விளையட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றது.

அணி சார்பில் பிரியலக்சன் 54 ஓட்டங்களையும், திலீபன் 15 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் வாமணன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 8.5 பந்துப்பரிமாற்றங்களில் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 98 ஓட்டங்களைப் பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

இதில் ஜனார்த்தனன் 35 ஓட்டங்களையும், வாமணன் 16 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் பிரியலக்சன் 3 இலக்குகளையும், நிரோசன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (23)

மூளாய் விக்டோரி அணி அரையிறுதிக்குத் தகுதி

இலங்கை கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சங்கத்தின் பிரிவு 3க்கான காலிறுதிப் போட்டியில் மூளாய் விக்டோரி விளையாட்டுக்கழக அணி 3 இலக்குகளால் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சங்கத்தின் பிரிவு 3க்கான காலிறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் மூளாய் விக்டோறி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து றைட்டோன் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய றைட்டோன் விளையாட்டுக்கழக அணி 38.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 141ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் உதயசாந் 28 ஓட்டங்களையும், திருமால் 24 ஓட்டங்களையும், சதீஸ்காந் 20 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் பத்மப்பிரியன் 3 இலக்குகளையும், ஜங்கரன், பிரணவன், கதியோன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மூளாய் விக்டோறி அணி 37 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அணி சார்பில் கதியோன் 41 ஓட்டங்களையும், டானியல் 29 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் ரவிராஜ் 3 இலக்குகளைக் கைப்பற்றினார். (422)

அரையிறுதிக்குள் கே.ஸி.ஸி.ஸி.

யாழ்ப்பாணம், ஓக.13

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 100ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையிலான 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கடினப்பந்து துடுப்பாட்டத் தொடரில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணி 6 இலக்குகளால் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் நேற்று இடம் பெற்ற காலிறுதியாட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது.

அணி சார்பில் டேவிற் பிரசாந் 12 ஓட்டங்களையும், கணமிர்தன், மதுஷன் ஆகியோர் 11 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சாம்பவன், துசியந்தன் ஆகியோர் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி 8.4 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அணி சார்பில் ஜனுதாஸ் 36 ஓட்டங்களையும், பானுசன் 14 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் டக்சன் 2 இலக்குகளையும், லோகதீஸ்வர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (23)

ஞானம்ஸ் அணி கிண்ணம் வென்றது

கிளிநொச்சி முறிப்பு உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்திய கிரிக்கெட் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணி கிண்ணம் வென்றது. வடமாகாண ரீதியில் நடத்திய கிரிக்கெட் போட்டியில் 102 அணிகள் பங்கேற்றன.

மின்னொளியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து விசுவமடு நண்பர்கள் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 53 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய விசுவமடு நண்பர்கள் அணி 5 பந்துப்பரிமாற்றங்களில் 29 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 24 ஓட்டங்களால் வெற்றியைத் தவற விட்டது. (422)

SLAS
Open/ Limited
விஷேட வகுப்பு
புதன் (14/8)
9.00-3.30
IQ And GK
த.தவசேகர்
மாலை நேர SLAS வகுப்பும் நடைபெறுகின்றன
076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி
பட்டப்பழப்புக்கள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதியில் பல் நிலையத்திலிருந்து 100m தூரத்தில்)

வீட்டுப்பணிப்பெண் தேவை
யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து வீட்டு மற்றும் சமையல் வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளிற்கு :-077 123 5630
CS27346(16/17)

24 ஆம் ஆண்டு நினைவலைகள்

வையகத்துள் உறைமுகம்
19 . 01 . 1935
தெய்வத்துள் சங்கமம்
08 . 08 . 1995
அமரர் தம்பிராஜா கனகரட்ணராஜா
திதி:- திரயோதசி (13.08.2019)
பாசத்தின் திருவுருவமாய் பண்பின் உறைவிடமாய்
எங்களுக்கு எல்லாம் அன்பு காட்டி அரவணைத்த எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து இருபத்தி நான்கு ஆண்டுகள் அல்ல
எத்தனை ஆண்டுகள் தான் சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களை விட்டு என்றும் மாறாதையா?
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்...
சுந்தையடி, மானிப்பாய்.
அன்பு மனைவி, மைத்துனர்கள், மைத்துனிகள், சகோதரிகள், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 12 . 09 . 1953
மறைவு 14 . 07 . 2019
கடந்த (14.07.2019) ஞாயிற்றுக்கிழமை அமரத்துவமடைந்த எமது குடும்பத்தலைவர்
அமரர்
விஜயசுந்தரம் ஜீவன்குமார்
எமைப் பிரிந்த போது அவரின் இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், அயலவர்கள் நண்பர்கள் மற்றும் மலர்வளையங்கள் மூலமாகவும் தொலைபேசி மூலமாகவும் அஞ்சலிகளையும் அனுதாபங்களையும் தெரிவித்து எமது துயரில் பங்குபற்றியோர் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தி பெற மனமுருகி பிரார்த்திக்கின்றோம்.
134, தங்கவில்லா, மானிப்பாய்.
குடும்பத்தினர்.
(CS 27332)(14.17)

SLAS (Open/ Ltd) கருத்தரங்கு
P. கமல்தாசன் J.P,SLPS
மற்றும் துறைசார் வளவாளர்கள்
14.08.2019 புதன் - 9am - 4.00 pm
P.கமல்தாசன் (SLPS) - பொதுவிவேகம்
R.C.அமல்ராஜ் (SLAS) - பொதுநிர்வாக விடய ஆய்வு
V.தினேஷ் (SLTES) - முகாமைத்துவ உளச்சார்பு
மற்றும் பிரதி சனிக்கிழமைகளில்
நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
077 111 6739, 076 166 1986,
077 386 7222, 077 977 9700
CS27344

சிங்களம்
G.C.E O/L (இரண்டாம் மொழி)
PAST PAPER CLASS
ஆரம்பம்- 17.08.2019 (சனிக்கிழமை)
சனி மற்றும் ஞாயிறு நாட்களில்
இரண்டு பிரிவுகளாக
பி.ப 2.00 - 3.00 வரை
பி.ப 6.00 - 7.00 வரை
ஸ்ரீமாஸ்டர்
எவரும் பங்குபற்றலாம்
உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்
விபரங்களுக்கு 077 703 3729
ஸ்ரீ இரண்டாம் மொழி கல்வி நிறுவகம்
164, இராமநாதன் வீதி,
(Science Faculty gate முன்பாக மேல் மாடியில்)

மரண அறிவித்தல்

காத்திகேசு விஸ்வலிங்கம்

மந்துவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காத்திகேசு விஸ்வலிங்கம் 11.08.2019 ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காத்திகேசு - சேதுப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான திருவம்பலம் - சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும், ராஜபூபதியின் அன்புக் கணவரும், மஞ்சுளா, கிஸ்ணரூபன், விஜிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், அவராஜிதன், பகிரதன், ஜெகயோதி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தெய்வானைப்பிள்ளை, சின்னத்தம்பி, இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரரும், செல்லம்மா, பாக்கியம், பூமணி, ஜெயகுமார், கமலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், தபோதன கிருஸ்ணன், கௌசலாதேவி, நிர்மலாதேவி, சறோஜினிதேவி, தனபாலசிங்கம், கிருபாகரன், கலைச்செல்வன், கலைரஞ்சன், கலைசெல்வி, கலைவாணி, சுகுணகுமாரி, சியாமலா, சிந்தியா, சிரேந்திரகுமார், சிரேஸ்குமார், சிவகுமார் ஆகியோரின் அன்புப் பேரனும், கமலரூபனின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2019) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேம்பிராய் சந்தி,
வறணி றோட், மந்துவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

076 9010573

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.08.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.